# flex அருள்

ஜூலை 2016 கடவுளை வணங்குவோம் அருளினை பெறுவோம் விலை ரூ.50

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 68





# 20th Anniversary

Special Promotion for This Year.



# Brintha

## Herbal Beauty Care Centre

Bridal Dressing,
Photo & Videography
Package.

Brintha salon

Tel : 011 2593693, 011 2553028, 077 6331257




317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06.
T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype : little.asia.emporium

73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593
F: +94 11 2391745 | E: info@littleasiasilk.com
www.littleasiasilk.com | Skype: little.asia.silk

# இல்லங்கள், ஆலயங்கள் தோறும்

# தெய்வீக மணம் கமழ...

# விஷ்கா

## ஊதுபத்திகள்

100% NATURAL HANDMADE AYURVEDIC

**6 நறுமணங்களில்!**

Vishmaya
Ice blue
Swaroopa
Gomeda
Himani
Ambara




NEW ARRIVAL!

Distributed by:

**Visgha**
ARTS AND CRAFTS

இல.142 1/1, செட்டியார் தெரு, கொழும்பு 11.

Manufactured by: Marhaba IMPEX Bangalore - India

தொ.பே. 233 6192, 244 5776 **Hotline: 0772 774 776 (Rayen)**

visgha.rayen@yahoo.com rayen.visgha www.visgha.net


7STORIES
Ranjanas
New
Sarees
Collection
Wedding sarees
Homecoming sarees
Going away sarees
Western bridal dress
Fashion / Designer sarees
Office sarees
Cholis & Salwars
No.318, Galle Road, Colombo 4.
Hotline 011 2 590 070
Find us on: facebook
www.7stories.lk
AMPLE PARKING
9AM-8.30PM
BEST SERVICE
Rs.
BEST PRICE
SUPERMARKET
ATM AVAILABLE

49 ஆண்டுகளாக நன்மதிப்பைப் பெற்ற




தயாரிப்பாளர்கள்

**Mcsons Organics (Pvt) Ltd.**
672/3, Galle Road, Off Mayura Mw,
Ratmalana.
Phone: 2636818

ஏக விநியோகஸ்தர்கள்
பிரபா டிரேடிங் கம்பனி
31, கபோஸ் லேன், கொழும்பு 11.
Tel: 2329426, 2422750

Tel: 263 6818 Shop: 232 9426 | Fax: 263 5399 | Email: mcsons@sltnet.lk

# ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்
# உள்ளடக்கம்


07 எமது நோக்கம்
09 இதயம் தொட்ட பழமொழி
10-11 ஆடி மாதமும் அதன் சிறப்புகளும்
12 கனவுகள் தரும் பலன்கள்
15 இந்து தர்ம சாஸ்திரம்
29 சிட்னி முருகன் கோயில்/இலண்டன் சிவன் கோயில்
31 தென்முகக் கடவுள்
32 விபூதி இடும் முறை
33-34 இறைவன் பவனி வரும் இசை
36 அரோகரா
39 ஷீர்டி சாயிபாபா
40-41 சகல செல்வங்களும் தரும் ஸ்ரீ மகாலக்ஷ்மி
42 யோகா கற்றுக்கொள்ளுங்கள்
43 அருள் மொழிகள்
44-46 முருகனின் அருள் பெற்றோர்
46 வளமுடன் வாழ்
51 இதுதான் உண்மை!
52 என் இனிய கால்கள்
53 திருமண பொருத்தம்
54 வளமான வாழ்விற்கு ∴ பெங் ஷுய்
55 மங்கள ஆரத்தி
56 சைவநெறி வினா-விடை தொகுப்பு தரம் 8
57 திருக்குறள் தெளிவு
58 பெண்கள் செய்ய வேண்டியதும்...
61-62 முருகப்பெருமானுக்கு மட்டும் காவடி
63-64 அங்க தேவதைகள் அளிக்கும் அரண்
64-65 தட்சிணாமூர்த்தியின் தத்துவம்
73 மன்னா ஹாஹ்...ஹா!
74-76 பஞ்சாங்கம் / விரதங்கள்
79-82 ராசி பலன்கள்
85-90 பக்திக் கதைகள்



**விளம்பரக் கட்டணங்கள்**


| | |
|---|---|
| முழுப்பக்கம் (வர்ணம்) | ரூபா 6,000/= |
| முழுப்பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (வர்ணம்) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 3,000/= |
| 1 BOX (கறுப்பு, வெள்ளை) | ரூபா 500/= |
| 1வது, 2வது, 3வது அல்லது கடைசி இரு பக்கங்களைக் கொண்ட வர்ண விளம்பரம் | ரூபா 15,000/= |

மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள்: 0777 614 186





08 இந்து மத அர்த்தங்கள்


16-18 சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்






21-28 அற்புத ஆலயங்கள்





66-68 காலணி சுமந்த கண்ணன்


UPCOUNTRY DTH ENTERPRISES
Recharge & Activation
dishtv
VIDEOCON d2h
airtel digital TV
SUN DIRECT
TATA Sky
airtel
HUTCH
Dialog
Sri Lanka Telecom Mobitel
etisalat
PHOTO COPY, FAX, LAMINATION, BINDING,
STATIONARY, PRINTOUT, MOBILE & ACCESSORIES
No.198, Galle Road, Wellawatte, Colombo 06
www.upcountrydth.com / email: upcountrydth@gmail.com
Tel: 0752965690 / 0778202424


Annai
HOME DECOR
Curtain & Cushion Materials and All type of
Curtaining, Cushioning and Tailoring Etc.
23-A, 42nd Lane, Wellawatte.
Tel : 0774 441 298, 0757 734 548, 2 580 668


Jayalalitha
Jewellery
No. 65, Sea Steet, Colombo 11
Tel: 011-2422548, 011-5624178


Emmee
Collection
DEALERS IN:
Quality Textiles &
Readymade Garments
24A, Galle Road,
Wellawatte.
Tel: 2595567


WORLD TEL COMMUNICATION
Net Calls, Local Calls, Postal works,
Stamps, Courier Service to all Country
Document Fast Parcel Service
Photo Copy & Printout
No . 298, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel : 0112 504 236


Hailai
Fashion Mall
Dressing is an Art
No. 126,
Galle Road,
Wellawatte.
011 255 36 78


Sri Suriyas
Jewellers
57, Sea Street, Colombo 11. Tel: 011 2447358
Email: krishna.suriyas@gmail.com
www.srisuriyasjewellers.com


K
Siva Jewellers
Gold Jewellery Buying and Selling Centre
NO. 177/4, Sea Street, Colombo 11.
011 244 72 72 | 077 611 88 31

# எமது நோக்கம்



"யாரை எங்கே வைப்பது என்பது யாருக்கும் புரியல" என்ற வரிகள் உண்மையில் எவ்வளவு அர்த்தமுள்ளவை. ஓர் அரசருக்கு நாள் தோறும் பணிபுரியும் செம்மணி என்ற சிகை அலங்கார நிபுணருக்கும், காவல் புரியும் சேனாதிபதிக்கும் கருத்து வேறுபாடு தோன்றி விட்டது. அரசர் சேனாதிபதியை நம்புவதை விடவும் சிகை அலங்கார நிபுணரை அதிகம் நம்பினார். தம் நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சனைகள் அரண்மனைச் செலவுகள் பற்றியெல்லாம் அவரிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

அதிக செலவு படையால் ஆகிறது என்று மன்னர் வருந்தியதும் "மன்னருக்கு காவலுக்கு நூறு நாய்கள் வளர்த்தால் போதும். எதற்கு இவ்வளவு வீண் செலவு... பெரும்படை... அதற்கொரு சேனாதிபதி... எல்லாவற்றையும் குறைத்துவிடலாம்" என்று இவர் யோசனை கூறினார். மன்னரும் அதை உடனே நிறைவேற்ற சேனாதிபதிக்கு வேலை போய்விட்டது.

ஒரு வருடத்தில் எதிரி மன்னர் இதைத் தெரிந்து கொண்டு பெரும் படையுடன் அரண்மனையைத் தாக்கிய போது காவல் நாய்கள் பயந்து ஓடிவிட்டன. மன்னரும், சிகை அலங்கார நிபுணரும் எப்படியோ தப்பி அண்டை நாட்டில் அடையாளம் தெரியாதபடி நுழைந்துவிட்டனர்.

அங்கே எப்படி பிழைப்பது? எப்படி சாப்பிடுவதென்று மன்னர் புலம்ப "கவலை படாதீர்கள் என் கைவசம் இன்னும் ஒரு கத்திரி இருக்கிறது. தொழிலை உங்களுக்கும் கற்றுத் தருகிறேன் இருவரும் பிழைத்துக் கொள்ளலாம் என்றாரே அந்த "செம்மறி" நிபுணர். மன்னர் சேனாதிபதியை மதித்திருந்தால் நாட்டை காப்பாற்றி இருக்கலாம் அல்லவா?

எல்லோரையும் மதிப்பது அவசியம்... ஆனாலும் எந்த விஷயத்தில் யாருடைய இடம் இது என்பதில் தெளிவு அவசியம்.

கே. லோகேந்திரன்...

- ஆசிரியர்

நல்வழி அருள்வழி.. அதுவே நம்வழி!





கௌரி

ஜுவலர்ஸ்

NO. 4/A, Fussels Lane, Galle Road, Wellawatte.
(Close to Wellawatte Market)

Tel: 2360132
Fax: 0094 1 2503471
Mobile: 077 5415526





# இந்து மத அர்த்தங்கள்

### பதினாறு வகைப்பேறுகள்

1.புகழ் 2.கல்வி 3.வலிமை 4.வெற்றி 5.நன்மக்கள் 6. பொன் 7. நெல் 8. நல்லூழ் 9.நுகர்ச்சி 10.அறிவு 11.அழகு 12.நோயின்மை 13.வாழ்நாள் 14.பெருமை 15.இளமை 16.துணிவு (பல்வேறு முறைகளில் இப்பேறுகளைச் சொல்லுவதும் உண்டு)

### திதிகள் 15ன் பெயர்கள்

1.பிரதமை 2.துவிதியை 3.திருதியை 4.சதுர்த்தி 5.பஞ்சமி 6.சஷ்டி 7.சப்தமி 8.அஷ்டமி 9.நவமி 10.தசமி 11.ஏகாதசி 12.துவாதசி 13.திரயோதசி 14.சதுர்த்தசி 15.அமாவாசை (அ) பௌர்ணமி

### நவபாஷாணங்கள்

1.சாதிலிங்கம் 2.மனோசிலை 3.காந்தம் 4.அரிதாரம் 5.கந்தகம் 6.ரசகற்பூரம் 7.வெள்ளைப் பாஷாணம் (வெடியுப்பு) 8.தொட்டி பாஷாணம் 9.செந்தூரம் என்பன.

'போகர்' என்னும் சித்தர் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இவரே இந்த நவ பாஷாணங்களைக் கொண்டு பழனியாண்டவர் மூல விக்கிரகத்தைச் செய்து வைத்தவர்.

### நவமுகில்கள்

1.ஆவர்த்தம் 2.சம்வர்த்தம் 3.புஷ்கலம் 4.துரோணம் 5.காளம் 6.நீலம் 7.வாருணம் 8.வாழிவம் 9.தமம் ஆகியவையாகும்.

### நவ நிதிகள்

1.கச்சபநிதி (கச்சப்பம்மை) 2.கற்பநிதி 3.சங்கநிதி 4.பதுமநிதி 5.நந்தநிதி 6.நீலநிதி 7.மஹாநிதி 8.மஹாமதுநிதி 9.முகுந்த நிதி போன்றவையாகும்.

இவை குபேரனிடமுள்ள நவநிதிகளாம்.

### நவ நாகங்கள்

1.அனந்தன் 2.ஆதிசேஷன் 3.கார்க் கோடகன் 4.குளிகன் 5.சங்கபாலன் 6.தக்ஷன் 7.பதுமன் 8.மகாபதுமன் 9.வாசுகி

### நவதானியங்கள்

1.உழுந்து (உளுந்து) 2.எள் 3.கடலை 4.கொள்ளு 5.சாமை 6.தினை 7.துவரை 8.பயறு 9.நெல் ஆகியவையாகும்.

### ஒரு கல்பம்

ஒரு கல்பம் என்பது ஒரு கால அளவாகும். மாதம், வருடம், யுகம் என்பது போல கல்பம் ஒரு பெரிய கால அளவாகும். மனிதனின் கணக்குப்படி 430 கோடி ஆண்டுகள் பிரம்மாவின் ஒரு பகலுக்குச் சமமாகும். இன்னொரு 430 கோடி ஆண்டுகள் ஒரு இரவாகும். ஆக 860 கோடி மனித ஆண்டுகள் ஒரு இரவாகும். ஆக 860 கோடி மனித ஆண்டுகள் பிரம்மாவின் ஒரு நாளுக்குச் சமம். இப்படி 30 பிரம்ம நாட்கள் சேர்ந்தது ஒரு பிரம்மமாதம். இப்படிச் சேர்ந்த 12 மாதங்கள் கொண்டது ஒரு பிரம்ம ஆண்டு. இப்படிச் சேர்ந்த 100 ஆண்டுகள் ஒரு கல்பம் எனப்படுகிறது. ஆக 430,00,00,000x2x30x12x100 என்ன வருகிறதோ அத்தனை மனித ஆண்டுகள் ஒரு கல்பத்திற்குச் சமம். அதாவது 3 கோடியே 9 லட்சத்து 60 ஆயிரம் கோடி ஆண்டுகள் கொண்டது ஒரு கல்பமாகும்.


### திருவாதிரை நாளில் 'களி'

திருவாதிரை நாளன்று கோயில்களிலும் வீடுகளிலும் களி என்னும் உணவு வகை ஒன்றைச் செய்வதனைப் பார்க்கிறோம். இது 'திருவாதிரை களி' என்றே வழங்கப்படுகிறது. தவிர 'திருவாதிரை ஒருவா களி' என்ற பழமொழியும் வழங்குவது உண்டு. ஒருவா களி என்பது நீங்காத மகிழ்ச்சி என்று பொருள்படும். திருவாதிரை யன்று நடராசப் பெருமானை வணங்குவது மகிழ்ச்சியை உண்டாக்கும் என்பது அதன் பொருள்.

ஆனால் நடைமுறையில் அதன் பொருள் மாறி, அந்த தினத்தில் களி செய்து உண்பது என வழங்கப்படுகிறது.

தொடரும்

# இதயம் தொட்ட பழமொழி




**"சேராத இடத்தில் சேர்ந்தால் வராத துன்பம் வரும்!"** என்பது ஒரு பழமொழி. ஒரு மனி தனுக்குத் தேவை மதிப்பும், மரியாதையும் தான். தெருவில் செல்லும் போது சிலர் கூப்பிட்டு பேசுபவர்களாக இருப்பார்கள். சிலர் கும்பிட்டு பேசுவர்களாக இருப்பார்கள்.

பள்ளி பருவத்தில் விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கொண்டிருப்போம். படித்து முடித்ததும் வேலை தேடி கொண்டிருப்போம் படித்து முடித்ததும் வேலை தேடி அலைவோம். வேலை கிடைத்தும் மாலையிட மங்கையர்களைத் தேடி மணவாளர்களும், மணவாளர்களைத் தேடி மங்கையர்களும் அலை மோதுவர். திருமணம் முடிந்ததும் ஒரு நிறைவு ஏற்படுகிறது. பிறகு குழந்தை குட்டி என்று வரும் போது, சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களை நாம் ஒப்பிட்டு பார்க்கிறோம். அவர்களைப் போல, நாமும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களாகவும், கௌரவம் மிக்கவர்களாகவும் வாழ எப்படி எல்லாம் முயற்சி செய்யலாம். யார் மூலம் நம் எண்ணங்களை வெளிப்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து நண்பர்களை தேர்ந்தெடுக்கிறோம். சில புதியவர்களின் அறிமுகங்களும் நமக்கு கிடைக்கின்றன. அப்படி நமக்கு கிடைக்கும் நண்பர்களில், எண்ணிக்கை பெரிதில்லை, எத்தனை பேர் உத்தமமாக இருக்கின்றார்கள் என்பது தான் முக்கியம். ஒரு சிலர் நேர் வழியிலேயே சென்று முன்னேற்றம் காண யோசனை சொல்வார். ஓர் சிலர் எப்படி சம்பாதித்தால் என்ன? பணம் தானே முக்கியம் "ஈட்டி எட்டியவரை பாயும்!" "பணம் பாதாளம் வரை பாயும்!" அல்லவா? எனவே, அந்த பணத்தை மிக குறுகிய காலத்துக்குள் குறுகிய வழியில் சேர்க்க சில மனிதர்கள் யோசனை சொல்வர். அப்படிப்பட்டவர்களோடு பழக்கம் வைத்துக் கொண்டால், அடுத்த கணமே உங்களுக்கு துன்பங்கள் வந்து சேரும் என்பதை வலியுறுத்தியே, "சேராத இடத்தில் சேர்ந்தால் வராத துன்பம் வரும்!" என்ற பழமொழியை நமது முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

தீய பழக்கம் உள்ளவர்களோடு நாமும் சேர்ந்து பழகினால் நமக்கும் அந்த தீய பழக்கம் தொற்றிக் கொள்ளும். அதன் விளைவாக, நாமும் ஏதாவது தவறான காரியங்களுக்கு உடந்தையாக இருந்தால், காரியம் நடக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தாலும், பிறகு அதை கண்டுபிடிக்கிற போது, துயரங்கள் தொடர்கதையாக வந்து விடும். இதைதான் கவியாக கண்ணதாசன் சொன்னார், "பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால், எல்லாம் சௌக்கியமே! கருடன் சென்னது. அதில் அர்த்தம் உள்ளது!"

எனவே சேர வேண்டிய இடத்தில் நாம் சேர்ந்திருந்தால், இன்பம் வரும். எனவே தான், "சேராத இடத்தில் சேர்ந்தால் வராத துன்பம் வரும்!" என்று சொல்லி வைத்தார்கள்.





# ஆடி மாதமும் அதன் சிறப்புகளும்

தமிழ் மாதங்களில் ஆடி மாதம் விழாக்களுக்கும், விரதங்களுக்கும் பிரசித்தி பெற்றதாகும். மற்றைய தமிழ் மாதங்களை போல் அல்லாமல் ஆடி மாதப் பிறப்பே ஒரு புண்ணிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதத்தை பண்டிகைகளை அழைக்கும் மாதம் என்பர்.

ஆடி மாதம் அம்மன் மாதம் என்றும் சக்தி மாதம் என்றும் போற்றப்படுகிறது. இந்த மாதத்தில் ஈஸ்வரனின் சக்தி அன்னை லோகநாயகியின் சக்திக்குள் ஐக்கியமாகிவிடுகிறது. இம்மாதத்தில் அம்மன் வழிப்பாடு மிகவும் சிறப்பானது.


ஆடி மாதத்தில் அம்மன் ஆலயங்களில் தேர்திருவிழா, தீ மிதித்தல், பால்குட பவனி, அன்னதானம். கூழ் காய்ச்சி ஊற்றுதல் என்பன இடம்பெறும். இந்நாட்களில் பக்தர்களின் கூட்டம் ஆலயத்தில் மிகவும் காணப்படும். அதிலும் பெண்களின் கூட்டம் மிகையாக காணப்படும்.

அம்மனுக்கு உகந்த நாட்கள் செவ்வாயும், வெள்ளியும் அதனோடு ஆடியும் சேர்ந்து கொண்டால் இவ்விரண்டு நாட்களுக்கும் சிறப்புத் தன்மை அதிகமாகி விடுகிறது. இந்த ஆடி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து, மஞ்சள் பூசி குளித்து தூய ஆடை அணிந்து அம்மனை வழிபட்டு வர கேட்ட வரம் தருவாள் லோக மாதாவான உமையவள்.

ஆடி 18ம் பெருக்கன்று புதுமணப் தம்பதிகள் ஆடிப் பெருக்கு விழாவாக கொண்டாடுகின்றார்கள் மணமகனின் தாலிபிரித்து கட்டும் நிகழ்வும் இடம்பெறும். அதனோடு அறுசுவை உணவுகளை எடுத்துக் கொண்டு நீர் நிலைகளுக்கு சென்று


பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான ஆன்மிக கேள்வி-பதில் போட்டி!

PETER STORES
FASHIONABLE HOUSE FOR QUALITY TEXTILES
201, Galle Road, Wellawatte.
Tel : 2586066



பைரவருக்கு மறுபெயர் என்ன?

- திகம்பரர்
- திரிபுரர்
- சுந்தரர்

1st July-18th July
Call Monday-Friday
From 9am - 5pm

Call Now & Win School Uniform

FLEX Publications - 0778 335 552


உற்றார், உறவினர் சகிதம் பகிர்ந்துண்டு மகிழ்வர். அன்று நீர் நிலைகளில் (நதிகளில்) பூரணப் பிரவாகம் பொங்கியிருக்கும். புதுவெள்ளம் வந்து பழைய அழுக்குகளை நீக்கிவிடும். இதனால் மக்கள் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பிரவாகம் ஊற்றெடுக்கும். மேலும் வேளான் பெருமக்கள் "ஆடிப்பட்டம் தேடி விதை" என்ற பழ மொழிக்கேற்ப விதை தெளிக்கும் பணிகளிலும் ஈடுபடுவர்.

ஆடி மாதத்தில் வரும் ஆடி அமாவாசை பிதுர் வழிப்பாட்டுக்கு உரிய தினமாகும். ஆடி மாதம் என்பது தேவர்களுடைய மாலை நேரமாகும் அதுவே நாம் நமது முன்னோருக்கு பித்ரு காரியங்கள் அதாவது திதி கொடுத்து அவர்களை சந்தோசப்படுத்த ஏற்ற தருணம். அந்நாளில் அவர்களுக்கு பிடித்தமானவற்றை சமைத்து, படைத்து தானம் கொடுத்து வழிபட்டால் அவர்களின் பூரண ஆசிகளைப் பெறலாம்.

நம் நாட்டை பொறுத்தவரை ஆடிவேல் விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. கொழும்பு இந்து மக்களால் மிகவும் குதூகலமாகவும், கோலாகலமாகவும் கொண்டாடப்படுகிறது. முருகப் பெருமானை நினைத்து கொண்டாடப்படுவதாலும் வேல் எடுத்து தேர் திருவிழாவாக செய்யப்படுவதாலும் 'ஆடி வேல்' விழா என அழைக்கப்படுகிறது. இன மத பேதமின்றி இவ்விழா நான்கு தினங்களுக்கு சிறப்பாகவும், பக்தி சிரத்தையுடனும் அனுஷ்டிக்கப்படுகிறது.

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை*

இராமதூதன் ஸ்ரீ ஆஞ்சநேயன் பாதம்
இனிதுநாம் போற்றிடுவோம்! வரும்
இன்னலும் கவலையும் மறைந்தேதான் போயிடும்!
இன்பமே வாழ்வாயிடும்! பராக்
கிரமமே வாழ்வெலாம் கொண்டவன்! அரக்கரைக்
கிடுகிடுக்கச் செய்தவன்! நாமம்
கேட்டாலும் சொன்னாலும் உள்ளத்தில் பக்தியின்
கிளர்ச்சியைத் தந்தாள்பவன்! மனத்
தளர்ச்சியை வென்றாள்பவன்! - அந்த
(இராமதூதன் ஸ்ரீ ஆஞ்சநேயன் பாதம்)
வாயுவின் புத்திரன் அக்னி தேவனை
வாலிலே பற்ற வைத்தோர் அன்று
வைத்த தீ ஊரெலாம் நகரெலாம் பற்றவே
வலம்வந்த குமார தேவன் - நம்
தாயவள் சீதையைக் காணவே கடல்தாண்டும்
சாதனை செய்த வீரன்! மூலிகை
சஞ்சிவி பர்வத (ம்) மலையினைக் கைகளில்
தான்தூக்கிவந்த சூரன்! இராம
பக்தியே நிறைந்த தீரன் - (அந்த)
(இராமதூதன் ஸ்ரீ ஆஞ்சநேயன் பாதம்)








# கனவுகள் தரும் பலன்கள்

## புத்தகக் கனவுகள்

புத்தகங்களைக் கடையில் வாங்குவதாகக் கனவு கண்டால் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். புத்தகங்களை விற்பதாகக் கனவு கண்டால் நண்பர்கள் பிரிந்துவிடுவார்கள்.

புத்தகங்களைக் கிழித்துப் போடுவதாகக் கனவு கண்டால் குடும்பத்தில் பிரச்சனைகள் உருவாகும். புதிதாகப் புத்தகம் எழுதத் தொடங்குவது போலக் கனவு கண்டால் புதிய தொழிலில் ஈடுபாடு உண்டாகி, அத்தொழில் மேன்மை அடையும்.

கலைந்து கிடக்கும் நூல்களை முறையாகவும், வரிசையாகவும் அடுக்கி வைப்பதாகக் கனவு கண்டால் எல்லாவித வில்லங்களும் நீங்கும்.

### கனவில் பணம்

ரூபாய் நோட்டுக்கள் அல்லது நாணயங்கள் இவற்றைப் பார்ப்பதாகக் கனவு கண்டால், அல்லது எண்ணுவதாகக் கனவு கண்டால் செலவுகள் வரவைவிட அதிகமாக இருக்கும்.

பணத்தைப் பிறரிடமிருந்து பெற்றால் பணமுடை ஏற்படும். பிறருக்குக் கடன் வழங்குவது போல் கனவு கண்டால் தன இலாபம் உண்டாகும்.

பணம் ஓரிடத்தில் குவிந்து இருப்பதாகக் கனவு கண்டால் அதிர்ஷ்டங்களால் பணம் வரும், ரேஸ், லாட்டரி, போன்ற இனங்கள் மூலம் பணம் வரும். ரூபாய் நோட்டுக்களைக் கிழித்துப் போடுவதாகக் கனவு கண்டால் நிறையப் பணம் கிடைக்கும். நோட்டுகளை எண்ணி அடுக்கி வைப்பதாகக் கனவு கண்டால் வருவாய் உயரும். பணச் செலவுகள் கூடும்.

செல்லாத நாணயம், அல்லது ரூபாய் நோட்டுக்களைக் கனவில் கண்டால் தொழிலில் ஏமாற்றம் உண்டாகும். உடன் வேலை செய்பவர்கள் நம்பிக்கை மோசம் செய்வார்கள்.


### இயந்திரங்கள் பற்றிய கனவு

இயந்திரங்களைக் கண்ணால் காண்பதாகக் கனவு கண்டால் பொருள் வரவு ஏற்படும். தொழிலில் லாபம் உண்டாகும். இயந்திரத்தை இயக்குவதாகக் கனவு கண்டால் தொழிலில் உயர்வு ஏற்படும். இயந்திரம் நின்று போவதாகவோ அல்லது பழுதடைந்து போவதாகவோ கனவு கண்டால் செய் தொழிலில் தடங்கல்கள், நஷ்டங்கள் ஏற்படும்.

இயந்திரங்களினால் விபத்து ஏற்படுவதாகக் கனவு கண்டால் செய் தொழில் நின்று விட வாய்ப்பு உண்டு. இயந்திரங்களின் நடுவில் நிற்பதாகக் கனவு கண்டால் தனியாகத் தொழில் தொடங்க வாய்ப்பு ஏற்படும். தொழிலில் இலாபம் உண்டாகும்.

தொடரும்

Kelzon Lanka Construction (Pvt) Ltd.



Hot Line 0773999180 0773039950 0112363095

KELZON LANKA CONSTRUCTION (PVT) LTD

No. 50, Arethusa Lane, Colombo - 06. E-mail : info@kelzonlanka.com wed address : w.w.w.kelzonlanka.com

Since 1993

# UTV Digital Studio (Pvt) Ltd

**PHOTOGRAPHY - VIDEO PRODUCTIONS - CINEMATOGRAPHY**
**AERIAL VIEW - ADVERTISING - ACADEMY - MODELING STUDIO**



E mail: utvdigital@gmail.com - Web: utvdigitalstudio.com - FB: utvdigitalstudio



PASSPORT VISA / NIC PHOTO





PHOTO FRAMING



MODELING STUDIO



VHS to DVD TRANSFER




# 142 1/3, GALLE ROAD
(NEAR WELLAWATTA POLICE STATION)
COLOMBO 06

Tel: **0112 363 342**
Mob: **0714 122 192**




# PRASANNA

## MONEY EXCHANGE (PVT) LTD





No. 57, Galle Road, Colombo 06.

**Tel : 2 591 420, 2 591 421**

**Mobile: 077 948 4211 / 077 406 5484**

Fax : 2 504108

Email : prasannaexchange@gmail.com

Money changer Permit No. ECD/MC/0058 A

***Parking Available***




# இந்து தர்ம சாஸ்திரம்

அறிந்து கொண்டதே அறிவு. அதற்கு வழியும் வலுவும் கொடுப்பது புத்தி. அகமகிழ்ச்சி அடைவதால் ஒருவனது துயரம் அழிகிறது. அக மகிழ்ச்சி உள்ளவனது புத்தி நிரந்தரமாகிறது. மகிழ்ச்சியளிப்பவன், மகிழ்ச்சியாயிருப்பவன் இறைவனே!

புகழை விற்றே சாவாமையை வாங்க வேண்டும் என்றால் அறிஞர்கள் அந்த சாவாமையை வாங்க மாட்டார்கள். இழிந்த வாழ்க்கை நடத்துவதை விடக் கண்ணியமான சாவு மேலாகும். அன்புடையவனின் வீட்டுக் கூழ் அகந்தை கொண்டனின் வீட்டு அமிர்தத்தை விடச் சிறந்ததாகும். அதனால் அகந்தை கொள்ளாதே!

மழைத் தண்ணீர் எப்போதும் சமுத்திரத்தை நோக்கித்தான் போகும். உண்மை ராஜ்யமென்றால் கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களிடமே அது கவனம் செலுத்தும். நாட்டில் வசதியுள்ளவரெல்லாம் அவ்வளவையும் அவர்களுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். கங்கை மிகப் பெரியது. அதிலுள்ள தண்ணீர் மிகவும் வேகமாக சமுத்திரத்தை நோக்கி ஓடுகிறது. ஓடை சிறியது. அது குறைவான தண்ணீரை சமுத்திரத்துக்கு அனுப்புகிறது. இதேபோல் அவரவரின் சக்திக்குத் தகுந்தாற்போல் அவரவரும் ஏழை எளியவருக்கு உதவவேண்டும். இதுதான் தர்மம்.

நெஞ்சில் உள்ளதையே வாயால் சொல்லு, உனது சொல்லுக்கும் நினைவுக்கும் அத்தியந்த ஒற்றுமை இருக்கட்டும். உன் மனம் உலகத்திலேயே உழன்று கொண்டிருக்கும் போது, எல்லாம் ஈஸ்வரனே என்று வாயால் மாத்திரம் சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது.

சந்தனத்தின் சுகந்தத்தையும், அழுகிய பிணத்தின் துர்நாற்றத்தையும் காற்று எங்கே கொண்டு வீசுமாயினும் அவற்றுடன் அது கலந்து விடுவதில்லை. அம்மாதிரியாகவே முக்தியடைந்த ஜீவனும் உலகத்தில் வாழ்ந்த போதிலும் அதனுடன் கலந்திருப்பதில்லை. அதனால் ஜீவன் முக்தர்கள் புரியும் உலகாயத காரியங்களைக் கண்டு ஏளனம் செய்யாதே!

நியாயத்தினின்று வழுவாது தர்ம காரியங்களைச் செய்து கொண்டிருப்பவன் தர்மாத்மா. பிறர் மனைவியை நாடாமலும் தன்னிடம் கடன் பட்டவனிடம் அவன் பத்திரத்தையும் அடைமானப் பொருளையும் திருப்பித்தந்தும், எவருக்கும் கொடுமை செய்யாமலும், பசித்தவருக்கு உணவும், ஆடையில்லாதவருக்கு ஆடையும் அளித்துக் கொண்டும் நல்லது செய்து கொண்டும் இருப்பவனே தர்மாத்மா. தவறான காரியம் எதிலும் அவன் இறங்க மாட்டான். உண்மை தவறாமல் நியாயம் வழங்கிக் கொண்டிருந்தால் தர்மாத்மா ஆகலாம்.

தொடரும்

## சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

## (ஆன்மிக ஐயம்)



# மிருகங்கள் மீது கடவுள் அமர்வது ஏன்?



குரங்கு நம்மிடமுள்ளதை பிடுங்கிக் கொள்ளும் குணமுடையது. அதையே தெய்வமாகப் பார்த்தால் ஆஞ்சநேயனாய் மாறி அருளை வாரி இறைக்கிறது. யானை நம்மை விரட்டினால் அலறியடித்து ஓடுகிறோம். ஆனால், "கணேசா! என்னைக் காப்பாற்று," என வாய் நம்மையறியாமலே ஆனைமுகனை நினைக்கிறது. இதன் பொருள் என்ன?

மிருகம் தனக்குரிய இயற்கையான குணத்தை ஆண்டவனின் கட்டளைப்படி கடைபிடிக்கிறது. ஆனால், மனிதன் தனக்குரிய நிலையில் இருந்து மாறி மிருக குணத்துடன் அலைகிறான். அவன் மிருக நிலையில் இருந்து, தெய்வ நிலைக்கு உயர, வேண்டும். இதனால் தான், மனதில் எழும் எண்ணங்களை மிருகங்களாக உருவகப்படுத்தி, அவற்றை அடக்க வேண்டும் என்ற அடிப்படையில், நமது தெய்வங்கள் அதன் மீது அமர்ந்துள்ளனர். மிருகங்கள் தங்கள் இனத்தைப் பெருக்க வரையறை வைத்துக் கொள்வதில்லை. தன்னைச் சார்ந்த எல்லா மிருகங்களுடனும் உறவு கொள்ளும். பகுத்தறிவு உள்ள மனிதன் அப்படியிருக்கக் கூடாது. தனக்கென ஒருவன் அல்லது ஒருத்தியை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். மிருக குணத்தை விட்டொழிக்க வேண்டும்.



## பைரவர் ஆடையின்றி காட்சியளிப்பது ஏன்?

பைரவருக்கு 'திகம்பரர்' என்று பெயர். திக், அம்பரர். 'திக்' என்றால் திசைகள். 'அம்பரர்' என்றால் ஆடையாக உடையவர். அதாவது எட்டு திசைகளையும் ஆடையாக உடுப்பவர் என்று பொருள். அதனால் பைரவருக்கு சாதாரண வஸ்திரங்களை அணிவிப்பதில்லை.

## பரிகாரமாக வாழை மரத்துக்கு கல்யாணம் நடத்துவது ஏன்?



ஜாதகத்தில் களத்திரதோஷம் அல்லது பர்த்ரு தோஷம் என ஒன்று உண்டு. அதாவது பெண் ஜாதகமானால் கணவனுக்கும், ஆண் ஜாதகமானால் மனைவிக்கும் ஆயுள் கண்டம் ஏற்படும். இப்படி நிகழ்ந்தால் வேறு திருமணம் செய்ய வேண்டிய சூழல் வரும். அதைத் தடுக்க 'கதலீ விவாகம்' என முதலில் வாழை மரத்துக்கு கல்யாணம் செய்து பிறகு முறையான திருமணம் செய்தால் அது இரண்டாவது திருமணத்துக்கு ஒப்பானதாகி தோஷம் நீங்கி விடும் என்பது சாஸ்திரங்கள் கூறும் உண்மை.

## துளசியை ஆண்கள் மட்டுமே பறிக்க வேண்டும் என்பது உண்மையா?

பெண்கள் துளசி பூஜை செய்யலாம். துளசி குறித்த ஸ்லோகங்கள் சொல்லலாம். இதனால் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கும். ஆனால் துளசியை பறிக்கக் கூடாது. ஆண்களும் மதியத்திற்கு மேல் பறிக்கக்கூடாது என்று ஸ்ரீவத்ஸ சோம தேவ சர்மா எழுதிய துளசி சரிதம் நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

## பிரதோஷ நாட்களில் கோவிலில் வழிபாடு செய்யும் போது, பாதியிலேயே வீட்டுக்குக் கிளம்பலாமா?



பூஜை முடியும் வரை இருந்து வழிபடவேண்டும். அதுதான் பலனளிக்கும், அதுதான் முறையும் கூட! தவிர்க்க முடியாத அவசியமான காரிய நிமித்தமாய் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் தவறில்லை.



## ஜீவ சமாதி என்பதன் பொருள் என்ன?


"சமாதி" என்பதை விட 'ஸமாதி' என்பதே சரி. 'ஸம' என்றால் பக்குவப்படுதல் என்று பொருள். 'தி' என்றால் அறிவு. அதாவது இறைவன் திருவடியைத் தவிர வேறு எதுவுமே நிரந்தரமில்லை என்ற மேலான பக்குவமே 'ஸமாதி' என சித்தாந்தம் கூறகிறது. துறவிகளும், மகான்களும் இப்படி வாழ்ந்ததை நாம் படித்திருக்கிறோம். அதாவது ஜீவ ஸ்ரீ வாழ்க்கை. ஸமாதி ஸ்ரீ பக்குவப்பட்டு வாழ்க்கையிலிருந்து விலகி நிற்றல். மகான்கள் இறந்தால் ஸமாதி அடைந்தார் என்று கூறுவதும் இதன் அடிப்படையில் தான். உண்மையில் இறப்பதற்கு முன்பே அன்ன ஆகாரமில்லாமல் தவயோக நிலையில் இருந்து இறைவன் திருவடி அடைந்தவர்களையே ஜீவ ஸமாதியடைந்தார் என்று கூற வேண்டும். இவர்களே முனிவர்கள், சித்தர்கள் என போற்றப்படுவர்.

கோவிலில் அபிஷேகம், பூஜை, திருக்கல்யாணம் போன்றவை நடப்பது ஏன் தெரியுமா. கோவிலில் எது செய்யப்பட்டாலும், அது சமூக நன்மைக்கே உரியது. 'நாம்' இறைவன் உருவாக்கிய சமூகத்தின் ஒரு பங்கு என்பதை உணர வேண்டும் பூஜை என்பது ஒருவருக்காக அல்லாமல், எல்லோருடைய நன்மைக்காகவும் செய்யப்படுகிறது. தியாக உணர்வு என்னும் பாவனை அதில் கலந்திருக்கிறது. பூஜைகளுக்கு மிக ஆடம்பரமாக செலவழிக்க வேண்டும் என்பதில்லை. கடவுள் எதைக் கொடுத்தாலும், எப்படிக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வார். அது கொடுக்கப்படும் போது மனதில் இருக்கும் உணர்வு தான் முக்கியமானது. நல்லவரான விதுரர் கொடுத்த பழத்தோலைக் கூட கிருஷ்ணர் ருசியாக இருக்கிறது என சொன்னார். நைவேத்யத்தை விட அதைக் கொடுக்கும் பக்தி மனமே இறைவனுக்கு முக்கியமாகிறது.




## நைவேத்யத்தை விட உயர்ந்தது எது?

## நல்லவர்களை கடவுள் சோதிப்பது ஏன்?




நல்லவர்கள் தங்கம் போன்றவர்கள். தீயவர்கள் துரு பிடித்த தகரம் போன்றவர்கள். தங்கம் விலை மதிப்பற்றது. எல்லாராலும் விரும்பப்படுவது. அது சொக்கத் தங்கமாக ஜொலிப்பதற்கு காரணம் பலமுறை நெருப்பிலிட்டு மாற்று அடிப்பதால் தான். அதுபோல், நல்லவர்களுக்கு சோதனை தருவதன் மூலம் கடவுள் அவர்களை மேலும் தங்கமாக்குகிறார். துருபிடித்த தகரம் எதற்கும் பயன்படாதது போல் இப்பிறவியில் தீயவர்களுக்கு என்ன தான் சோதனை தந்தாலும், அவர்கள் திருந்த மாட்டார்கள் என்றுதான் கடவுள் அவர்களைக் கண்டு கொள்வதில்லை போலும். யாருக்கு சோதனைகள் அதிகமாக ஏற்படுகிறதோ அவர் அருகில் சுவாமி இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.


BENZAAR
Makes the Difference
ஒவ்வொரு தருணத்தையும் விழாக்காலமாக மாற்றுங்கள்!
No. 45, Galle Road, Wellawatte, Colombo 06. | Tel: +94 112 505 440 | Email: info@benzaar.lk
Skype: benzaar.lk | Web: www.benzaar.lk


High quality
Dental Work
that makes you
LOOK GOOD
with best of care...!
Chandrika's
Dental Care
Multi Speciality Dental Clinic
The latest modern Dental Equipments
specialty imported with X-Ray Facility
• Implants
• Painless Extractions
• Impactions
• Scaling & Polishing
• Tooth Whitening
• Tooth Coloured Fillings
• Root Canal Treatments
• Crown & Bridges
• Dentures
• Orthodontic Treatments (Braces)
• Gum Treatments
• Pedodontic Treatments
(For Children)
Moderate Charges
Personal Attention
40A, Galle Road, Wellawatte, Colombo 06.
(Next to HSBC Bank)
Please call for Prior Appointments:
011 2502500 / 011 2502644
Working days
Mondays to Saturday & Poyadays
9.00 am to 8.30 p.m
Sunday - 9.00 a.m to 1.30 p.m
(Also by Appointments)


flex அருள்
ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்



# அற்புத ஆலயங்கள்

## இந்தியா / இலங்கை

கோணேஸ்வரம் ஆலயம்



# 108 சிவ ஸ்தலங்கள்

## 88. திருப்பைஞ்ஞீலி

**திருச்சியில் இருந்து டவுண் பஸ்வசதி உண்டு. திருமணமாகாதவர் இக்கோவிலில் உள்ள வாழைமரங்களுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் தங்களுக்குத் திருமணம் நடக்கும் என்பது ஐதீகம்.**

**இறைவன் : நீல கண்டேசுவரர்**
**இறைவி: விசாலாக்ஷி**

திருவானைக்காவிற்குரிய சப்தஸ்தான தலங்களில் ஒன்றாக கருதப்படும் ஓர் அற்புதமான சிவன் கோயில்.

திருவானைக்கா, திருச்செந்துறை, திருப்பராய்த்துறை, திருப்பைஞ்ஙீலி, திருப்பாச்சிலாச்சிரமம், திருவீதிக்குடி திருவாலந்துறை எனும் தலங்கள் ஞானசம்பந்தர், அப்பர் பெருமானால் பாடல்பெற்றவை. சமணர்களின் செருக்கை அடக்கிய அப்பர் பெருமான், காவிரிக்கு இருமருங்கிலுமுள்ள சிவக்ஷேத்ரங்களைத் தரிசித்து, தமிழ்மாலை சாத்தியவண்ணம் திருப்பைஞ்ஞீலி தலத்தை அடைந்தார். நாட்கணக்காக பாதயாத்திரை, செய்த காரணத்தால் அப்பரடிகளுக்கு களைப்பு மேலிட்டது. சோர்வினால் உடல் வருந்தினார்.

அதுசமயம் திருப்பைஞ்ஞீலிக்கோவிலில் எழுந்தருளியுள்ள நீலகண்டேசுவரர் அப்பரடிகள் செல்லும் வழியே பந்தல் அமைத்தார். சோலையால் சாலையை நிழல் பரவச்செய்தார்.

அத்தோடு நில்லாமல் அந்தணர் கோலத்தில் பொதிசோறுடன் அப்பர் அடிகள் வரவை எதிர்பார்த்திருந்தார். அப்பரும் வந்தார்.

ஐயன் அப்பர் அடிகளுக்கு பொதி சோறு ஊட்டி அருள்செய்தார். மாயமாய் மறைந்தார். நாவுக்கரசர் ஈசனின் அற்புத செயலால் நெஞ்சு நெகிழ்ந்தார். நிலம்கிடந்து சேவித்தார்.

இக்கோவிலில் நவக்கிரகங்களுக்கு விக்ரகம் கிடையாது. நவக்கிரகங்களைத் தீபங்களால் வழிபட வேண்டும் என்பது இக்கோயிலின் ஒரு தனி சிறப்பாகும்.

## 89. ஸ்ரீவாஞ்சியம்

**கும்பகோணம் - நன்னிலம் மார்க்கத்தில் 10 கி.மீ தூரத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. இத் திருக்கோயில் இரண்டாவது ராஜகோபுரத்து வட பாகத்தில் வடக்கு நோக்கி ராகுவும் கேதுவும் ஒன்றாக ஒரே திருமேனியோடு தரிசனம் தரும் மகிமையை இத்திருக் கோவிலில் மட்டுமே காணமுடியும்.**

**இறைவன்: வாஞ்சிலிங்கேஸ்வரர்**

**இறைவி : மங்கள நாயகி**

சங்கபாலன் எனும் நாகம் ஸ்ரீவாஞ்சிநாதரைப் பூஜித்து பேரருள் பெற்றதாகப் புராணம் கூறுகிறது. அதேபோல் சூரியனும் வாஞ்சிநாதரைப் போற்றிப் பணிந்து பேரருள் பெற்றார்.

இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள மங்களநாயகி, கார்த்திகைத் திங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் பெருமானைப் பூஜிப்பது வழக்கம்.

பூஜை செய்யும் தருணத்தில், ஈசுவரி ஈசனிடம், இத்தலத்திற்கு வந்து வழிபடுவோர்க்கு ராகு, கேது தோஷ நிவர்த்தியாகி விவாஹம், புத்ரபாக்கியம் சுபமாக நடைபெற அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

திருமகள் திருமாலை வாஞ்சித்து தவம் புரிந்த காரணத்தால் ஸ்ரீவாஞ்சியம் என்ற திருநாமம் ஏற்பட்டது. (வாஞ்சித்து விரும்பி)

இத்தலத்து எம்பெருமான் கிருதயுகத்தில் பொன்னிறமாகவும், திரோதாயுகத்தில் வெள்ளி மயமாகவும், துவாபரயுகத்தில் தாமிரமயமாகவும், கலியுகத்தில் கல்மயமாகவும் தோன்றுவதாக புராணங்கள் சொல்லுகின்றன.

இத்திருத்தலத்திலுள்ள குப்தகங்கை தீர்த்தத்தில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை நீராடுவது மிகவும் விசேஷம். கங்கா தேவியே இத்தீர்த்தத்தில் நீராடுவதாக ஐதீகம்.

இது ஒரு முக்தி தரும் தலமாக விளங்குகிறது. தலவிருஷம் சந்தனமரம். இத்தலத்தில் எமதர்மர் ஈசனை வழிபட்டு அருள் பெற்றார் என்பது புராணம்.

இங்கு எமதர்மராஜனுக்குத் தனிக்கோயில் உள்ளது. இத்திருத்தலத்தில் எமன் நான்கு திருக்கரங்களுடன் பாசம், கதை, சூலம் ஏந்தியுள்ளார். பொற்பாதகுறடுகள் அணிந்த இடதுகாலை மடித்து, வலதுகாலை தொங்கவிட்ட நிலையில் சிம்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இங்கு எமனுக்கு வாகனம் உண்டு. இத்திருக்கோவிலை தினம் தரிசிப்போர் எமபயம் நீங்கி, கிரகதோஷ நிவர்த்தியாகி நிம்மதியான வாழ்வு பெறுவர்.

# 90. திருவலஞ்சுழி

**கும்பகோணம் - தஞ்சாவூர் மார்க்கத்தில் கும்பகோணத்திலிருந்து 6கி.மீ தூரத்தில் உள்ளது. இத்தலத்தில் கோவில் கொண்டுள்ள அம்பிகை யயாத முனிவரின் புத்திரியாக அவதரித்தாள். தவமிருந்து ஈசனை மணந்து கொண்டதாக ஐதீகம்.**

**இறைவன்: கற்பகநாதரீசர்**

**இறைவி: பெரிய நாயகி (பிருஹந்நாயகி)**

இத்திருத்தலத்தில் ஈசனுக்கு கர்ப்பதீசர் என்றும் பெயர் உண்டு. இத்தலத்திற்கு திருவலஞ்சுழி பெயர் பெயர் வரக்காரணம் உண்டு.

ஹரிதத்துவஜன் காவிரியை அழைத்து வந்தான். காவிரி ஒரு பிலத்துள் ஒளிந்து கொண்டாள். ஹேரண்ட முனிவர் அக்குகைக்குள் புகுந்து, காவிரியை வெளிக்கொண்டு வந்தார். அப்போது காவிரி, நீரைச் சுழித்துக் கொண்டு வலமாகச் சென்றாள். இது காரணம் பற்றி வலஞ்சுழி என்று பெயர் உண்டரனது.

இத்திருக்கோவிலில் வெண்மை நிறம் கொண்ட பிள்ளையார், சுவேத விக்னேசுவரர் என்ற நாமத்துடன் கோவில் முதற் பிராகாரத்தில் தரிசனம் தருகிறார்.

நாவுக்கரசர் பாடிய திருத்தலம். இக்கோவிலுள்ள தீர்த்தம் காவிரி விருஷம் - வில்வம்.

# 91. திருப்பாம்புரம்

**கும்பகோணம் - கொல்லுமாங்குடி மார்க்கமாக காரைக்கால் செல்லும் வழியில் இத்தலம் அமைந்துள்ளது. ஜாதகத்தில் கடுமையான செவ்வாய்தோஷம் உள்ளவர்கள் இங்குள்ள ஈசனையும், முருகனையும் விரதமிருந்து வழிபட்டால் தோஷ நிவாரணம் கிட்டும்.**

**இறைவன்: சேஷபுரீஸ்வரர்.**

**இறைவி: வண்டுசேர்க்குழலி.**

திருப்பாம்புரத்தில் அன்னை வண்டு சேர்குழலி அம்மனுடன் எழுந்தருளியிருக்கும் சேஷபரீஸ்வரர் பக்தர்களுக்கு சகல சுகத்தையும் தரும் அருள் வள்ளலாக விளங்குகிறார்.

இத்திருக்கோயில் ராஜகோபுரம் கிழக்கு முகமாக காட்சி தருகிறது. ராஜகோபுரத்தைத் தரிசித்து,

எதிரிலுள்ள ஆதிசேஷ தீர்த்தத்தில் நம்மை தூய்மைப்படுத்திக் கொண்டு உள்ளே கொடி மரத்தையும், கொடிமரத்து விநாயகரையும் வழிபட வேண்டும்.

நந்தியெம்பெருமான், ராஜபிள்ளையார், வள்ளி தேவயானை சமேத முருகப்பெருமான் என பல தேவதா மூர்த்தங்களின் தெய்வத் திருமேனி காண்கின்றோம்.

இக்கோவிலின் தலவிருஷம் வன்னிமரம். இம்மரத்தடியில் தனிசந்நிதியில் ஆதிபாம்புரேசர், வன்னீசுவரர் எனும் திருநாமத்துடன் கோவில் கொண்டுள்ளார். தெற்கு பிராகாரத்தில் தக்ஷிணாமூர்த்தி, சட்டநாதர், கிழக்கு பிராகாரத்தில் பைரவர், சூரியர், திருமால், பிரம்மன், பஞ்சலிங்கங்கள், ஆதிசேஷன், இராகு, கேது, சனீஸ்வரர் திருஉருவம் காணலாம்.

ஈசன் கர்ப்பகிரஹகத்தில் லிங்க வடிவில் தரிசனம் தருகிறார். அம்மன் வண்டு சேர்க்குழலி ஒரு கையில் தாமரை, புஷ்பமும், மறுகையில் ருத்ராஷ மாலையும் கொண்டு, பரதஹஸ்தம், அபயஹஸ்தம் காணும் எழிலுடன் நின்ற திருக்கோலத்துடன் பக்தர்களைப் பரிபாலிக்கின்றாள்.

ஈசனை வழிபடும் ராகுவும் கேதுவும் கோவில் ஈசானிய மூலையில் தனி சந்நதியில் எழுந்தருளியுள்ளனர், ஜாதக தோஷ நிவர்த்திக்கு விமோசனம் கிட்டுவதற்கு இத்திருக்கோவில் ஒரு சஞ்சீவி மலை போலாகும்.

# 92. திட்டை

**தஞ்சாவூர் - திருக்கருக்காவூர் மார்க்கத்தில் தஞ்சையிலிருந்து 15-வது கி.மீ தூரத்தில் உள்ளது. இத்திருக்கோவிலில் குருபகவான் தனி சந்நதியில் காட்சி தருகிறார். இவர் சப்தரிஷிகளில் ஒருவரான ஆங்கிரஸ முனிவரின் புதல்வர் ஆவார்.**

**இறைவன்: வசிஷ்டேஸ்வரர்**
**இறைவி: சுகந்த குந்தளாம்பிகை**

ஒரு காலத்தில் தென்குடிதிட்டை என்ற பெயரால் விளங்கிய இவ்வூர் தற்போது திட்டை என்று அழைக்கப்படுகிறது. இங்கு கோவில் கொண்டுள்ள வசிஷ்டேஸ்வரர் சுயம்புலிங்கமூர்த்தி. இந்த மூர்த்திக்கு தேரூர்நாதர் என்றெல்லாம் பல பெயர்கள் உண்டு.

சிவன், உமை, விநாயகர், முருகன் வரம் தரும் திருமூர்த்திகளாய் எழுந்தருளியுள்ளனர்.

ஈசன் சுயம்புமூர்த்தியாக எழுந்தருளுவது இருபத்திரெண்டாவது தலமாக விளங்குவது திட்டை. இங்கே அருள்புரியும் சிவலிங்கம் ஜோதிர் மகாலிங்கம் எனப்படும்.

இக்கோவிலின் நான்கு மூலைகளிலும் நான்கு லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மூலவர் சுயம்புலிங்கமாக ஐந்தாவதாக எழுந்தருளியுள்ளார்.

இக்கோவில் கம்பீரமான ராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கி திவ்யமாக காட்சி தருகிறது. இக்கோவிலில் கொடிமரம், கோபுரகலசம், சுவாமிபுஷ்கரணி, கருங்கற்களால் அமைந்துள்ள கோவில், இத்தலத்தின் ஒருதனிச் சிறப்பாகும்.

திட்டை தலத்து ஈசனைத் தவமிருந்து பாபவிமோசனம் பெற்று நலம் கண்டான் சந்திரன் ஈசன், பசு, குதிரை, மான் தாகம் தீருவான் வேண்டி பசு தீர்த்தத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்தார்.

மேலும் சூலதீர்த்தம், காவிரி தீர்த்தம் இத்தலத்தில் உள்ளன. திட்டைக் கோவில் தலவிருக்ஷம் ஆலமரமாகும்.

விஷ்ணு அரசமரமாகவும்,லக்ஷ்மி வில்வமரமாகவும் இருந்து இறைவனுக்கும் இறைவிக்கும் திருத்தொண்டு செய்தனர் என்பன போன்ற வரலாறுகளைக் காண்கின்றோம்.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம். இக்கோவிலில் குருபெயர்ச்சிவிழா, சிவராத்திரி, தைப்பொங்கல், கிருத்திகை, பிரதோஷம், சித்ராபௌர்ணமி, ஆருத்ரா தரிசனம் போன்றவை சிறப்பான விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

கோபுர தரிசனத்துடன் உள்ளே சென்றதும் நாம் முதலில் தரிசிப்பது விநாயகரை!

பின்னர் இறைவன், இறைவி, அண்ணாமலையார், சண்டிகேசுவரர், பைரவர், குருபகவான் திருமேனியைத் தரிசித்து அருளைப் பெறவேண்டும்.

சனிபகவான் திட்டை தலத்திற்கு எழுந்தருளி வேதாகம முறைப்படி வேதமுதல்வனைப் பூஜித்து ஆயிரம் ஆண்டுகாலம் கடும் தவம் புரிந்து ஈசனின் பேரருளைப் பெற்றார்.

ஈசன் அவருக்கு கிரகநாதனாக இருக்கும்படியான அந்தஸ்தை அருளினார்.

சனிபகவான் ப்ரீதிக்கு பக்தர்கள் இத்தலத்திற்கு வந்து ஈசனையும், சனீஸ்வரரையும் பணிந்து போற்றுவது சிறந்தது. இஃது ஜாதக தோஷ நிவர்த்திக்கு உகந்ததாகும்.

தொடரும்




SSS
Sri Shanmukhas
Kurkure
Parle-G
MILANO
GOLDEN ARCS
Dabur Honey
Gulab Jamun
NUTRI SLIM
# 157/2, Sri Kathiresan Street, Colombo 13.
Tel: 011 244 9598
Email: shannmugas51@gmail.com
"like" us on facebook

# New Red Rose



**SELLING & HIRE FOR**

- Imitation Jewellery & Bridal Set
- School Concert Jewellery
- Dancing Set
- Cosmetics Specialist in Wedding Jewellery Set
- Ottiyanam
- Costumes


No. 104, St, Anthony's Mw, Col. 13. | Tel: 0112 433 638 | Mob: 0773 553 905
Email: mahes104@hotmail.com




# சீதையம்மன் ஆலயம்

சீத்தா எலியா, நுவரெலியா

இலங்கை மணித்திருநாட்டின் மத்திய மாகாணத்தில் அழகுக்கு அழகூட்டும் இயற்கை அரண்களால் சூழப்பெற்ற நுவரெலியா மாநகரின் சீத்தா எலியா என்ற இடத்தில், இதிகாசத்தில் குறிப்பிடப்பட்டவாறு இலங்காபுரியின் மலையடிவாரத்தில், சலசலக்கும் அழகிய நீரோடைக்கு அருகில் அமையப்பெற்றதே அருள்மிகு ஸ்ரீ சீதையம்மன் ஆலயமாகும். நுவரெலியா நகரிலிருந்து வெளிமடை நகருக்குச் செல்லும் பிரதான பாதையில், சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில், கடல் மட்டத்தில் இருந்து 6,200 அடி உயரத்திலேயே இந்த சீத்தா எலியா என்ற இடம் அமைந்துள்ளது. ஆரம்ப காலத்தில், அசோக மரங்கள் சூழ்ந்துள்ள அடர்ந்த காடுகளின் மத்தியில், வரலாற்று சிறப்புமிக்க அசோகவத்திக்கா (அசோக வனம்) என்ற இடத்திலேயே இப்புனித ஆலயம் அமைந்துள்ளது.

சீத்தா எலியா என்ற பெயரே சீதையுடன் சம்பந்தப்பட்ட விசேட பெயராகத் தொனிக்கின்றது. இதிகாச கால வரலாற்றுப் பின்னணியில் அமைந்த இவ்வாலயம், தொனிக்கின்றது. பாரத மக்களால் நன்கு உய்துணரப்பட்ட காவியங்களில் ஒன்றான இராமாயண காலத்தை நினைவூட்டுகின்றது.

இராமாயண இதிகாசத்தின் கதாநாயகன் இராமனின் துணைவியரான சீதையை, இலங்காபுரி வேந்தனாகிய இராவணன் கடத்தி, தனது புட்பகவிமானம் மூலம் இலங்காபுரியின் அசோகவனத்தில் சிறைவைத்தான் என்பது இதிகாசம் அறிந்த, யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அந்த அசோகவனமே சீத்தா எலியா என்ற கிராமமாக இன்று பெயர் கொண்டு விளங்குகின்றது. இந்த அசோக வனத்தில் ஓடும் சிற்றோடைக் கரையில், கோவில் கொண்டு அருள் பாலிப்பவளே ஸ்ரீ லக்ஷ்மி தேவியின் அவதாரமாகிய சீதையம்மன், அதனால், இவ்வாலயமானது இராவணேஸ்வரனின் ஆட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் அமைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. ஏறத்தால 150 ஆண்டுகளுக்கு மேல் பழமையான இவ்வாலயத்தை நாடிவரும் அடியார்களுக்கு அருளாட்சிபுரியும் திவ்விய தலமாக விளங்குகிறது.

இவ்வாலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளைச் செவ்வனே செயற்படுத்துவதற்கு தடையாக, வேற்று மதகுருமார்களும் அரசியல்வாதிகளில் சிலரும், அரசியல் ரீதியில் பல எதிர்ப்புகளைக் காட்டினர். இருப்பினும், முன்னாள் அமைச்சர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், முத்துசிவலிங்கம் ஆகியோர், இவ்வெதிர்ப்புகளுக்கு மத்தியில் தமது அரசியல் பலத்தின் மூலமாக நல்ல தீர்வினைப் பெற்றுத்தந்தனர். அத்துடன், தமது முழுமையான ஆதரவினை நல்கியதோடு, ஆலய வளர்ச்சிக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கும் தமது பங்களிப்பை நல்கி வந்தார்கள். ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வே.இராதாகிருஷ்ணன் தலைமையில், ஆயுட்காப்பாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம், எல்.நேருஜி, வீ.ஆதிமூலம், காப்பாளர்களான எம்.ஜெகதீசன், ஆர்.பாலகிருஷ்ணன், எஸ்.கே.இராஜலிங்கம் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும், ஆலய அபிவிருத்தியிலும் புனர்நிர்மாணப் பணிகளிலும் தமது ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர்.

சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்வாலயத்தில் ஸ்ரீ ராமபிரான், சீதாதேவி, இலட்சுமணன், ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்களின் திருவுருவங்கள் பளிங்குக் கற்களினாலான சிலைகளாக வட நாட்டு உடை பாணியில் அழகுற அருளாட்சி தருகின்றன. இராமாயண வரலாற்றில், ஸ்ரீ இராமர் - சீதையைத் தேடி வந்து இராவணனை அழித்து சீதையை மீட்டு அயோத்திக்கு அழைத்துச் செல்ல, ஸ்ரீ இராமனுக்கு வலது கைபோல பக்க பலமாக உதவியவர் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆவார். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சீதையம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கென தனிக்கோவில் உண்டு. மற்றும், கோபுரத்தில் திருமாலின் ஒன்பது அவதாரங்களும் ஆகம விதிப்படி சிற்பங்களாக செதுக்கப்பட்டு உள்ளமையானது, வைணவ கோவிலின் அமைப்பை ஒத்து சிறப்புப் பெறுகின்றது.

தூண்கள் தோறும் இராமாயண காட்சிகள்

படைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. சுவரின் மேற்பகுதியில் காணப்படும் இராவணன், சீதையை தூக்கி வருதல், சடாயுவின் சிறகுகள் வெட்டப்பட்டமை, அசோகவனத்தில் அரக்கியர் மத்தியில் சீதை இருந்தமை போன்ற ஓவியங்கள், மனதைக் கவர்வதோடு இதிகாச கால உணர்வுகளுக்கு எம்மை இட்டுச் செல்கின்றன என்றால் மிகையாகாது. இயற்கையாகவே பாய்ந்து வரும் குளிர்ச்சிமிகு நீரோடையுடன் புவியியல் வரலாற்றுக் காலத்தால் முந்திய மரவகைகளும், செடி, கொடிகளும் இயற்கை வளம் என்ற சொல்லை மிகைப்படச் செய்கின்றன. இவ்வாறு வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டு விளங்கும் இவ்வாலயம், இலங்கையில் தனிப்பெரும் ஆலயமாக விளங்குகின்றது. இலங்கை சுற்றுலாத்துறை முன்னாள் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சீதையம்மன் ஆலயம் அமைந்திருக்கும் நுவரெலியாவின் சீத்தா எலியா என்ற இடத்தை, புனித பூமியாக்குவதற்கும் ஆலயத்தை விஸ்தரிப்பதற்கான 2 ஏக்கர் காணியை வழங்குவதற்கும் உறுதியளித்திருந்தார்.

இவ்வாலயத்தின் பளிங்குச் சிலைகள் பிரதிஸ்டை செய்யப்பட்டு இருந்ததினால், இங்கு பூஜைகள் மாத்திரமே நடைபெற்று வந்தன. அடியார்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, மீண்டும் புதிய கோபுரத்துடனான தனி ஆலயம் அமைக்கப்பட்டு கற்சிலைகளிலான ஸ்ரீ இராமபிரான், சீதாதேவி, இலட்சுமணன், ஆஞ்சநேயப் பெருமான் ஆகியோர்களின் கற்சிலைகள், கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, 2008.01.28 அன்று மஹா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் அமைச்சின் மூலமாகவும் இந்து கலாசார திணைக்களத்தின் மூலமாகவும், ஆலய பக்தர்களினதும் வர்த்தக பெருமக்களினதும் நிதி உதவிகளினாலும், பொருள் உதவிகளினாலும் ஆலய திருப்பணி வேலைகள் செவ்வனே நிறைவேறின.

இவ்வாலயம் இராமாயணத்துடன் தொடர்புப்பட்ட ஒரு புனித ஸ்தலமாகும். ஆலயத்தின் அருகில் ஓடுகின்ற நீரோடையில், சீதாதேவி ஸ்நானம் செய்ததாகவும் நீரோடைகளுக்கு மத்தியில் பாறைகளுக்கு இடையில் ஒரு சுரங்கப்பாதை போன்ற சிறு வாயில் காணப்பட்டதாகவும் இதன் மேற்பகுதியில் சீதாதேவி வெள்ளை மற்றும் சிவப்பு நிற மலர்களைத் தினமும் ஸ்ரீ இராமபிரானை நினைத்துக்கொண்டு அந்த நீரில் போட, மறுபுறத்தில் வெள்ளை நிற மலர்கள் மாத்திரம் வந்ததாகவும், சீதாதேவி அவற்றை மகிழ்வோடு எடுத்து, தன் பிரான நாயகன் தன்னை வந்து அழைத்துச் செல்வாரென்று உறுதியுடன் உளமகிழ்வாராம் என வரலாறு கூறுகின்றது. இதன் பின், இந்நிகழ்வை இங்கு வரும் அடியார்களும், பூக்களைப் போட்டு தாம் நினைத்த காரியங்கள் வெற்றி கிடைக்க வேண்டி பிரார்த்தித்துப் பார்ப்பதாக இப்பகுதி மக்கள் கூறக் கேட்கலாம். 1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தினால், இவ்விடயத்திலிருந்த ஓடைச் சுரங்க வாயில் மூடப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த அற்புதமும் சீதாதேவியின் மகிமையினை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. அத்துடன், இவ்வாலயத்தை அண்மித்த பகுதிகளில் அபூர்வமான தெய்வீக மூலிகைகள் காணப்படுகின்றன. அவற்றை, இப்பகுதி சித்த வைத்தியர்கள், தீராத நோய்களைக் குணப்படுத்தும் மருந்தாகப் பயன்படுத்தி வருகின்றனர். இராமாயணத்தில் வரும் காட்சியின் படி, அனுமான் - சஞ்சீவி மலையை பெயர்த்து வந்த போது சிதறிய மூலிகைகளே இன்றும் அவ்விடத்தில் மருந்தாக கிடைக்கின்றன என்ற ஐதீகம் நிலவுகின்றது.

இவ்வாலயத்தை அன்மித்த பகுதியில் பல அற்புதமான அமைப்புக்களைக் காணலாம். அண்மையில், இவ்வாலயத்தை அண்மித்த ஒருவரது காணியில், பாரிய கிணறொன்றை வெட்டும் போது, நிலத்துக்கடியில் ஸ்ரீ ராமபிரான், சீதாதேவி, இலட்சுமணன், ஆஞ்சநேயர் ஆகியோரின் திருவுருவங்கள் மிகத்தெளிவாகக் காட்சியளித்ததாம். இப்பிரதேசத்தின் இயற்கை தரைத்தோற்ற அமைப்பையும் இடங்களின் பெயர்களையும் நோக்கும் போது, இதிகாசத்தில் குறிப்பிடப்பட்ட அமைப்புக்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தின் நிலப்பகுதியில் காணப்படுகின்ற மண், கறுப்பு நிறம் உடையதாக இருப்பதற்கு காரணம், சீதாதேவியை தேடி வந்த அனுமனின் வாலில் பந்தமொன்று கட்டி தீமூட்டிய போது, அவர் திடீரென விஸ்வரூபமெடுத்து அரண்மனை முதல் எல்லா இடங்களையும் எரியூட்டியதாகவும், இராவணன் கவலையுடன் காலையில் எழுந்து காவலர்களிடம் “இன்னும் அவன் வைத்த தீ நூரலையா?” என வினவுவாராம். இதனாலேயே, இப்பிரதேசத்துக்கு நூரளை எனப் பெயர் வந்ததாகவும் முன்னோர்கள் கூறக் கேட்கலாம். எரியூட்டப்பட்டதாலேயே இப்பகுதியின் மண் கறுமை நிறம் அடைந்ததாகவும் முன்னோர்கள் கூறுகின்றனர். நீரோடையில் படர்ந்த பாறைப் பகுதியில், அனுமான் தான் எடுத்த விஸ்வரூபத்தின் போது கால் பதித்த இடம், இன்றும் குழிகளாகக் காணப்படுகிறன்றன. இன்றும் இப்பகுதியில் சிறு மண் உருண்டைகளைக் காணலாம். இதன் உட்பகுதியில் சேதமடையாத அரிசியைக் காணலாம். இதை இராவணன் கொழுகட்டை என அழைப்பர்.

# சிட்னி முருகன் கோயில்

The Saiva Manram



அரோகரா அரோகரா அரகரோகரா.. ஐயா! ஆறுபடை முருகனுக்கு அரகரோகரா
அரோகரா அரோகரா அரகரோகரா..ஐயா! சிட்னிநகர் முருகனுக்கு அரகரோகரா

**Sydney Murugan Kovil**

217, Great Western Highway, Mays Hill, Sydney, Australia. | Tel: 0061 2 9687 1695
www.sydneymurugan.org.au

# இலண்டன் சிவன் கோயில்



**London Sivan Kovil**

4A, Clarendon Rise, Lewisham, London SE13 5ES. | Tel: 0044 20 8318 9844
www.londonsivankovil.org.uk

flex அருள்
ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழினை இவ்விரு ஆலயங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.


ஜெயகீதா ஜுவலர்ஸ்
No. 38 A,
Sea Street Junction,
Colombo - 11.
Tel : 011 - 243 60 73


Sunco Fancy
Stationary Items, Professional in Cosmetic Items, Costume Jewellery, Threading Items, lace items and Saloon Accessories.
NO. 456 A, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel 0114 - 892 466, 0775 - 524 884


Rishi Foods
Pure Vegetarian
We Undertaken Catering Orders for Birthday Party and Special Occasions
#285, Galle Road, Wellawatte, Colombo-6.
# 459 A, Galle Road, Wellawatte, Colombo-6.
Hot Lines :07774125335, 0777508049, 0117209017


GTV ENTERPRISES (PVT) LTD.
வெளிநாடுகளுக்கு
விரைவாக பொதிகள்
அனுப்பும் சேவைக்கு...
இன்றே நாடுங்கள்!
18/3, Dr. E. A. Cooray Mawatha, Colombo 06.
Tel: 011 465 4444 / 011 236 0926


World's No.1 Rated CCTV Brand
HIKVISION
Ex - Stockes
Dealers Welcome
HIKVISION LANKA (PVT) LTD
Sole Agent and Direct Manufacturer Support Center for Sri Lanka.
www.hikvision.lk
fb/HikvisionSriLanka
# 14, Dharmarama Road, Colombo 06.
Mob - 0777 111 999 | Call Center -0114 400 400



# தென்முகக் கடவுள்

## ஆன்ம தத்துவங்கள் – 24

**சிவதத்துவம் - 5**

**சுத்தவித்தை:** அறிவு மேற்படத் தொழில் குறைந்து நிற்கும்.

**ஈசுரம்:** தொழிற்மேற்பட அறிவு குறைந்து நிற்கும்.

**சதாசிவம்/சதாக்கியம்:** ஞானமும் கிரியையும் ஒத்த அளவில் பொருந்தி நிற்பது. அதாவது அறிவும் தொழிலும் ஒத்து இருக்கும் தன்மை.

**சத்தி:** தொழில்படுத்தும்/கிரியையை உடையதாய் இருக்கும்

**சிவம்**: அறிவாய் இருக்கும்/ஞான உருவாய் விளங்கும்.

**ஆணவம்:** இது உயிர்க்கு என்றும் அறியாமையைச் செய்வது.

**கன்மம்:** எல்லா இறை செயல், எல்லா இறைவனுடையது என நில்லாது, யான் எனது என நிற்பதால் ஈட்டப்படுவது.

**உயிர்:** அறிவுடைய பொருளின் முன் அறிவற்ற பொருள்கள் விளங்கித் தோன்றாமையாலும், அறிவற்ற பொருள்கள் அறிவுடைய பொருள்களைக் கண்டறிதல் இயலாமையாலும் இவ்விரண்டின் இடமாகவும் அது அதுவாய் இருந்து அறிவு அறியாமை ஆகிய இரண்டையும் பெற்று நிற்பது உயிராகும்.

மணம் தன்னைத்தான் அறியாது. மூக்குடைய ஒருவனே அதை நுகர்ந்து அறிவான்; அறுசுவைகளும் தம்மைத் தாம் அறியா. நாக்கு உடைய ஒருவனே அச்சுவைகளின் தன்மையை சுவைத்து அறிவான். அதைப்போல் முப்பத்தி ஆறு தத்துவங்களும் தம்மைத் தாம் அறியா. அவற்றோடு பொருந்தி இருந்து அவற்றை அறிவது உயிரே ஆகும்.

**உயிர்களின் தோற்றமும், பிறப்பும், யோனி பேதங்களும்.**

பிரம்ம புத்திரர்களே! ஜீவ தோற்றங்கள் நான்காகும். அவை அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்பன.

அண்டசம் என்பது முட்டையில் தோன்றும் உயிர்களாகும். பறப்பன, ஊர்வன, நீந்துவன. புறவைகள், பாம்புகள், ஆமைகள், மீன்கள் முதலியன எல்லாம் முட்டையில் இருந்து தோன்றுகின்றன.

சுவேதசம் என்பது வேர்வையில் தோன்றும் ஜீவராசிகளாகும். கிருமிகள், பேன்கள் முதலின.

உத்பீஜம் என்பது வித்து, வேர், கொடி, கொம்பு, கிழங்கு முதலானவற்றில் தோன்றுவன. இவையாவும் தாவர இனங்களாகும்.

சராயுஜம் என்பது கருப்பையினுள் தோன்றும் ஜீவன்களாகும். மனித இனமும், விலங்கினங்களும் இவ்வாறு தோன்றுவனவாகும்.

**ஏழ்வகைப் பிறப்புக்களும், யோனி பேதங்களும்:**

**யோனி பேதங்கள் மொத்தம் 84 லட்சங்களாகும்**

| | |
|---|---|
| 1. தேவர் | 1. லட்சம் பேதம் |
| 2. மனிதர் | 9. லட்சம் பேதம் |
| 3. விலங்கு | 10. லட்சம் பேதம் |
| 4. பறவை | 10. லட்சம் பேதம் |
| 5. ஊர்வன | 15. லட்சம் பேதம் |
| 6. நீர்வாழ்வன | 10. லட்சம் பேதம் |
| 7. தாவரம் | 19. லட்சம் பேதம் |

ஆக மொத்தம் 84 லட்சம் யோனி பேதங்களாகும்.

**உயிர் பெறும் சரீர வகைகள்:**

1. காரண சரீரம் - ஆனந்தமய கோசம்
2. கஞ்சுக சரீரம் - விஞ்ஞான மயகோசம்
3. குணசரீரம் - மனோமய கோசம்
4. சூக்கும சரீரம் - பிராணமய கோசம்
5. தூல சரீரம் - அன்னமய கோசம்

மேற்சொன்ன சரீரங்களில் தூலசரீரம் மட்டும் பிறவி தோறும் மாறும். எனைய நான்கு வகைச் சரீரங் களும் முத்தி பரியந்தம் நிலைத்திருந்து முத்தியில் நீங்கிவிடும்.

*தொடரும்*

**பட்சியோசை**

காலையில் எழுந்ததும் யாருக்கு உபதேசம் செய்கிறாய்

**கிரகணங்கள்**

நீங்கள் மூவரும் நேர்கோட்டில் நிற்கிறீர்களே எப்போது ஓட்டப் பந்தயம்?


**தானம்**

மரங்களும் தானம் செய்கிறது மேகத்திற்கு நீராவியை!

**இரக்கம்**

மேகங்களுக்கும் இரக்கமிருக்கிறது இல்லாவிட்டால் பூமிக்கு ஏது நீர்?

# விபூதி இடும் முறை



**எந்தெந்த விரல்களால் விபூதியை தொடலாம்? எந்தெந்த விரல்களால் விபூதியை தொடக்கூடாது?**

கோவிலுக்கு சென்று இறைவனை வழிபடும்போது, அங்கே அர்ச்சகர் நமக்கு விபூதியும் குங்குமமும் அளிப்பார். அப்படி அளிக்கப்படும் விபூதியை வாங்கி நெற்றியில் இடும்போது, நாம் அதை எப்படி, எந்தெந்த விரல்களால் எடுத்து நெற்றியில் இடுகிறோம் என்பது நம்மில் பலருக்கு தெரிவதில்லை.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன்படுத்தும் போது தீமையும் சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது கீழே குறிப்பிட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

வலது கையில் வாங்கிய விபூதியை ஒருபோதும் இடது கையில் கொட்டக் கூடாது. வலது கைய்யில் விபூதியைய் வைத்து கொண்டு தான் நெற்றியில் இட்டு கொள்ள வேண்டும்.

ஒரு போதும் எந்த விதமான நியூஸ் பேப்பரிலும் விபூதியை மடித்து கொள்ள கூடாது. நியூஸ் பேப்பரில் என்ன எழுதி உள்ளதோ அதன் படி தீய எண்ணங்கள் வரும். ஆகையால் வெள்ளை நிறக் காகிதத்தில் உங்கள் இஷ்ட தெய்வத்தின் நாமத்தை எழுதி அதனில் விபூதியை வைத்து கொள்வது உத்தமம்.

**கட்டை விரல்**

கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

**ஆள் காட்டி விரல்**

ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் - பொருட்கள் நாசம்.

**நடுவிரல்**

நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் அணிந்தால் நிம்மதியின்மை.

**மோதிர விரல்**

மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

**சுண்டு விரல்**

சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் ஏற்படும்.

**மோதிர விரல் - கட்டை விரல்**


மோதிர விரலாலும், கட்டை விரலாலும் சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விரலால் விபூதியை இட்டுக் கொண்டால் உலகமே வசப்படும். எடுக்கும் முயற்சி வெற்றி பெறும்.

இங்கே விளக்கப்படுவது பிரசாதமாக பெற்ற விபூதியைப்பற்றி மட்டுமே. விபூதியை குழைத்து விடுவதற்கு வலது கரத்தில் கொஞ்சம் விபூதியை எடுத்துக் கொண்டு சிறிது தண்ணீர் சேர்த்து இடது கை விரல்களால் குழைத்து பின்னர் வலது கை ஆள்காட்டி விரல் நடுவிரல் மற்றும் மோதிர விரல்களால் நெற்றியிலும் இரண்டுகரங்கள், தோள்பட்டை முதுகு வயிறு போன்ற இடங்களில் இட்டுக்கொள்ளவேண்டும். இடதுகை விரல்களினால் வலது கரத்தின் மணிக்கட்டு, முழங்கை புஜம் போன்ற இடங்களில் இட்டுக்கொள்ளலாம்.

*பாலுந் தேனும் உடலுக்கு உறுதி;*
*வேலும் மயிலும் உயிருக்கு உறுதி.*

*சிந்தனையும் தெய்வ வந்தனையும்*
*மனிதனுடைய வாழ்வை உயர்த்துகின்றன.*

# இறைவன் பவனி வரும் இசை



இராஜவாத்யம் என்று போற்றப்படும் நாதசுரம் இசையையும், தெய்வீகத் தன்மையையும் ஒருங்கிணைக்கும் பாலமாக விளங்குகின்றது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றக் காதையில் வரும் 'வங்கியம்' என்ற கருவிக்கு அடியார்க்கு நல்லாரால் வகுக்கப்பட்டுள்ள இலக்கணம் காவும் நாதசுரத்திற்குப் பொருத்தமாக உள்ளது. சிலப்பதிகாரத்திற்கு முந்தைய காலத்து நூலாகிய அகத்தியர் சூத்திரங்களிலும், பிற நூல்களிலும் ஒவ்வோர் அங்கங்களின் அதிதேவதைகளும் கூறப்பட்டுள்ளன.

வங்கியம் வாசிக்கும்போது ஏழு துளைகளைப் பற்றி ஏழுவிரல்களால் வாசிக்க வேண்டும்.

இதனால் நாதசுரம் 'எழில்' எனப் பெயர் பெற்றது.

**"ஓங்கிய மூங்கிலுயர் சந்தனம் வெள்ளி கஞ்சம்
தாங்கு கருங்காலி செங்காலி தந்தம் - பூங்குழலாய்
நாதசுரஞ் செய்யவே நன்றென்றா ரிப்புவியில்
பாக மறிந்திடுவோர் பார்"**

என அரபத்த நாவலர் நாதசுர இலக்கண நூலில் கூறியுள்ள பாடலில் இருந்து மூங்கில், சந்தனமரம், வெண்கலம், கருங்காலி, செங்காலி மரங்கள், தந்தம் இவற்றால் நாதசுரம் செய்யப்பட வேண்டும் என்பதை அறியலாம்.

நாதசுரம் ரிக் வேதத்திலிருந்து தோன்றியது என்பதோடு ஒவ்வொரு அங்கத்திற்கும் அதிதேவதைகள் கூறப்பட்டுள்ளன. அடிவட்டம் - சூரியன், மேற்சுற்று - அஷ்ட நாகம், மேலிடுசில் - சந்திரன், மேற்சிறுதுளை - சத்தி, உட்பெரும் துவாரம் - விஷ்ணு, சந்தை எனும் பகுதி - பிரமன், ஏழு துளைகள் - சப்த மாதர்கள், எழுகின்ற நாதம் - சிவபெருமான் எனப்பின்வரும் பாடல் கூறுகிறது.

**"இருக்கு வேதத்திலே நின்றேழு நாதசுரத்தின் தோற்றம்
அருக்கானா முன்செய் வட்டமட்ட மாநாகங்குழல்
சுருக்கமாஞ்சில்லே சோமன் தோன்றி பொள்ளல் சத்தி
பெருக்கமா முட்டு வானம் மாலெனப் பேசுவாரே"**

ஆலயங்களில் நடைபெறும் அனைத்துச் சடங்கு முறைகளிலும் நாதசுர இசை இடம் பெறுகிறது. கோவில்களில் தினப்படி நடைபெறும் நாதசுரத்தின் இசை முறையையும், திருவிழாக்காலங்களில் இசைக்கப்படும் திட்டங்களையும் ஊன்றி நோக்கினால் ஓர் உண்மை புலப்படும். கையாளப்படும் ராகங்களையும் பாடல்களையும் கேட்கும் போதே கடிகாரத்தின் உதவியின்றியே நேரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

காலை 4 மணி சுமாருக்குப் பூபாளம், பௌளி, மலையமாருதம். காலை 6 மணிக்குப் பிலஹரி, கேதாரம். உச்சிவேளையில் முகாரி, பூரண சந்திரிகா மாலை 2 மணிக்கு மேல் நாட்டைக்குறிச்சி, உசேனி. மாலை 4 மணிக்கு பூர்விகல்யாணி, கல்யாணி, மந்தாரி. மாலை 6 மணிக்கு மேல் சங்கராபரணம், பைரவி. இரவு 8 மணிக்கு காம்போதி, தோடி. இரவு 10 மணிக்கு மேல் ஆனந்த பைரவி, நீலாம்பரி. நடுநிசியில் பேகடை, சாமா. இரவு 2 மணிக்கு மேல் 4 மணி வரை மோஹனம், இந்தோளம் போன்ற ராகங்களை முறைப்படி வாசிப்பது வழக்கம்.

செவியுணர்ச்சி ஒரு பக்கம் பெருக, இசையைக் கேட்டவுடன் காலநிர்ணயமும் ஆகும். கோயில் கால அட்டவணைப்படி காலை முதல் இரவு வரை கோயிலில் நடைபெறும் எல்லாவகை வழிபாடுகளையும் அப்போது பாடப்படும் இசையைக் கேட்டே தொலைவில் உள்ளோர் மனக்கண்ணால் கண்டு களிக்கலாம்.

நேரத்திற்கேற்ப இராகங்களும் பாடல்களும் வகுத்ததுபோல உற்சவ காலங்களில் இறைவன், பவனி வரும் இடங்களுக்கேற்பவும், தகுந்த இசை வகுத்துள்ளனர்.

பவனி வரும் இறைவனின் மண்டகப்படித் தீபாராதனைக்கு நைவேத்தியம் எடுத்துவரும் போது மிஸ்ரமல்லாரி தீபாராதனைக்குத் தேவாரம், திருப்புகழ் வாசிப்பது வழக்கம். ஆண்டவன் புறப்பாட்டு முன் தவிலில் "கண்டநடை"யில் அலாரிப்பு வின்யாசம் நடக்கும். சுவாமி தூக்கும் பணியாளர்கள் அலாரிப்புக் கேட்டதும் பல திக்குகளிலிருந்தும் வந்து தயாராக நிற்பர். இதைத் தொடர்ந்து நாதசுரத்தில் நாட்டை ராக ஆலாபனை கேட்டதும் பக்தர்கள் சுவாமி புறப்பாட்டுத் தரிசனத்திற்குக் கூடுவார்கள்.

வழிபாட்டை ஆதாரமாகக் கொண்டு ஆண்டவன் திருப்பணியிலீடுபட்டு தனது இசையின்மூலம் மக்களுக்கு இசை உணர்ச்சியையும், இசையறிவையும் வளர்ப்பதற்கு நாதசுரம் பயன்படுகிறது. வேற்றுமை பல இருந்தாலும் வழிபாடு, இசை, தொழில் கல்வி ஆகிய பல துறைகளையும் ஒன்றுபடுத்தும் தனிப் பெருமை நாதசுர இசைக்கு உள்ளது.




உடல் ஆரோக்கியமாக இருக்க மனம் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். உடல் ஆரோக்கியம் என்பது, மருத்துவர்களையோ, மருந்துகளையோ சார்ந்திருப்பது இல்லை. மனநலத்தை சார்ந்தே பெரும்பாலும் அமைகின்றது. உடலும், மனமும் ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளது. மன வளம் மகிழ்ச்சியான சூழ்நிலைகளால் பாதுகாக்கப் படுகின்றது. கவலை தரும் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகின்றது. மருந்துகள், மாத்திரைகள், உணவுகள் எல்லாம் இரண்டாம் பட்சமான பாதுகாப்பே ஆகும்.

உடலின் எல்லா இயக்கங்களையும் கட்டுப்படுத்துகின்ற சக்தி மனத்திற்கு உண்டு. மன உறுதியுடன் உடலின் உறுதிக்கு ஆதாரம். உறுதியான உடலை நோய்கள் பற்றுவதில்லை. அப்படியே எளிதில் விலகிவிடும். ஆகவே மனத்தின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடக் கூடாது.


நல்ல எண்ணங்களை மனத்தில் பதிய வைத்தல் வேண்டும். சாத்விக உணவுகள், அதாவது இயற்கையான பச்சையாகச்சாப்பிடும் பழங்கள், காய்கள், பழ ஜுஸ்கள் போன்றன அன்றாட உணவில் அதிகம் இடம் பெறச் செய்தல், மற்றும் சமைத்த சைவ உணவுகளும் உட்கொள்ளலாம். இவைகள் யாவும் மிதமான அளவில் உட்கொள்ள வேண்டும். உணவுக்கும் மனத்திற்கும் நிறையத்தொடர்புகள் உண்டு. உடற்பயிற்சிகள், யோகாசனம், தியானம் போன்றன தினம் காலை, மாலை சுமார் 20 நிமிடம் செய்தால் போதும். இவைகளால் உடல் பலப்படும். மனத்தில் நல்ல எண்ணங்கள் உருவாகும்.

கடவுள் வழிபாடு, ஆன்றோர்கள், சான்றோர்கள் அறிஞர்கள் போன்றோர்களின் அறிவுரைகளை அடிக்கடி கேட்டல், இயன்ற வரை அவைகளை அன்றாட வாழ்வில் பின்பற்றல், அவர்களோடு தொடர்பு கொள்ளல், நல்ல புத்தகங்கள் படித்தல் போன்றன.

ஒழுக்கமான வாழ்க்கையினைப் பின்பற்றல், உணவு, உடை, பேச்சு முதலியன எளிமையாகவும், அளவாகவும், சுத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.

உடலுக்கும் மனத்திற்கும் போதுமான ஓய்வு, வாரம் ஒரு நாள் உபவாசம், தேவையான உடலுழைப்பு, தேவையான வருமானம் ஏற்படுத்திக் கொள்ளல்.

இவைகள் யாவும் மனம், உடல் ஆகிய இரண்டையும் ஆரோக்கியமாகவும், இளமையாகவும் எப்போதும் வைத்திருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம்.



ROYAL HOSPITAL (PVT) LTD

*Care...when and where you need it most*


EMERGENCY SERVICE 24 HOURS 2 559268

# GET THE BEST MEDICAL CARE EVERYWHERE

- அதி நவீன மருத்துவ வசதிகளுடன் தேர்ச்சி பெற்ற மருத்துவ நிபுணர்களின் சேவையைப் பெற உங்கள் அருகாமையில் உள்ள வைத்தியசாலை.
- உயரிய தரத்தில் சிநேகபூர்வமான பராமரிப்புச் சேவைகளுடன் நவீன வசதிகளைக் கொண்ட நோயாளர் அறைகள், உயர் தரத்திலான ஆய்வுகூட மற்றும் பாமசி வசதிகள்.
- எளிதில் எவரும் வந்து சேரக்கூடிய தூரத்தில் அமையப்பெற்றுள்ள ரோயல் ஹொஸ்பிடல் ஏராளமான வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது.



62, W.A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.
Tel : 2586581, 2584212, 2597565, 2559268
Fax: 2597698
E-mail: manager@royalhospitals.com



# அரோகரா

'அரோஹரா' அல்லது 'அரோகரா' என்பது 'அர ஹரோ ஹரா' என்ற சொற்களின் சுருக்கம் இதற்கான பொருள்.

'இறைவனே, துன்பங்களை நீக்கி எங்களுக்கு நற்கதியை அருள்வாயாக' என்பதாகும்.

முன்பு, சைவர்கள் (சைவ சமயத்தினர்) இதனைச் சொல்வது வழக்கமாக இருந்தது. திருஞானசம்பந்தர் ஒருமுறை பல்லக்கில் அமர்ந்து பயணம் செய்யும்போது, அவரைச் சுமந்துகொண்டு வந்தவர்கள்

'ஏலே லோ ஏலே லோ'

...என்று களைப்பைக் குறைப்பதற்காக பாடிக்கொண்டு வந்தனர். இதைச் செவிமடுத்த திருஞானசம்பந்தர், பொருளற்ற ஒன்றைச் சொல்வதைவிட பொருளோடு ஒன்றைச் சொன்னால் நல்லது என்று,

'அர ஹரோ ஹரா' என்பதைக் கற்றுக்கொடுத்தார். அதன் பிறகு 'அர ஹரோ ஹரா' என்றுச் சொல்வது வழக்கமாயிற்று, காலப்போக்கில் சைவர்கள் இதனைச் சொல்லும் பழக்கம் குறைந்தது. ஆனால், கௌமாரர்கள் (முருகனடியார்கள்) 'வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா' என்றுச் சொல்வது. 'வெற்றி வேலைக் கொண்ட முருகனே, எங்கள் வாழ்க்கையில் இருக்கும் துன்பங்களைப் போக்கி, நற்கதியை அருள்வாயாக'

என்று உரிமையோடு முறையிடுவதாகும். முருகனே முழுமுதல் இறைவன் என்ற நம்பிக்கையைக் கொண்டவர்கள் இனி. 'வெற்றிவேல் இறைவனுக்கு அரோகரா' என்று உற்சாகமாகச் சொல்வோமே!



# கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை?

கழு என்றொரு கோரைப்புல் வகை உண்டு. அந்த வகை கோரைப்புல்லை கொண்டு பாய் பின்னும் போது கற்பூர வாசனையை உணரமுடியும், கழு கோரைப் புல்லினால் பின்னப்பட்ட பாயின் அருகில் தேள், பூரான் உள்ளிட்ட விஷபூச்சிகள் நெருங்காது. மேலும் கழு கோரைப் புல்லை கொண்டு பின்னப்பட்ட பாய்களில்படுத்து உறங்கினால் இயற்கையாகவே அதனுடைய மணமான கற்பூர வாசத்தினை நமது நாசிகள் உணரும். அதன் மருத்துவ குணங்கள் உடல் நலனைக் காக்கும். இப்படியாக "கழு தைக்கு தெரியுமாம் கற்பூர வாசனை" என்ற சொல் மருவி கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை என்றானது.

இனி நாம் இந்த பழமொழியை சரியாக சொல்வோமா?


LOTUS MANAVARAI
Manavarai
Maalai
Kolam
Kumbam
Vaalaimaram
Thiruthongal
Iyer (Kurrukal)
Melam
Wedding Car
820, Point Road, Nallur, Jaffna.
Tel: 077 552 6060 / 077 348 4932 Email: lotusmanavarai@gmail.com

*Learn to Drive with a Smile...*

# CITY DRIVING SCHOOL

## IN WELLAWATTE

(Reg No - DS/390)



- Defensive Driving Classes
- Private Lessons in A/C Cars
- Reassuring, Calm & High Qualified Instructors
- International Driving License
- Free Home Pick-up (Limited Area)
- Weekend & Weekday Classes
- No Hidden Costs
- Lady Instructor for Ladies

## Luxury Dual A/C Van For Your Tours!



# BEST TIME TRAVELS & TOURS

- Wedding Hire
- Island wide Tours
- Round Tours
- Local Trips
- Airport Pickup & Drop
- Day Hires

**Hotline: 0777 344 844**

No: 289 1/1, Galle Road, Colombo 6. Tel: 0112 505672

தேவர்களும் பிறப்பெடுக்க விரும்பும் மானிட பிறப்பில், செய்வதற்கு எத்தனையோ இருக்கின்றது. இது தெரியாமல் மாயையில் திளைத்து பொறாமை, கோபம், துவேஷம், உதாசீனப்படுத்துதல் போன்ற செயல்களில் நாம் உழன்று கொண்டிருக்கிறோம். புனரபி ஜனனம் புனரபி மரணம் என்பது போல், இந்த லோகத்தில் பிறப்பதும், இறப்பதுமான சுழற்சி நடந்து கொண்டிருக்கிறது. எதற்காக இந்த மனித ஜென்மம் எடுத்திருக்கிறோம்? என்று கேட்கிறார் சாயிபாபா. பலவகையில் வழி தவறி ஓடும் மனதை, அவர் மீது வைத்து கவலையில்லாமல் இருக்கும்படி கூறுகிறார். வழி தவறிய மனதை பாபாவிற்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்றால், முதலில் நம் மனதை நாமே கட்டுப்படுத்தி, அதற்குப் பிறகு பகவானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். அவ்வாறு, நம் மனதை கட்டுப்படுத்த வேண்டுமென்றால், அது பூரண விசுவாசத்துடன் செய்யப்படும் பூஜை, பஜனை, பாராயணம், ஸத்ஸங்கம் மூலமாக மட்டுமே முடியும்.

கலியுகத்தில் நாமஸ்மரனை மட்டும் போதும் என்கிறார் சாயி. கண்மூடித்தனமாக இல்லாமல், எனது பக்தர்களாக இருக்கிறீர்கள் என்பதை நினைத்து, கவனத்தோடு மனதை ஒருமுகப்படுத்திக் கொண்டு, எனது நாமத்தை ஸ்மரனை செய்தால் போதும் என்கிறார் பாபா. நான் எங்கும் வியாபித்து இருக்கிறேன் நான் உங்களுக்கு சீரடி கிராமத்திலேயே இருக்கிற மாதிரி தெரிந்தாலும் இந்த உலகத்தில் நடக்கிற ஒவ்வொரு விடயமும் எனக்கு தெரியும். உலகத்தில் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஆனால் ஒன்று மட்டும் நன்றாக தெரிந்து கொள்ளுங்கள் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு வேலையும் நிழலாட்டும் பார்த்துக்கொண்டே தான் இருக்கிறேன். என்னிடம் நம்பிக்கையோடு வேண்டினால் தாம் வேண்டியது நிச்சயம் கிடைக்கும், என் முன்னாடி கையேந்தும் பக்தர்களுக்கு நான் வெறும் கையுடன் போகவிடமாட்டேன். இந்த உலகத்தில் எந்த மூலையில் இருந்து வேண்டினாலும் நான் ஓடோடி வந்து ஏதோ ரூபத்தில் உங்கள் முன்னாடி வந்து காப்பேன். இந்த அண்டம் என் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடக்கும், நம் வாழ்க்கையை நிச்சயம் இவர் காப்பாற்றுவார் என என்னை நினைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு நிச்சயம் உயர்ந்த வாழ்க்கையை கொடுப்பேன். வாழ்க்கையின் இறுதி கட்டத்தில் என்னுடன் ஐக்கியம் ஆக்கிக்கொள்வேன்.

"ஓம் ஸ்ரீ சற்குரு சாய் நாதாய சரணம் குருவே சரணம், குருநாதாய சரணம் ஓம் ஜெய் சாய்ராம்"

என் அன்புக் குழந்தையே! ருணானுபந்தம் உன்னை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தது முதல், என் மீது நீ எவ்வளவு பிரியமாய் இருக்கிறாய் என்பதை நினைத்து வியந்து நிற்கிறேன். பிறரைவிட எனது குழந்தையாகிய நீ மிகவும் வித்தியாசப்படுகிறாய் என்று பிறர் உன்னைப் பாராட்டும் வகையில் இருக்கும். உனது நடவடிக்கைகளால் நான் மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைகிறேன். பிறர் மீது நீ காட்டும் அன்பும், உனது பரோபகார சிந்தனையும், நடவடிக்கைகளும், பக்தி எல்லாவற்றினாலும் என் பெயரின் பெருமையை நீ உயர்த்தியிருக்கிறாய். இதற்காக நான் என்ன கைமாறு செய்ய முடியும் என தவிக்கிறேன். இவ்வளவு சிறப்பாக செயல்பட்டாலும் உன்னிடம் சிறுசிறு குறைகளை காணும்போது துக்கமாகவும், தலை குனிந்தும் நிற்கிறேன். அவற்றை நீ கைவிட வேண்டும் என்பதே எனது விருப்பம்.

*- திருமதி. பாண்டிசாந்தி*
*இந்தியா*





### சகல செல்வங்களும் தரும்

# ஸ்ரீ மகாலக்ஷ்மி

## அடக்கமுள்ள பெண்களிடம் நான் வாசம் செய்கிறேன்..!

புலனடக்கம் உள்ளவனிடம் நான் நித்தியவாசம் செய்கிறேன் என்று மகாலட்சுமி கூறியதற்கு விரிவான விளக்கம் (ஆடவருக்கான) ஏற்கெனவே தந்திருக்கிறோம்...!

அடக்கமுள்ள பெண்ணிடம் நான் வாசம் செய்கிறேன் என்கிற இத்தலைப்பிற்கும் அது பொருந்தும் என்பதால் பெண்கள் அதனை வாசித்து அறிந்து கொள்ளலாம்...!

பொதுவாக மாமனார்... மாமியார்... கணவன்... மற்றும் சுற்றத்தார் அனைவரிடமும் அன்பாகவும், பணிவாகவும் நடந்து கொள்வதே ஒரு பெண்ணுக்கு தனி அழகைக் கொடுக்கக்கூடியது. அந்த அழகே அடக்கம் என்று மதிப்பிடப் படுகிறது...!

அத்தகைய பெண்களிடத்தில் நான் தவறாது வசிக்கிறேன் என்று மகாலட்சுமி கூறியிருக் கிறாள்..!

பொதுவாகவே பெண்கள் மென்மையான குணம் படைத்தவர்கள்...! ஆண்களைக் காட்டிலும், பெண்களுக்குத்தான் சகிப்புத் தன்மை அதிகம்...!

இந்த சகிப்பத்தன்மைதான் ஆதிசக்தி அவர்களுக்கு கொடுத்திருக்கும் வரப்பிர சாதமாகும்..!

இந்த உலகம் வலப்பக்கமாகவே சுழன்று கொண்டிருக்கிறது...!

அதனால்தான் திருமணம் ஆனதும் மணப்பெண் வலது காலை வைத்து வரவேண்டும் என்று சொல்கிறார்கள்..!

பிறந்த வீட்டில் இருக்கும்போது ஒரு பெண் ஏதாவது குற்றம்... குறை செய்துவிட்டால் பெற்றோர்கள் பாசம் காரணமாக அவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள்!

ஆனால் அதே பெண் புகுந்த வீட்டிற்குச் செல்லும்போது பல மாறுபட்ட உறவுகளை சந்திக்க வேண்டியவளாக இருக்கிறாள்..!

அந்த சூழலில் அவள் ஏதேனும் தவறு செய்தால் அவர்கள் அதனைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்! ஆகவே திருமணம் ஆன ஒரு பெண் ஒரு புதிய உலகத்திற்குள் பிரவேசிக்கிறாள்..!

அந்த உலகத்திற்கு தகுந்தாற்போல் அவளுடைய அணுகுமுறைகள் இருக்க வேண்டும் என்பது கருத்தாகும்...!

இவ்வுலகம் வலப்பக்கமாக சூழல்கிறது! அதேபோல் மணப்பெண்ணும் இந்த உலகத்தை அனுசரித்து அதற்குத் தகுந்தவாறு நடந்து கொள்ள வேண்டும்...!

அதற்கு நேர்மாறாக நடந்தால் இவ்வுலகத்தாரால் அவள் தூக்கி எறியப்படுவாள்..!

ஆகவே புகுந்த வீட்டில் வாழும் பெண் அடக்கத்துடன் வாழ வேண்டும்..!

உறவினர்களை அனுசரித்து வாழ வேண்டும்..!

அன்பு காட்டி வாழ வேண்டும்..!

தன்மானத்துடன் வாழ வேண்டும்..! இதைத்தான் அடக்கம் என்று சொல்கிறோம்...! அடக்கம் என்பது தன்மானத்தை விடுவது என்பது பொருளல்ல...!

சுயமரியாதை இழப்பது என்பது பொருளல்ல..! மனசாட்சிக்கு விரோதமாக மற்றவர்களுக்கு அடிபணிவது என்பது அர்த்தமல்ல...!

உண்மையான அன்பு..! நேர்மையான அணுகுமுறை...! பெரியவர்களிடத்தில் அடக்கம் கலந்த மரியாதை! இதுவே பெண்ணின் குடும்ப லட்சணமாகும்..! இப்படிப்பட்ட பெண்தான் மகாலட்சுமியின் வடிவாக மாறுகிறாள்...!

அப்படிப்பட்ட பெண்ணையே மகாலட்சுமியும் விரும்புகிறாள்...! அந்தப் பெண் வாழும் இடத்தில் செல்வம் குவியும்..! குல விளக்காக.. குடும்ப விளக்காக அவள் திகழ்வாள்...!

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.**

என்று வள்ளுவர் பெருந்தகை கூறுகிறார்...! ஆண்.. பெண் இருதறத்தாருக்கும் இது பொருந்தும்...! அடக்கம் ஒருவரை தேவர்கள் இனத்தில் சேர்க்கும். அதாவது செல்வச் செழிப்பில் சேர்க்கும் என்பது இதற்கு அர்த்தம். அடக்கமில்லாதிருத்தல் தீய வாழ்க்கையில் சேர்க்கும் என்று பொருளாகும்.

தீய வாழ்க்கை என்பது வறுமைத் துன்பத்தில் ஆழ்த்தும் என்பதாகும்...!

அறிய வேண்டியவற்றை அறிந்து அடங்கி வாழும் உறுதியை ஒரு பெண் பெற்றுவிட்டால் அது நல்லோர்களால் அறியப்பட்டு எல்லாவித நன்மைகளையும் கொடுக்கும்...!

அதனால்தான் அடக்கமுள்ள பெண்ணிடம் நான் நீடித்து வாசம் செய்கிறேன் என்று மகாலட்சுமி கூறியிருக்கிறாள்.

அடக்கமாக வாழ்ந்து பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமைத் தேடி தரக்கூடிய பெண்ணே ஐஸ்வர்யம் பெருகுவதற்குக் காரணமாக இருக்கிறாள்!

தொடரும்

# திருமாங்கல்யம்



"மாங்கல்யம் தந்துனா னேன
மம ஜீவன ஹேதவே
கண்டே பத்னுமி சுபகே
சஞ்சீவ சரதஸ ஸதம்"

என்பது தாலியை எடுத்து மணமகளுக்குக் கட்டும் போது சொல்லும் மந்திரம், "நான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமான இந்த மங்கள நாணை உன் கழுத்தில் கட்டுகிறேன்." ஓ! சுமங்கலியே நீயும் இதனால் பல வருடம் ஜீவித்திரு" என்பது மந்திரத்தின் பொருள். மங்களநாண் மணப்பெண்ணுக்கு ரஷையாகிறது. திருமணமாவதற்கு அடையாளச் சின்னமாகிறது. சுமங்கலித்துவத்தைத் தர மங்களச் சின்னமாகிறது.

பெண்களுக்குத் திருமணமாகி விட்டது என்பதைத் தெரிவிக்கும் அடையாளச் சின்னம் திருமாங்கல்யம் எனப்படும் தாலி. அப்படியானால் ஆண்களுக்குத் திருமணம் ஆனதற்கு என்ன அடையாளச் சின்னம் என்ற கேள்வி பிறக்கும். அதற்கும் அடையாளச் சின்னம் இருந்தது. கால்களில் அணியும் மெட்டி அல்லது மிஞ்சி முற்காலத்தில் திருமணமான ஆண்களின் கால்களில் இருந்தது. ஒருவன் மணமான ஆடவன் என்பதைத் தெரிவிக்க காலில் மெட்டிஅணிவித்தார்கள். (பின்னால் ஆண் அதிக சுதந்திரத்தை விரும்பி, மெட்டியையும் பெண்ணுக்கே அணிவித்து விட்டான்.)

JOY GLORIOUS
Cosmetic & Fashion Jewellery
கேள்வி-பதில் போட்டி!



வெற்றியாளருக்கு
பெறுமதி வாய்ந்த பரிசு!

வாயுவின் புத்திரன் யார்?


- பைரவன்
- ஆஞ்சநேயன்
- இரனியன்

Call Now & Win

FLEX Publications - 0778 335 552 1st July-18th July Call Monday-Friday From 9am - 5pm

# யோகா கற்றுக்கொள்ளுங்கள்

## உத்தனாசனா




- தடாசனாவில் நிற்கவும். கால்களுக்கு இடையில் சிறிய இடைவெளி இருக்க வேண்டும்.
- மூச்சை வெளிவிட்டுக் கொண்டே குனிந்து உள்ளங்கையை பாதத்துக்கு வெளியில் தரையில் பதிக்க வேண்டும்.
- தலையை மேலே தூக்கி முதுகை நடுவில் வளைத்து இரண்டு முறை மூச்சு விடவும்.
- மூச்சை வெளிவிட்டு தலையை முழங்கால் மேல் நன்றாக பதிக்கவும். இந்த நிலையில் அரை நிமிடம் நிற்க வேண்டும்.
- மூச்சை இழுத்து தலையைத் தூக்கி தடாசனா வரவும்.

**பலன்கள்:**

கால்கள் நன்றாக நீட்டப்படுகின்றன. முதுகுப் பகுதியிலுள்ள இறுக்கம் நீக்கப்படுகிறது. தலை குனிந்த நிலையில் இருப்பதால் மூளைக்குத் தேவையான குளிர்ச்சியான சூழல் கிடைக்கிறது. இதுதான் தாய் ஆசனம். இதிலிருந்து சற்று வேறுபட்டவைதான் பாதாங்குஸ்தாசனாவும், பாதஹஸ்தாசனாவும்.

தொடரும்

## ஏ, மனிதா!



காக்கைக்
கட்சிக்காகக்
கூட்டத்தை
அழைப்பதில்லை
பகுத்துண்ண
கரைகிறதே?
பூக்கள் பூத்தபோது
சடங்கு நடத்துவதில்லை
எறும்புகள் உழைப்புக்காக
வருந்தியதில்லை.
ஈசல்கள்
வாழ்வை எண்ணிக்
கவலைப்பட்டதில்லை.
எந்தப்
பட்சியும்
வேலை தேடி
அலைந்ததில்லை
ஏ மனிதா!
நீ மட்டும்
இப்படி
எதற்கும்
கவலையுறுகிறாய்?

## நன்கொடை

ஆலயத்திற்கு நீங்கள் நன்கொடை
செய்தால் நாம் கடவுளை அருகில்
சென்று பார்க்கலாம்.
ஆனால்...

அனாதை இல்லத்திற்கு
சென்று நன்கொடைச் செய்தால்
அவர்கள் கடவுளாக
உன்னை காண்பார்கள்.



## ஆன்மீக வினாவிற்கான விடையை கூறி பரிசு பெறுங்கள்!

முப்புரங்களை எரித்தமையால் சிவபெருமான் எப்பெயரைப் பெற்றார்?

- ஈசன்
- கைலைவாசன்
- திரிபுராந்தர்

Call Now & Win பக்தி பாடல்கள் Audio CD


LUCKY CD WORLD MUSIC CENTRE
முன்னணி பாடகர்கள் பாடிய பக்திப்பாடல்கள் இங்கு கிடைக்கும்
No. 298, Galle Road, Wellawatte.
Flex Publications 0778 335 552
Call Monday - Friday From 9am - 5pm. (1st July-18th July)

# அருள் மொழிகள்



சிறு காவல்படையுடனும், அதிக பணத்துடனும் செல்பவன், ஆபத்தான வழியை விலக்குகிறான், வாழ விரும்புகிறவன் விஷத்தை விலக்குகிறான். அதுபோல ஒருவன் தீமையை விலக்க வேண்டும் செய்த தீய செயலின் விளைவுகள் அணுகாத வண்ணம் தப்பி வாழ்வதற்கு, இந்த உலகில் விண்ணிலோ, மண்ணிலோ, நடுக்கடலிலோ, மலைக்குகையிலோ ஓர் இடம் இல்லை.

**- புத்தர்**




ஒருவன் விலங்கின் இறைச்சியை விரும்பி புசிப்பவனாக இருக்கலாம். ஆயினும் அவனுக்கு, இறைவனிடம் ஈடுபாடு இருக்குமாயின் அவனே பாக்கியவான். அதே நேரத்தில் ஒருவன் சைவ உணவை உட்கொண்ட போதிலும், அவனது உள்ளம் பெண்ணாசை, பொன்னாசையில் சிக்கிக் கிடக்குமாயின் அவனை மனிதப்பதர் என்று சொல்வேன்.

**- ராமகிருஷ்ண பரமஹம்ஸர்**



உலகம் நமக்கு எப்படித் தோன்றுகிறது என்பது நமது மனப்பான்மையைப் பொறுத்தது.நமது எண்ணங்களே பொருட்களை அழகானவை ஆக்குகின்றன அவற்றை விகாரமானவை ஆக்குவதும் நம் எண்ணங்களே. உலகம் முழுவதும் நம் மனதில்தான் இருக்கிறது. எதையும் சரியான முறையில் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். முதலில் இந்த உலகத்தை நம்புங்கள்.

**- சுவாமி விவேகானந்தர்**



நல்லது செய்தால் இறைவன் நமக்கு கைகொடுப்பார். குறிப்பாக கை, கால், கண்களை வழங்கிய இறைவன், சிந்திப்பதற்கு புத்தியும் வழங்கியுள்ளார். சக்தியும், புத்தியும் இருப்பதற்குள் நல்ல செயல்களை தொடர்ந்து செய்ய வேண்டும் சேதுவில் அணைக்கட்டிய ராமனுக்கு அணில் செய்த உதவி போல நாம் எல்லோரும் ஏதாவது ஒரு திருப்பணியில் ஈடுபட்டுத் தர்மம் செய்ய வேண்டும்.

**- காஞ்சி பெரியவர்**



அன்னதானம் செய்பவன், கல்விக்காக நிதியுதவி அளிப்பவன், கடன் என்பதே இல்லாமல் வாழ்பவன், போர்க்களத்தில் தைரியமாக முன்நிற்பவன் - இவர்களே உயர்ந்தவர்களாக போற்றப்படுவர். இளமையில் வளையாவிட்டால் முதுமையில் அல்லல் பட வேண்டி வரும். இளமைப் பருவம் உழைப்பதற்கு ஏற்றது. அதன் அருமையை உணர்ந்து பணியாற்றுங்கள். அப்போதுதான் வாழ்க்கை உங்களை வளமாக்கும்.

**- கிருபானந்த வாரியார்**



# முருகனின் அருள் பெற்றோர்

முருகன் அருள் பெற்றவர்களே முருகனை நமக்குக் கண்டு காட்டுகிறவர்கள். இலக்கியங்களாலும், இனிய உபதேசங்களாலும் நம்மை முருகன் திருவடிக்கு அழைத்துச்செல்வதால் அவர்களே நமக்கு நல்லாசிரியர்கள். அவர்களில் சிலரைப்பற்றி இங்கே அறிந்துகொள்வோம்.

**அகத்தியர்:** இவர் செந்தமிழ் முனிவர், ஸ்ரீ கந்தமூர்த்தி செந்தமிழ் நாட்டை அகத்தியருக்குக் கொடுக்க, அகத்தியர் பாண்டியனுக்குக் கொடுத்தார் என்று திருநெல்வேலித் தலபுராணம் கூறுகிறது. ஒரு காலத்து நைமிசாரணிய முனிவர்கட்கும் அகத்தியருக்கும் கருத்து மாறுபாடு விளைந்தது. அதனால் நைமிசாரணிய வனத்தைவிட்டு அகத்தியர் பொதிகைமலையை அடைந்தார் அங்கு ஒரு ஆசிரமம் அமைத்துக் கொண்டு கந்தமூர்த்தியை வழிபட்டு வந்தார். ஒருநாள் மாலைக்காலத்தில் தெய்வமணம் வீசியது. அது எதன் மணம் என்று அறியாத அகத்தியர் அறுமுகப்பண்ணவனைப் (முருகனை) பிரார்த்தித்தார். அவனருளால் அது தெய்வத்தமிழ் மணம் என்று சிந்தை தெளிந்து அறுமுகப் பெருமானையே ஆசானாகக்கொண்டு ஓதியுணர்ந்து இலக்கணமும் தந்து எழில்பெறத் தமிழை வளர்த்தார்.

சிவபெருமான்.. திருக்கல்யாணத்தின்போது தெற்கு (தமிழ் நாடு) நோக்கி வந்த அகத்தியர், கிரவுஞ்ச் மலையின் மாயையில் சிக்குண்டு தவித்தார். பிறகு சிவபெருமான் திருவருளால் தெளிந்து “ஏ கிரவுஞ்சமே, அரண் அடிமையாகிய என்னை மயக்கியமையால் நீ குமாரக்கடவுளின் வேலாயுதத்தால் பிளப்புண்ணுக” என்று சாபங்கொடுத்தார். அங்ஙனமே குமாரக்கடவுள் கிரவுஞ்ச மலையைப் பிளந்தார் என்பது காசிகாண்ட வரலாறு

கொல்லாபுரத்தில் அகத்தியர், திருமகளை எல்லாச் செல்வமும் தந்தருளுக' என வேண்டிப் பூசித்தார். திருமகள் அவர்முன் எழுந்தருளி உனக்கு வேண்டிய எல்லாவற்றையும் குமரவேளே கொடுப்பார் எனக் கூறி மறைந்தனள். அகத்தியர் அங்ஙனமே குமரவேளை வழிபட்டு எல்லாச் செல்வமும் எய்தினர்.

**நக்கீரர்:** கடைச்சங்கப் புலவராய் வீற்றிருந்து இறையனாரகப் பொருளுரை முதலியன கண்டு, தமிழுக்குப் பெரும் பணி புரிந்தவர். சிவபூசை செய்யும்போது சிந்தை சிறிது புறம்போக, அதனால் சிறைப்பட்டு, திருமுருகாற்றுப்படை பாடி, முருகன் அருளால் விடுதலை பெற்றார். இதுவே சிறைவீடு செய்த பாட்டாக இம்மை மறுமை இன்பங்களைப் பயக்கும் எளிய சாதனமாக இயங்குவதை இன்றைய உலகம் அறிந்து பயன்படுத்தி வருகிறது. இவர் வரலாற்றின் விரிவைத் திருவிளை

யாடற்புராணத்தில் கீரனைக் கரையேற்றிய படலத்தும், சீகாளத்திப் புராணத்தும் நன்கு அறியலாம்.

## திருமுருகாற்றுப்படை

**பாரதம் பாடிய பெருந்தேவனார்:** குருந்தொகையில் கடவுள் வாழ்த்தாக முருகனைப் புகழ்ந்துபாடி இருமையின்பமும் எய்தினர்.

**ஔவையார்:** முருகனால் சுட்டப்பழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா என்று நகையாடி வினவப்பெற்று நல்ல பயனைப் பெற்றார்

**ஆத்திசூடி**
**கொன்றை வேந்தன்**
**நல்வழி**
**மூதுரை**
**ஞானக்குறள்**
**விநாயகர் அகவல்**
**நாலு கோடிப் பாடல்கள்**

**அருணகிரிநாதர்:** திருவண்ணாமலையில் வடக்குக் கோபுரத்துக்கு அருகில் உள்ள முருகன் கோயிலில் பன்னெடுநாட்கள் இருந்து முருகன் எழுந்தருளியுள்ள தலங்கள் அவ்வளவுக்கும் சந்தப்பாமாலை சாத்தி நாட்டை உய்வித்தார்.

**ஸ்ரீ அருணகிரிநாதர் அருளியவை:**

| | |
|---|---|
| **திருப்புகழ்** | **சேவல் விருத்தம்** |
| **கந்தர் அநுபூதி** | **கந்தர் அலங்காரம்** |
| **கந்தர் அந்தாதி** | **திருவகுப்பு** |
| **வேல் விருத்தம்** | **திருவெழுகூற்றிருக்கை** |
| **மயில் விருத்தம்** | **மங்கள ஆரத்தி** |

**திருச்செந்தூர் வென்றிமாலைக் கவிராயர்:** இவர் திருச்செந்தூரில் தோன்றி, முருகன் அருளால் 'வென்றிமாலைக் கவிராயர்' என்ற பட்டமும் தாங்கி, திருச்செந்தூர்ப் புராணமும் இயற்றி வன்மையைச் செந்தமிழ்நாடு அறியும்.

**கச்சியப்ப சிவாச்சாரியார்:** காஞ்சி குமரகோட்ட காளத்தியப்ப சிவாச்சாரியருடைய குமாரர். முருகனால் கந்தபுராணம் பாடுக என ஆணையிடப்பட்டவர். இவருடைய புராணத்துக்கு முருகனே 'திகடசக்கர' என அடியெடுத்துக் கொடுத்தார். கந்தப்புராணத்தை அரங்கேற்றும் பொழுது 'திகழ் தசக்கரம்' எனப் பிரித்து உரை விளக்கினார். அவையில் இருந்த புலவர் 'இதற்குப் புணர்ச்சி விதி யாது' என வினவ, முருகனே புலவராக எழுந்தருளி வீரசோழியவிதியைக்கொண்டு அமைதி வகுத்தனர்.

## கந்த புராணம்

**குமரகுருபரர்:** ஸ்ரீ வைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கு அருமை மகவாகத் தோன்றியவர். ஐந்தாண்டு வரையில் ஊமையாக இருந்து முருகனருளால் ஊமை நீங்கப்பெற்று, கந்தர் கலிவெண்பா இன்னும் சாத்திர தோத்திர நூலை இயற்றியவர். பல செந்தமிழ்ச் சிறுநூல்களை ஆக்கித் தந்தவர். இடமிடங்கள் தோறும் கந்தக் கடவுள் கருணையை விளக்கும் கவிதைநலம் சிறக்கப்பெற்றவர் ஸ்ரீ காசி மடத்து முதல்வர்.

## கந்தர் கலிவெண்பா

**தேவராய சுவாமிகள்:** கந்தர் சஷ்டிக் கவசம் என்ற பாராயண நூலைப் பகர்ந்தவர். மக்களுக்கு இன்றியமையாத நலங்கள் பலவற்றையும் முருகன் நல்லருள் கொடுக்குமென்று இந்நூல் கூறுகிறது. முருகனுடைய ஆறெழுத்தருமறை இந்நூல் பலவிடயங்களிலும் பலமுறைகளில் மாற்றி அமைக்கப்பெற்றுள்ளது.

## கந்தர் சஷ்டிக் கவசம்

**ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்:** திருவருட்பா வாயிலாக செந்தமிழ் நாடு இவரை நன்கு அறியும். எங்கெல்லாம் அன்பு வெள்ளமும் அருள் வெள்ளமும் பெருக்கெடுத்து ஓடுகின்றதோ அங்கெல்லாம் இராமலிங்க சுவாமிகளுடைய அருட்பா முழங்கிக் கொண்டிருக்கும். இவர்கள் பிள்ளைப் பருவத்து, நிலைக்கண்ணாடியிலே முருகன் உருவம் முழுவதையும் தரிசித்தார்கள் என்பது வரலாறு. இவர்களுடைய கந்தக்கோட்டப் பதிகம் முருகன் அருள் பெறுவார்க்குச் சிறந்த துணை.


**ஸ்ரீ பாம்பன் சுவாமிகள்:** யாழ்ப்பாணத்திலே தோன்றியவர். பாம்பனிலே வசித்தமையால் பாம்பன் சுவாமிகள் என்று அழைக்கப்பெற்றார். இவருடைய இயற்பெயர் குமரகுருநாத சுவாமிகள் என்பது. சிறந்த முருகனடியவர். இவர் செய்த அற்புதங்கள் மிகப்பல. முருகனைப் பற்றி ஆயிரக்கணக்கான பாடல்களை அருளிச் செய்துள்ளார். சண்முகக் கவசம் சிறந்த பாராயண நூல், மயூரபந்தம் இவர் எடுத்துக்கொடுத்த புதுமையான சித்திரக்கவி. இவருடைய மொழிகள் ஒவ்வொன்றிலும் முருகப்பெருமானுடைய திருவருட் பொலிவு இன்றும் இருப்பதைக் காணலாம்.

**ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் சரித்திர சுருக்கம்**
**சண்முகக் கவசம்**
**குமாரஸ்தவம்**
**பகை கடிதல்**
**பரிபூரண பஞ்சாமிர்த வண்ணம்**
**திருவடித் துதி**
**திருவலங்கற்றிரட்டு**
**ஸ்ரீ சண்முக நாமாவளி**
**சண்முகக் கோட்டம் திருப்பதிகம் 1**
**சண்முகக் கோட்டம் திருப்பதிகம் 2**

**தண்டபாணி சுவாமிகள்**

திருவாமாத்தூரில் தோன்றியவர். முருகனருளால் பல்லாயிரக்கணக்கான பாடல்களைச் செய்தவர். புலவர் புராணம், திருவலங்கல்திரட்டு முதலிய சிறந்த நூல்கள் இவரால் செய்யப்பெற்றவை.

இவ்வண்ணம் முருகக் கடவுளை வழிபட்டு இருமையின்பங்களையும் எய்தினோர் பலராவர். செவ்வாய்க் கிரகத்தின் ஆட்சித்தானமாகிய செந்தமிழ்நாட்டில் செவ்வேள் என்றும் கண்கண்ட தெய்வமாக விளங்குவதைக் கண்டு காட்டுபவர்கள் இவர்களே.



# வளமுடன் வாழ்

சினம் கொள்ளல் தற்கொலைக்கு ஒப்பாகும். சினத்தால் உடலிலே உள்ள உயிர்ச்சக்தி விரைவு கொள்கிறது. குருதி அழுத்தம் ஏற்பட்டு இரத்த வேகம் அதிகரிக்கிறது. கண்கள் சிவக்கின்றன. நரம்புகளில் படபடப்பு ஏற்பட்டு அவை பலவீனமடைகின்றன. கோபமே அனைத்துப் பாவங்களுக்கும் காரணமாவதால் கோபத்தை மாற்றி பொறுமை காக்கவும். இதனை குழந்தைகளுக்கும் கட்டாயம் போதியுங்கள்.

மனிதனுக்கு வேண்டியது துன்பமற்ற வாழ்க்கை. துன்பம் தருகின்ற கவலைகளை ஆராய்ந்து அவற்றை ஒழித்துச் சமுதாயத்துடன் ஒன்றி வாழ வேண்டும். கவலை என்பது ஒருவகை உளநோய். தனது இயலாமையை நினைத்து அல்லது கற்பித்துக்கொண்டு வருந்தி, அமைதி இழந்து இயங்கும் மனோ நிலைதான் கவலை. நினைப்பதற்கும் நடப்பதற்கும் இடையே காணும் முரண்பாடு கவலைக்கு அடிப்படைக்காரணம். நடப்பனவெல்லாம் காரணத்தோடு ஒட்டிய தொடர் விளைவுகளே இந்த இயற்கை ஒழுங்கமைப்பை உணராத அறிவில் எழும் தப்புக் கணக்குத்தான் கவலையை உண்டாக்கின்றது. கவலையை விட்டு விடுங்கள். தைரியம் கொள்ளுங்கள். இந்த நிகழ்ச்சிக்கு அடுத்து, நான் ஆற்ற வேண்டிய கடமை என்ன என்பதில் நில்லுங்கள். உங்களுக்குப் போதிய ஆற்றல் வரும். உறுதுணையாக இருக்கும் வேலைகளை முடிப்பீர்கள். வாழ்க்கை செம்மையாகும்.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் அதற்குச் சமமான எதிர்விளைவுண்டு. இதுதான் இறைநீதி. ஒவ்வொரு செயலையும் மனிதன் செய்கிறான். இறைவன் விளைவைத் தருகிறான். வினைவறிந்த விழிப்புடன் செயலாற்றுகின்ற பிறவி எடுப்பதே விளைவின் விளைவை அனுபவிக்கத் தான் ஞானமே மனத்தூய்மை, கருமையத் தூய்மை, வினைப் பதிவுகளைத்தூய்மை செய்து இறை உணர்வை அளிக்க வல்லது. எனவே செயல் விளைவுத்தத்துவ ஞானம் பெறுவோம்.

# ABBI TECH SYSTEM

**SUN TV, KTV, ESPN, ANGEL TV, STAR CRICKET**

Star Vijay | Sun TV | Mega TV
Chutti TV
Sun Music | Adithya TV
Sun News



இன்னும் 200க்கும் மேற்பட்ட Channels கொண்ட Satellite Antenna மலிவான விலையில் பொருத்தித்தரப்படும்.

உடனடி திருத்தவேலைகள் மற்றும் புதிய இணைப்புகளுக்கு அழையுங்கள்

**0779 000 857**

நீங்கள் வீட்டில் இருந்தவாறே சகலவிதமான Satellite Antennaக்களிற்கும் உடனடி Recharge செய்துதரப்படும்

SUN TV | KTV | ESPN | ANGEL TV | STAR CRICKET

ACCEPTED

**No.7 1/20, Galle Road, Colombo 06. | E-mail : abbitec@yahoo.com | Tel: 011 2591133 / 077 9000857**

# GLAMOURS

**Importers and Suppliers of Beauty Care Products, Imitation Jewellery & Needle Craft Accessories**






















**Cosmetics | Hair Ornaments | Salon Accessories**
**Fashion Jewellery | Tailoring Accessories**




**170C, Galle Road, Dehiwala, Sri Lanka.**
**Tel: 011 273 37 79 | Fax: 011 273 39 29**

**Email : glamourslk@yahoo.com**
**Website: www.glamours.lk**




MANGALDEEP
Wearing your Dream into Reality
No. 06, Sinsapa Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 2500759
Email: kmangaldeep10@gmail.com

# இதுதான் உண்மை!

## அப்பா

உன்னை வயிற்றில்
சுமக்கும் பாக்கியம் எனக்கு இல்லை...
ஆகையால் என் நெஞ்சில் சுமந்து
தீர்த்துக் கொள்கிறேன்...!

## மனைவி

அம்மா அப்பா முக்கியம்தான்..
ஆனால் அதுக்காக
மனைவியை ஒருநாளும்
விட்டு குடுத்து பேசக்கூடாது..
அவ அப்பா அம்மாவையே
எமக்காக விட்டு
வந்த உறவு.

## ருசி

பணக்காரர்களின் உணவை
விட ஏழைகளின் உணவே
அதிகம் ருசிக்கிறது.
ஏனெனில் ஏழைகள் தான்
பசித்து உண்கின்றனர்.

## திரும்ப பெற முடியாதவை

1. உடலை விட்ட உயிர்..
2. பேசி விட்ட வார்த்தை..
3. கடந்து விட்ட நாட்கள்...
4. இழந்து விட்ட இளமை...
5. கொடுத்து விட்ட வாக்கு..

## சிரிப்பு

எவனால் சிரிக்க முடிகிறதோ அவனால்
கட்டாயம் ஏழையாக இருக்க முடியாது.

## சில உண்மைகள்

1. அதிகம் சிரிப்பவர்கள் அதிகம் தனிமையில் வாடுபவர்கள்.
2. அதிகம் தூங்குபவர்கள், சோகத்தில் இருப்பவர்கள்.
3. குறைவாக பேசுபவர்கள், அதிகமாக ரகசியங்களை வைத்திருப்பவர்கள்.
4. அழுகையை அடக்குபவர்கள் மனதால் பலவீனமானவர்கள்.
5. சின்ன சின்ன விஷயங்களுக்கும் அழுபவர்கள் அப்பாவிகள் மனதால் மென்மையானவர்கள்.
6. சின்ன சின்ன விஷயங்களுக்கும் கோபப்படுபவர்கள் அன்புக்காக ஏங்குபவர்கள்.

# ஆன்மீக ஹைக்கூ

### புத்தி

மற்றவர்க்குப் புகட்ட
எளிய மருந்து தமக்கு...
ஒவ்வாமை

........

### மனக்கவலை

இருந்த இடத்தையே
அரிக்கும் கரையான்

### விலை

மண்பாண்டம் ஆகும் வரை
மண்ணுக்கும் தெரிவதில்லை
அதன் விலை..

### சிலைகள்

இறையுணர்வு தாக்கம்
சிற்பியின் மனவெளிப்பாடு
நம்பிக்கையின் புகழ் நிலைப்பு

........

### கோவில் நகை

கள்ளழகருக்கு அழகு தரும்
கள்ளருக்குத் தூது விடும்

# என் இனிய கால்கள்



கால்கள் வலுவாக இருந்தால்தான்,ஓடியாடி உழைக்க முடியும்.ஓடி யாடி உழைத்தால்தான், வாழ்வில் உயரமுடியும்.

முதலில், கால்களை நீட்டி உட்கார்ந்து கொள்ளுங்கள். இரண்டு பாதங்களையும் சுமார் ஒன்றரை அடி இடைவெளியில் அகற்றி வைத்துக் கொள்ளுங்கள். பாதங்களின் விரல்கள், வெளியே பார்த்தபடி இருக்கிறதுதானே?! இப்போது இரண்டு கைகளையும் பின்பக்கமாக ஊன்றிக் கொள்ளுங்கள். அடுத்து, இரண்டு கால்களையும் உற்புரமாக, அதாவது இரண்டு கால்களின் பெருவிரல்களும் தரையைத் தொடும்படியாகவும், இரண்டு பெருவிரல்களின் முனைகளும் நேருக்குநேர் இருப்பது போலவும் கொண்டு வரவும். அடுத்து கால்களை பழைய நிலைக்குக் கொண்டு செல்லவும். இப்படியாக தினமும் காலை அல்லது மாலையில் சுமார் ஐந்து முறை பயிற்சி செய்யுங்கள்.

பயிற்சி செய்யும்போது எவருடனும் பேசாமல் மௌனமாக இருப்பது உத்தமம். 'நான் பேசற ஜாதியாச்சே...' என்கிறீர்களா? கால்களுடன் பேசுங்கள்

“என் இனிய கால்களே! உங்களுக்கு நன்றி. எனக்காக, என் பயணத்துக்காக, எத்தனை கடுமையாக உழைத்திருக்கிறீர்கள்? ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது, 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் சென்றதற்காக ஒரு சோப்பு டப்பாவை எனக்குப் பரிசாகத் தந்தார்கள். கை தட்டிக் கௌரவப்படுத்தினார்கள். அந்தப் பரிசும் பாராட்டும் உனக்கானது! இந்த வெற்றியும் கௌரவமும் எனக்குள் தன்னம்பிக்கையைக் கொடுத்தது. அதற்கு நீயும் ஒரு காரணம். சொல்லாமல் சொல்லி, பெடல் அழுத்தி, சைக்கிள் விடுவதற்குப் பக்க பலமாக இருந்தது நீதானே?! விழுந்து, முட்டி பெயர்ந்து, மெல்லிசாய் ரத்தக்கசிவுதெரிகிறபோதெல்லாம், 'வீரனுக்கு விழுப்புண்கள் சகஜம்' என்பதுபோல், நீதானே பெடலில் உன்னைப் பொருத்திக்கொண்டு, பரபரவெனச் செயல்பட்டாய். புத்திக்குள் இறங்கிப் படர்ந்திருந்த சைக்கிள் ஆசையை, உன் பத்து விரல்களுக்கும் கொண்டு சென்று குவித்துக்கொண்டு, மொத்த பலத்தையும் திரட்டி, பெடல் அழுத்தியதால்தான், பிறகு கைகளை விட்டுவிட்டும்கூட, பாதங்களில் பேலன்ஸ் செய்தே சைக்கிள் ஓட்டினேன். அதுதான், அடுத்து பைக் ஓட்டுவதில் சூரனாக என்னை மாற்றியிருக்கிறது.

உனக்கு நான் எப்படி நன்றி சொல்வது? வார்த்தையாகச் சொன்னால் போதுமா? கைகுலுக்கி நன்றி பாராட்டுவது போல், கால்களைக் குலுக்கிக்கொள்ள முடியாதே? என்ன செய்வது?”

ஒன்றும் செய்யவேண்டாம். வெறுமனே கால்களை நீட்டிக்கொண்டு, அவற்றை ஒரு நிமிடம் உற்றுக் கவனியுங்கள். குறைந்தது இரண்டு நிமிடநேரமாவது, ஒவ்வொரு விரலையும் கூர்ந்து கவனியுங்கள். சுமார் மூன்று நிமிடங்களேனும் அடிப்பாதங்களை மெள்ள வருடிக் கொடுங்கள். ஒரு நான்கு நிமிடங்கள், அடுத்த பாதத்தை கவனிக்கத் துவங்குங்கள். இதையடுத்து ஐந்து ஐந்து நிமிடங்களை, முழங்காலில் இருந்து பாதங்களின் விரல்கள் வரைக்கும், பார்வையாலும் கைகளாலும் மெள்ள நீவிவிடுங்கள்.

அடுத்து, சுமார் 10 நிமிடங்கள், மேற்சொன்ன பயிற்சிகளில் ஈடுபடுங்கள். தினமும் இப்படியாக, பத்து இருபது நிமிடங்களைப் பாதங்களுக்காக ஒதுக்குங்கள். பயிற்சிக்காகச் செலவிடுங்கள். ஒரு விஷயம்... காலைச் செலவு, பத்து இருபது நிமிடங்களாக இருக்கலாம். ஆனால், வரவு என்பது வாழ்க்கை முழுமைக்கும் என்பதை உணர்ந்துகொள்ளத் தவறிவிடாதீர்கள்!

இரண்டு கால்களைக் கவனிக்காவிட்டால், ஒருகட்டத்தில் மூன்றாவது காலைத் தேடவேண்டியிருக்கும்: உஷார்! அந்த மூன்றாவது கால் என்பது, ஊன்றுகோல்.



# திருமண பொருத்தம்

## ஆண்

ராசி - கும்பம் நட்சத்திரம் - சதயம்

**பொருந்தக்கூடிய பெண் நட்சத்திரங்கள்**

9 பொருத்தம் - கார்த்திகை

8 பொருத்தம் - அஸ்வினி | மிருகசீரிஷம் | புனர்பூசம் - மிதுனம் | உத்திரம் 1ம் பாதம் - சிம்மம் | உத்திராடம் - மகரம் | உத்திரட்டாதி - மீனம் | ரேவதி

7 பொருத்தம் - பரணி | மகம் | அனுஷம் | உத்திராடம் - தனுசு

6 பொருத்தம் - பூரம் | கேட்டை | மூலம்

தவிர்க்க வேண்டிய பெண் ராசிகள் - கடகம் | கன்னி

## பெண்

ராசி - கும்பம் நட்சத்திரம் - சதயம்

**பொருந்தக் கூடிய ஆண் நட்சத்திரங்கள்**

10 பொருத்தம் - ________

9 பொருத்தம் - ________

8 பொருத்தம் - கேட்டை

7 பொருத்தம் - மிருகசீரிஷம் | புனர்பூசம் - மிதுனம் | மூலம் | பூராடம் | உத்திராடம் | ரேவதி

6 பொருத்தம் - கார்த்திகை - ரிஷபம் | மகம் | அனுஷம் | பூரம்

தவிர்க்க வேண்டிய பெண் ராசிகள் - கடகம் | கன்னி

***அடுத்த இதழில் கும்பம் ராசி - பூரட்டாதி நட்சத்திர திருமணப் பொருத்த விபரங்களை எதிர்பாருங்கள்.***


## திருமண சேவை

விமலன் திருமண சேவை - 011 6477181542

மீன்மகள் திருமண சேவை - 076 6606422

57, விகாரை லேன், வெள்ளவத்தை - 076 6069104

238, அரசடி வீதி, யாழ்ப்பாணம் - 021 2227147

www.thaalee.com - 2523127

www.thirukalyanam.lk - 0777 877717

**குரும்ப சிட்டியூர் வேல்அமுதன்**
8-3-3, Metro Apartment 55th Lane, வெள்ளவத்தை.
011 236 0488

**ராதா கிருஷ்ணா திருமண சேவை**
5E, வில்லியம் சந்தி, தெஹிவளை. 011 552 2084

**மயில்வாகனம் சர்வதேச திருமண சேவை**
22/1, சுபோதாராம வீதி, தெஹிவளை.
076 657 7292

**கனகராஜன்**
19, கல்பொத்த வீதி, கொழும்பு 13.
072 324 4945, 072 524 6419

**குருக்கள் ஜோதிஷம்**
165/6, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.
011 243 1982

**சக்தி திருமண சேவை**
30, ரமணி மாவத்தை, நீர்கொழும்பு. 031 223 2130

**சந்தோஷ் திருமண சேவை**
85 1/1, மெஷஞ்சர் வீதி, / 56 C, ஆண்டிவால் வீதி, கொழும்பு 12.
077 530 1437 / 077 677 6630

## திருமண வைபவங்களுக்கான...

| | |
|---|---|
| விவாக பதிவாளர் | Ms. Chandrani - 071 312 2889 |
| மணவறை | UMESH - 077 999 5701 |
| வாடகை நகைகள் | Joy Glorious - 077 494 9961 |
| திருமண ஒப்பனை | Brintha - 2 593 693 / 077 633 1257 |
| ஜோதிடம் | Nalendra Institute - 077 2951368 |
| ஜோதிடம் | Kurukkal Jothisham - 077 656 7869 |
| ஜோதிடம் | J. Sharma - 258 6313 |
| குருக்கள் | S.S. Kurukkal - 077 8955986 |
| திருமண ஆடைகள் | Little Asia - 011 250 4470 |
| புகைப்படம் / வீடியோ | Chhaya Rabeshan - 077 361 9649 |
| மெகந்தி | Mehendi - 0777 667 727 |
| திருமண வாகனம் | Mal-Key Rent a Car - 2 365 365 |
| திருமண சைவ உணவு | Mahen's Catering - 0777 563 620 |
| திருமண சைவ உணவு | Dushi Catering - 077 743 1159 |
| திருமண பரிசுகள் | Visgha - 077 277 4776 |

# வளமான வாழ்விற்கு ஃபெங் ஷூய்

## ஃபெங் ஷூயைக் கொண்டு நவீனமாக வாழும் வழிமுறைகள்

### கழிப்பறை

நமது வீட்டிலுள்ள கழிப்பறை நேர்முக சக்திக்குப் பெரிய எதிரியாகும். ∴பெங் ஷுயின்படி கழிப்பறை அமைந்திருக்கும் இடத்தைப் பொறுத்து அது பாதிப்பை உண்டாக்கும். உதாரணமாக கழிப்பறை தென் கிழக்கில் இருந்ததென்றால், அவ்வீட்டிலுள்ளவர்களின் செல்வத்தை அது பாதிக்கும். அதே சமயம் கழிப்பறை வடகிழக்கில் இருந்ததென்றால், குழந்தைகளின் படிப்பை அது பாதிக்கும். இதற்குப் பரிகாரம், சுத்தரிக்கப்படாத உப்பை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு கழிப்பறையில் வைக்க வேண்டும். சுத்தரிக்கப்படாத உப்பு கழிப்பறையிலுள்ள எதிர்மறைத் தன்மையை நீக்கிவிடும். இந்த உப்பை வாரத்திற்கு ஒருமுறை மாற்றி வைக்க வேண்டும்.



### ஒழுகும் குழாய்


∴பெங் ஷுயில் தண்ணீர் செல்வத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. உங்கள் வீட்டிலுள்ள குழாய்களின் தண்ணீர் ஒழுகிற்றென்றால், அது உங்களுக்குப் பணக் கஷ்டத்தைக் கொடுக்கும். ஒரு விநாடிக்கு ஒரு சொட்டு தண்ணீர் ஒழுகினால் வருடத்திற்கு சுமார் 800-லிருந்து 1000 லீட்டர் தண்ணீர் வீணாகும். உங்களுக்குப் பணக் கஷ்டம் வராமல் இருக்க, உங்கள் வீட்டுக் குழாய்களில் ஏதேனும் ஒன்றில் தண்ணீர் ஒழுகிற்றென்றால் உடனே அதைச் சரிசெய்து விடுங்கள்.



ஒழுகும் குழாய்   ஒழுகும் பணம்

### தரையில் பதிக்கப்படும் கற்கள் (Tiles)

∴பெங் ஷுய் ஒரு குறியீடு விஞ்ஞானமாகும். ∴பெங் ஷுயின்படி வீட்டில் ஏதேனும் உடைந்த அல்லது துண்டு துண்டான பொருட்கள் இருந்தால் அவை உறவினரிடையே பகைமையை வளர்க்கும். இப்பகைமை குடும்பத்தினர், பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உடன் பணிபுரிபவர்களிடையே உண்டாகலாம். சில வீடுகளில் தலையில் பதிக்கப்பட்ட கற்கள் அல்லது வாசல் படிக்கற்கள் உடைந்திருக்கக் காணலாம். இது உடனே கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். வீட்டுத் தரையில் பதிக்கப்பட்டுள்ள கற்கள் ஏதேனும் உடைந்திருந்தால், உடனே அதை மாற்ற வேண்டும். அல்லது அதன்மீது தரைவிரிப்பை (Carpet) விரித்து வைக்க வேண்டும்.



தொடரும்





# மங்கள ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய என தினம்
பாடிப்பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
(ஓம் ஸ்ரீ ஜெய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை யெல்லாம் அடைய
அம்மம்மா தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
(ஓம் ஸ்ரீ ஜெய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் அம்மம்மா
ஈஸ்வரி வரமருள்வாய் கரங்குவித்தோம்
இனிகாலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
(ஓம் ஸ்ரீ ஜெய)

காசினிலெங்கும் வேற்றுமை
போகக்கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே
(ஓம் ஸ்ரீ ஜெய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில்
ஞான நல்லொளி தீபம் வைத்து
ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திர்க்கமைதியைத்தா
(ஓம் ஸ்ரீ ஜெய)

ஓம் கணபதிஸாயி ஷண்முகநாதா
ஓம் த்ரிகுணாதீத க்ருஷ்ணா
ஓம் ஸ்ரீ ராம மஹாதேவ சம்போ
ஓம் ஜெய ஜெகத்ஜெனனி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:



# சைவநெறி

## வினா விடை தொகுப்பு
## தரம் 8



## 2. திரிபுரதகனம்

**6. திருவதிகை ஏன் "திரிபுராந்தகம்" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது?**

திருவதிகை சிவபெருமான் திரிபுரத்தை எரித்த வீரச் செயலோடு தொடர்புடையதாகையால் இச் சிறப்புப் பெயர் பெற்றது.

**7. திருவதிகைத் தலம் "விற்கோலம்" எனவும் அழைக்கப்படக் காரணம் என்ன?**

திரிபுரம் எரித்தபோது இறைவன் வில்லையேந்திய திருக்கோலக்தோடு வீற்றிருந்த தலமாகையால் விற்கோலம் என அழைக்கப்பட்டது.

**8. திருவிற்கோல இறைவனின் பெயர் என்ன? இறைவியின் பெயர் என்ன?**

இறைவனின் பெயர் "திரிபுராந்தகர்" ஆவார். இறைவியின் பெயர் "திரிபுராந்த நாயகி" ஆவார்.

**9. சிவமூர்த்தங்களுள் "திரிபுராரி" வடிவம் இறைவன் ஏன் எடுத்தார்?**

பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று கோட்டைக்ளை எரித்துத் தேவர் துயர் தீர்க்க இறைவன் எடுத்த வடிவமாகும்.

**10. இறைவன், அழித்த மூன்று அசுரர்களும் யாவர்? எக் கோட்டைகளை அமைத்தனர்?**

| | | |
|---|---|---|
| தாரகாட்சன் | - | பொன்கோட்டை |
| கமலாட்சன் | - | வெள்ளிக்கோட்டை |
| வித்யுன்மாலி | - | இரும்புக்கோட்டை, என்பவற்றை அமைத்தனர். |

**11. மூன்று அசுரர்களும் எவ்வாறு கொடுமை செய்தனர்?**

- மூன்று கோட்டைகளை அமைத்து மூவுலகங்களிலும் ஆட்சி செய்தனர்.
- தாம் பெற்ற தவ வலிமையால் செருக்குற்ற அவர்கள் சிவநெறியினின்றும் நீங்கித் தேவர்களுக்குப் பலகொடுமைகளைச் செய்தனர்.
- தமது உலோகக் கோட்டைகளிலிருந்து பறந்து சென்று எல்லா உயிர்களையும் வருத்தினர்.

**12. திரிபுரத்தவர்களின் (மூன்று அசுரர்) கொடுமை தாங்காத தேவர்கள் யாது செய்தனர்? இறைவன் என்ன செய்தார்?**

தேவர்கள் சிவபெருமானிடம் சென்று திரிபுராசுரர்களை அழித்துத் தம்மைக்காத் தருளுமாறு முறையிட்டனர். இறைவன் தேவர்களின் துன்பத்தை நீக்குவதற்காக அசுரர்களை அழிக்க திருவுள்ளம் கொண்டார். அதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு தேவர்களைப் பணித்தார்.

**13. அசுரர்களை அழிப்பதற்காக ஆயத்தம் செய்யும்படி இறைவன் கூறத் தேவர்கள் என்ன செய்தனர்? தேவர்கள் ஏன் இறுமாந்தனர்?**

- தேவர்கள் உலகையே தேராகச் செய்து நால் வேதங்களைக் குதிரைகளாகப் பூட்டினர்.
- சூரிய, சந்திரர்களைத் தேர்ச் சில்லுகளாகப் பூட்டினர்.
- மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் நுனியாகவும் அமைத்தனர். தமது உதவியினாலேயே இறைவன் முப்புரங்களையும் எரிக்கப்போவதாக இறுமாந்தனர்.

**14. தேவர்கள் இறுமாந்தமைக்கு யாது நிகழ்ந்தது? இறைவன் எதன் உதவியால் முப்புரங்களையும், அசுரர்களையும் எரித்தார்?**

தேவர்கள் இறுமாப்புக் கொண்டதால் அவர்கள் செய்த தேரின் அச்சு முறிந்தது, இறைவன் அவர்கள் உதவியின்றி புன்சிரிப்பாலேயே முப்புர அசுரர்களையும், அவர்கள் கோட்டைகளையும் எரித்தார்.


**15. முப்புரங்களையும் எரித்தமையால் சிவபெருமான் எப்பெயரைப் பெற்றார்?**

"திரிபுராந்தர்" என்ற பெயரைப் பெற்றார்.

**16. முப்புரங்களை இறைவன் எரித்த வீரச்செயல்களை யார் பாடியுள்ளனர்?**

இவ் வீரச் செயலை சமயகுரவர்கள் திருமுறைப்பாடல்களில் பாடியுள்ளனர்.

தொடரும்



# திருக்குறள்
## தெளிவு

## 11. செய்ந்நன்றி அறிதல்

**01. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது**

**பொருள்:** தான் எதுவுமே செய்யாதிருக்கவும் பிறர் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுப்பினும் ஈடாக முடியாது.

**02. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது**

**பொருள்:** உற்ற காலத்தில் செய்த உதவி சிறிதளவாக இருப்பினும் அதன் தன்மையை ஆராய்ந்தால் அதன் பெருமையோ உலகத்தை விட மிகப் பெரிதாகும்.

**03. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது**

**பொருள்:** பயனைக் கருதாதவர் செய்த உதவியின் நன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலையும்விட அளவினால் மிகப்பெரிதாகும்.

**04. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.**

**பொருள்:** ஒருவர் தினையளவு நன்மை செய்தானாயினும் அதன் பயனை ஆராய்கின்றவர் அதனை பனையளவாக மதித்துப் போற்றுவர்.

**05. உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து**

**பொருள்:** ஒருவர் செய்த உதவி அதன் அளவையே எல்லையாக உடையது அன்று. அது உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

**06. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.**

**பொருள்:** மன மாசு இல்லாதவரின் நட்பினை ஒருபோதும் மறத்தலாகாது. துன்பம் உற்ற காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

**07. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு**

**பொருள்:** தம்முடைய துன்பத்தைத் துடைத்தவரின் நட்பினை ஏழேழ் பிறப்பிலும் மறவாது நினைந்து போற்றுவர் நன்றியுடையோர்.

**08. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று**

**பொருள்:** ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறம் ஆகாது. அவர் செய்த தீமையை செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

**09. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்**

**பொருள்:** முன்பு நன்மை செய்த ஒருவர் கொன்றாற்போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர், முன்பு செய்த நன்மை ஒன்றை நினைத்தாலும் அந்தத் துன்பம் மறைந்து போகும்.

**10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

**பொருள்:** எத்தகைய அறத்தை அழித்தவர்க்கும் தப்புவதற்கு வழி உண்டு: ஆயின், ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்யும் வழியே இல்லை.

தொடரும்

**இடைவெளியை நிரப்புங்கள்!**

1. **அஷ்ட திக் பாலகர்களில் ஒருவர்**

| | | | |
|---|---|---|---|
| | பே | | ன் |

2. பஞ்சாட்சர மந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | | ய | | ம |

3. சங்கடங்கள் தீர்க்கும் விரதம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ங் | | ட | | ர | | து | | த் | |

4. **ஜோதிடர்கள் பார்ப்பது**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப | | சா | | க | |

5. **கிருஷ்ணர் கையிலுள்ள சங்கு**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஞ் | | ச | | ய | |

# சதுர்த்தி விரதம் இருங்கள் சங்கடங்கள் விலகும்



இன்று பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித பிரச்சினை வருகிறது. சிலருக்கு பிரச்சனைகள் ஒரே நேரத்தில் வருகின்றன. கணவனின் கொடுமை, கணவனை விட்டுப் பிரிதல், மகன் அல்லது மகள் கவனிக்காமை, வீட்டை விற்க வேண்டியநிலை, திருமணத்தால் குடும்ப ஒற்றுமையில் பிளவு இப்படிப் பல துன்பங்கள் வருகின்றன.

இவற்றை எதிர் கொள்ள முடியாமல், தாங்க முடியாமல் பலர் நோய்க்கு ஆளாகின்றனர். என்ன செய்வது என்றே தெரியாமல் தவிக்கின்றனர். தத்தளிக்கின்றனர். குழம்புகின்றனர்.

இவ்வாறு பல துன்பங்கள், பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்பதற்கான வழிவகைகளையும், இழந்த செல்வத்தைப் பெறவும், நல்ல மன ஆற்றல், ஆரோக்கியம் ஆகியவற்றையும் அடையவும் சங்கடஹர சதுர்த்தி விரதம் மிகப்பெரிய, மிகச்சிறந்த வழியாகும்.

ஸ்ரீ தத்தாத்ரேயர் குந்திதேவிக்குச் சங்கடஹர விரதத்தின் சிறப்பைத் தெரிவித்தார். குந்திதேவி இந்த விரதத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து தன் மனதிற்கு உறுதியைச் சேர்த்துக் கொண்டாள். அவளுக்கு வந்த துன்பங்கள் நீங்கின. எனவே இந்தச் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை நாம் அனைவரும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

பௌர்ணமிக்குப் பிறகு வரும் சதுர்த்தி தினத்தில் இவ்விரதம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு முன்பு உள்ள திதியான திரிதியை முடித்து சதுர்த்தி திதி எப்போது ஆரம்பிக்கிறதோ அப்போதிலிருந்து முடிவடையும் வரை விரதம் இருத்தல் நல்லது.

கூடியவரை பேச்சைக் குறைத்து கணபதியின் திருநாமங்கள் ஏதாவது ஒன்றை அன்று சதுர்த்தி திதி முடியும்வரை மனதிற்குள் கூறிக் கொண்டிருப்பது சிறப்பு.

அதிகாலையில் குளித்துவிட்டு உபவாசம் மேற்கொள்ள வேண்டும். விநாயகர் கோவிலுக்குச் சென்று அவரை வணங்கி வழிபட்டு விநாயகர் துதிகளைக் கூறவும். அருகம்புல் வாங்கி சாற்றச் செய்யலாம். அபிஷேகத்திற்குப் பால் வாங்கிக் கொடுக்கலாம்.

**"ஓம் கம் கணபதயே நமஹ"** என்று அன்று முழுவதும் தொடர்ந்து வாய்விட்டோ, மனதிற்குள்ளோ இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கலாம்.

இதையே ஒரு நோட்டில் தடவைக்கு 108 முறையாக எழுத முடிந்தவரை எழுதலாம்.

உணவு, டிபன் உண்ணாமல் பாலில் தேன் மட்டும் கலந்து சாப்பிடலாம்.

சதுர்த்தி முடிவில் விநாயகர் அஷ்டோத்திரம் விநாயகர் அகவல் முதலியவற்றைக் கூறி விநாயகருக்கு வீட்டில் பூஜை செய்து இனிப்புக் கொழுக்கட்டை நைவேத்தியம் செய்து பூஜையை நிறைவு செய்ய வேண்டும். பிறகு சாப்பிட வேண்டும்.

நாள் முழுவதும் கூடியவரை மௌனம், விநாயகர் நாமம் கூறுதல், இறுதியாக அஷ்டோத்திரம் கூறுதல், எழுதுதல், உணவு உண்ணாமை, அன்று முழுவதும் விநாயகர் நினைவாகவே இருத்தல் ஆகியவை மிக முக்கியம்.

இதன்படியோ அல்லது உங்கள் குடும்ப வழக்கப்படி கடைப்பிடிக்கும் பழக்கங்களைக் கடைப்பிடித்தோ இவ்விரதம் மேற்கொள்ளலாம்.

தொடரும்

# SHAHANA FLOWER SHOP

Jaffna, Trinco, Batticaloa
ஆகிய இடங்களிலும் எமது சேவை.

KARTHIGEYAN - 077 6638393








4-1/2, Bothirukkarama Road, (Vihara Lane) Wellawatte.
**Tel: 0112 058 541 | Hotline: 077 663 83 93**
E-mail: karthik721@hotmail.com | FB: shahana flower shop
Web: www.shahanaflowershop.blogspot.com


Wellawatte
New KUMARAN'S
Specialist in Wedding Sarees
(Orchard Shopping Complex) No. 7/1, Galle Road, Wellawatte, Colombo 6, Sri Lanka.
Tel: 011 2505087, Fax: 011 2594628 E-mail: info@newkumarans.com | Web: www.newkumarans.com

# முருகப்பெருமானுக்கு மட்டும் காவடி



இயற்கையைப் போற்றிய பழந்தமிழரிடம் இறை உணர்வு இருந்தது. இதனைத் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. தமிழர்களிடம் முருகவழிபாடு என்பது மிகத்தொன்மையானது. எனவே, தெய்வத் திருத்தோற்றங்களிலே தனியொருவடிவமாக நின்று, தனித்தமிழ்க் கடவுளாகக் காட்சி தருகின்ற முருகப் பெருமானின் அருளாட்சி சொல்வதற்கு அரியது.

தெய்வங்கள் பலவாக இருந்தாலும், வேறு எந்த தெய்வத்திற்கும் இல்லாத நிலையில் காவடி எடுப்பது முருகனுக்கு மட்டும் உரிய சிறப்பாகும். முருகனுக்கு மட்டுமே காவடி எடுக்க வேண்டும். ஒவ்வொரு தெய்வங்களுக்கும் ஒவ்வொரு விசேஷ வழிபாட்டு முறைகள் உண்டு. அந்த முறையில்தான் முருகப் பெருமானுக்குக் காவடி எடுப்பது விசேஷ முறை பெற்றுள்ளது.

முருகப்பெருமானுக்கு விசேஷமென கொண்டாடப்படுகின்ற ஆடி மாத உற்சவம் முதல் தைப்பூசம் - மாசிமகம் பங்குனி உத்திரம் - சித்திராப் பௌர்ணமி வைகாசி விசாகம் முதலிய உற்சவங்களிலே காவடிகள் பக்தர்களால் மிக விசேஷமாக எடுக்கப்படுகிறது. நமது நாட்டில் தெய்வத்திருத்தலங்களில் மிக அதிகமாகக் காணப்படுவது முருகன் திருக்கோயிலே.

உற்சவங்கள் பல வந்தாலும் தைப்பூச உற்சவமும், பங்குனி உத்திரமும் நமது நாட்டில் இந்துப் பெருமக்களின் உள்ளத்திலும், அதுவும் குறிப்பாக மாரான் (பகாங்) ஸ்ரீ மரத்தாண்டவர் திருமுருகன் ஆலயத்திலும் பெற்றுள்ள சிறப்பு மிக அலாதியானது. மிகவும் மகோன்னதமானது.

பக்தியை அடிப்படையாக வைத்து செய்யப்படுகின்ற வழிபாடே சிறப்புடையதாகும். நம் ஆன்மாவை நாம் நேசித்து உய்வுபெறச் செய்கின்ற வழிபாடே சிறந்த காணிக்கையாகும். அத்தகையக் காணிக்கைகளை இப்படி காவடி எடுத்து வெளிப்படுத்தும்போது பக்தரும் உய்வர். அதைக் காண்பாரும் நலம் பெறுவர்.

காவடி எடுப்பதற்குரிய முறையை நாம் தெரிந்துக்கொள்வதற்கு முன்னால், அதன் வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிவபெருமானிடத்தில் மிகுந்த வரங்களைப் பெற்ற இடும்பன், சூரனை அழித்த கந்தவேள் குமரனின் அடியோனாக வாழ அருள் புரிய வேண்டினான்: "அவ்வாறே ஆகுக" என அருள் புரிந்தார் சிவபெருமான்.

இடும்பனுக்கு அருள் புரிந்த இடம் இடும்பாவனம் என தற்போது வழங்கப்படுகிறது. இது திருவாரூரிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் இரயில் மார்க்கத்தில், கோவிலூர் அருகில் உள்ளது.

சிவபெருமானின் அருள்பெற்ற அகத்தியர், இமய மலைச்சாரலில் இருந்த இரு மலைச் சிகரங்களுள் ஒன்றை சிவனாகவும் மற்றொன்றை சக்தியாகவும் கொண்டு வழிபட்டால், சிவகிரி சக்திகிரி' என அழைக்கப்பட்டன. அந்த இரு சிகரங்களையும் தனது இருப்பிடமான பொதிகை மலைக்குக் கொண்டுவர விரும்பினார் அகத்திய முனிவர். அதனைக் கொண்டுவர முருகனை வழிபட்டார். முருகன் திருவருளால் அந்த இரு சிகரங்களையும் கொண்டு வரும் ஆற்றலையும்

பெற்று, கேதாரம் வரையில் கொண்டு வந்தவர், ஓய்வு எடுப்பதற்காக ஒரு வனத்திலே தங்கினார்.

அது சமயம் அதுவழியே தன் மனைவி இடும்பியோடு வந்த இடும்பன் அகத்தியரை வணங்கி அருள்புரிய வேண்டினான். முனிவரும், "யாம் கொண்டு வந்துள்ள இந்த இரு மலைகளையும் தென்திசை நோக்கி கொண்டு வருவாயானால் உனக்கு பெருமையும் புகழும் சித்தியும் உண்டாகும்" என்றார். இம்மொழிகளைக் கேட்டு அகம் மகிழ்ந்து, இடும்பன் இருமலைகளையும் ஆவலுடன் தூக்கினான். அவனால் அசைக்கக்கூட முடியவில்லை.

எத்தனையோ பெரிய மலைகளையெல்லாம் தூக்கி எறிந்த இடும்பன், அசையாதிருக்கும் இந்த மலைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டுவிட்டான். இந்த மலைகளை இக்குறுமுனிவர் எப்படி தூக்கிக்கொண்டு வந்தார் என வியந்தான். இம்முனிவர் தூக்கி வந்த இந்த மலைகளை, பராக்கிரமசாலியான தான் தூக்க முடியவில்லையே என மிகவும் வருந்தினான். பொதிகை முனியை வணங்கி தனக்கு மலையை தூக்கும் ஆற்றலை தந்தருள வேண்டினான். அவரும் மனமகிழ்ந்து முருகப்பெருமானுடைய மூல மந்திரத்தையும் வழிபாட்டு முறையையும் உபதேசித்தார்.

முனிவரை வணங்கி வலம் வந்து அவர் அருளியபடியே முருகப் பெருமானுடைய மூலமந்திரத்தை ஜபம் செய்து வந்தான். அப்போது அஷ்ட நாகங்கள் (எட்டு நாகங்கள்) கயிறுகளாக அவனிடம் வந்தன. பிரமதண்டம் புஜதண்டமாக (தோள் மீது சுமக்கின்ற தடியாக) வந்தது. வியப்புற்றான் இடும்பன். அகத்திய முனிவரின் தவ வன்மையையும் முருகப்பெருமானுடைய மந்திர ஆற்றலையும் வியந்தான்.

எட்டு நாகக் கயிறுகளையும் இரு உறிகளாக செய்தான். இருமலைகளையும் சுலபமாகத் தூக்கி இரண்டு உறிகளில் வைத்தான். அவற்றை தோள் தடியாக இருக்கின்ற பிரமதண்டத்தின் இரண்டு பக்கங்களிலும் சேர்த்து பிணைந்து விட்டு, மூல மந்திரத்தை ஜபித்து, முழங்காலை மண்ணில் ஊன்றி தண்டத்தை தோளில் வைத்து, முருகனின் நாமத்தை உரக்கக் கூறி எழுந்தான். இரு மலைகளும், காற்றென எழுந்தன.


இவைகளையே அவன் காவடியாகத் தூக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வருகிறான். இப்படி அவன் வரும் வழியில் தூக்கி வரும் காவடியின் சுமை தோன்றாதிருக்க, முருகன் மந்திரத்தை ஜபித்துக்கொண்டும், முருகன் நாமத்தை பாடிக்கொண்டும் வரும்போது, திருவாவினன்குடியை (பழனியை) நெருங்கும்போது, சற்றே இளைப்பாற எண்ணி காவடியை இறக்கி வைத்துவிட்டு, சிறிது நேரம் இளைப்பாறினான்.

இளைப்பாறிக் களைப்பு தெளிந்தபின், காவடியைத் தூக்க முயன்றபோது முயவில்லை. அவன் மனைவி இடும்பியும் முயன்றாள், முடியவில்லை. செய்வதறியாது நிற்கும் நேரத்தில், அங்கே வில்வமர நிழலில் நின்றுகொண்டிருந்த தண்டு தாங்கிய சிறுவன் ஒருவன், இடும்பனின் இயலாமையைக் கண்டு நகைத்தான். சினங்கொண்ட இடும்பன் இடியென கோபங்கொண்டு, சிறுவனைத் தாக்க முயன்றான். சிறுவன் சிரித்தான். அவனைத் தாக்கவும் இடும்பனால் இயலாது போகவே, சீறிப் பாய்ந்தான். பாய்ந்த கணத்தில் பூமியின் மீது வீழ்ந்தவன் மூச்சையுற்றான்.

இது கண்ட இடும்பனின் மனைவி ஓடி வந்தாள். வந்திருந்தது வடிவேலன் என அறிந்து 'ஐயனே! பிழை பொறுத்து மாங்கல்ய பிச்சை அருள வேண்டும்' என வேண்டினாள். வேண்டியவர் யாராயினும் இரங்கி அருள்வான் இறைவன். இடும்பிக்கு இரங்கினான் தண்டபாணி. அவன் கடைக்கண் நோக்கினான். இடும்பன் உறங்கி விழித்தவன் போல் எழுந்தான். முருகவேலை வணங்கி நின்றான்.

"இடும்பனே! இந்த மலைச்சிகரங்கள் இரண்டும் இங்கேயே இருக்கட்டும். அவற்றின் மீது நாம் எழுந்தருளி இருப்போம். நீ இ.னி இம்மலையின் அடிவாரத்தில் காவல் புரிவாய். சிவகிரி, சக்திகிரி இரண்டையும் நீ காவடியாகக் கொண்டு வந்ததுபோல், நம் அடியார்கள், அவர்கள் தம் காணிக்கைகளைக் காவடியாக எடுத்துவந்து, தம் குறைகளை நீக்கிக்கொள்வார்கள்! உனக்கே இந்தப் பெருமை. உன் புகழ் ஓங்கும். நீ சித்தியடைவாய். வருகின்றவர்கள் முதலில் உன்னை வணங்கி, பின் நம்மையும் வணங்குவார்களாக" என்று அருள்மொழிந்தான் முருகன்.

குமரன் இட்டக் கட்டளைப்படியே மலையின் அடியிலே, இன்றும் காவல் புரிந்து வருகின்றான் இடும்பன். இதனால்தான் பக்தனான இடும்பனை முதலில் வணங்கிவிட்டுப் பிறகே மலையேறிச் சென்று செவ்வேல் முருகனை வணங்கும் வழக்கம் இன்னமும் இருந்து வருகிறது.



# அங்க தேவதைகள் அளிக்கும் அரண்

மனித உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் ஒவ்வொரு தேவதை இறங்கி ஆட்சி செய்கிறது என்று அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளது! எனவே, அன்றாடம் நமது உடலில் உறையும் அங்க தேவதைகளை வழிபாடு (நமஸ்கரித்தல்) செய்வதன் மூலம் நல்லதோர் பாதுகாப்பு சக்தியை பெறுவதோடு பல தீய எதிர்வினை சக்திகளிட மிருந்து காப்பாற்றப்படுகிறோம்.

**அங்கதேவதைகள் வழிபாடு முறை:**

அங்க தேவதைகளை வழிபாடு செய்வதற்கு முன்பு சில பயிற்சி முறைகளை செய்ய வேண்டும். நாடிசுத்தி அல்லது பிராணயாமம் அதையடுத்து மனசுத்தி செய்ய வேண்டும்! இறுதியாக அங்கதேவதை வழிபாடு செய்ய வேண்டும்.

1.நாடி சுத்தி அல்லது பிராணாயாமம்
2.மனசுத்தி
3.அங்க தேவதைகளை நமஸ்கரித்தல்

**நாடிசுத்தியின் பலன்கள்:**

மனித உடலில் 72 ஆயிரம் நாடிகள் உள்ளன. இதல் மிக முக்கியமானது தச நாடிகள் அதிலும் முக்கியம் வகிப்பது மூன்று நாடிகள். அவைகளாவன:

1.சூரிய கலை (அ) பிங்கலை நாடி
2.சந்திர கலை (ஆ) இடகலை நாடி
3.அக்னி கலை (இ) சுழிமுனை நாடி

நாடிசுத்தி என்ற பிராணாயாமம் செய்வதால் 72 ஆயிரம் நாடி நரம்புகளும் புத்துணர்ச்சி பெற்று சரிவர இயங்குவதால் உடல் ஆரோக்கியம் நிலை நிறுத்தப்படுகிறது.

மனசுத்தி மந்திரத்தால் மனம் சுத்தியாகிறது. இதனால் மனஅமைதி, நற்சிந்தனை தோன்றுகிறது! மனமே வாழ்க்கையாக அமைகிறது. மனம் சுத்தி அடைவதால் வாழ்க்கையும் தூய்மையுடையதாகிறது!

**"ஓம் மனே பத்மே ஓம்"**

மேற்கண்ட மந்திரத்தை பிராணாயாமம் செய்த பிறகு குறைந்தது 21 முறை மனதில் ஜெபித்தல் வேண்டும். இதனால், அலைபாயும் மனம் அடங்கி ஒடுங்குவதை காணலாம். இதை அனுபவத்தில் யாவரும் உணரலாம்!

இறுதியாக அங்கதேவதைகளை தொட்டு வணங்குதல் என்ற செயலை செய்ய வேண்டும். இதற்கு வலது கைவிரல்களை தாமரை மொட்டு போல ஒன்றாக குவித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு கீழ்க்காணும் பதினெட்டு அங்கங்களில் தொட்டுத் தொட்டு இறுதியாக இரு கைகூப்பி நமஸ்கரிக்க வேண்டும்!

"இந்த தேகத்திலுள்ள அனைத்து அங்க தேவதைகளையும் தொட்டு வணங்குகிறேன். இந்த தேகத்தை புனிதப்படுத்தி, காத்து ரட்சியுங்கள். என்று மனதார பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். நமது உடலில் 18 முக்கிய அங்கதேவதைகள் இருப்பதை ரிஷிகள் உபதேசித்துள்ளனர். அத்தேவதைகளின் அங்கங்கள் பின்வருமாறு:

1.வலது கால்கட்டை விரல் நுனி
2.இடது கால் கட்டை விரல் நுனி
3.வலது முழங்கால் முட்டி
4.இடது முழங்கால் முட்டி
5.மர்மஸ்தானம் (ஆண்/பெண் உறுப்புகள்)
6.தொப்புள்
7.மார்பு ஓடு (இருதய பகுதி)
8.தொண்டைக் குழி
9.வலது தோள்பட்டை
10.இடது தோள்பட்டை
11.வாய்
12.மூக்கின் நுனி பகுதி
13.வலது காது
14.இடது காது
15.வலது கண்

16.இடது கண்
17.புருவ மத்தி
18.தலை உச்சி பகுதி


மேற்கண்ட 18அங்கங்களை தாமரை மொட்டுபோல் குவிந்த வலது உள்ளங் கைவிரல்களால் தொட்டு, தொட்டு இறுதியில் தலை உச்சியை தொட்டு முடித்தவுடன் இருகைகளையும் கூப்பி கீழ்க்காணுமாறு மனதில் பிரார்த்திக்க வேண்டும்.

**"இந்த தேகத்திலுள்ள அனைத்து அங்க தேவதைகளையும் நமஸ்கரிக்கிறேன். இந்த தேகத்தையும், மனதையும் புனிதப்படுத்தி காத்து ரட்சியுங்கள்!"**

இறுதியாக பஞ்சாட்சர மந்திரத்தை குறைந்தது 21முறை உச்சரித்து நிறைவு செய்ய வேண்டும்.

**"ஓம் சிவாய நம ஓம்"**

# தட்சிணாமூர்த்தியின் தத்துவம்



ஸ்ரீ சிவபெருமான் தான் தட்சிணாமூர்த்தி. அதாவது சிவன் அஷ்டமாசித்திக்கு அதிபதியாவர். ஸ்ரீ தட்சிணாமூர்த்தியின் தத்துவமாகத் தென் திசையை நோக்கி நின்று காட்சி தருவது ஏன்? இதன் மறைமுகத் தத்துவம் என்ன?

திசைகள் எட்டு என்றும் அவற்றைப் பாதுகாப்பவர்கள் அஷ்ட திக்பாலகர்கள் என்றும் எல்லோரும் அறிந்திருப்பர். ஆனால் அவர்களைப் பற்றிய விவரங்களை எல்லோரும் அறிந்திருக்க மாட்டார்கள். எனவே முதலில் அஷ்டதிக் பாலகர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

| திசையின் பெயர் | திக்பாலகரின் பெயர் |
|---|---|
| 1.கிழக்கு | இந்திரன் |
| 2.மேற்கு | வருணன் |
| 3.தெற்கு | யமன் |
| 4.வடக்கு | குபேரன் |
| 5.தென்கிழக்கு | அக்கினி |
| 6.தென்மேற்கு | நிர்ருதி |
| 7.வடகிழக்கு | ஈசானியன் |
| 8.வடமேற்கு | வாயு |

இதிலிருந்து தென்கிழக்கு அதிபதி யமராஜன் என்றும், தென் திசையிலே அமைந்திருப்பது யம லோகம் என்றும் தெரிய வருகிறது. யம லோகத்தை நோக்கிச் செல்ல இருக்கும் தட்சிணாமூர்த்தியாக நின்று கொண்டிருக்கிறார். தட்சிணாமூர்த்தி தென்திசை நோக்கி நின்று கொண்டிருப்பதனால் தென் திசையை நோக்கிச் செல்கிற எல்லா மானிடர்களையும் அவரால் எளிதில் பார்க்க முடிகிறது. தட்சிணாமூர்த்தியைப் பார்த்த மாத்திரத்திலேயே ஞானிகள் சத்தியஞானத்தைப் பெற்றுப் பாவத்திலிருந்து நீங்கி,

முக்தியை நோக்கி முன்னேறுகின்றனர். ஆனால் அறிவிலிகளோ, தட்சிணாமூர்த்தியைத் தரிசித்த பின்புங்கூட அவரிடத்தில் கவனம் செலுத்தாமல் மாயையின் பின்னோக்கித் தென்திசையில் முன்னேறிச் செல்கின்றனர்.

அப்பொழுது இறைவன் தட்சிணாமூர்த்தி தமது ஒரு கையிலிருக்கும் உடுக்கையை அடித்து ஒலி எழச் செய்கிறார். மிகுந்த ஓசையுடன் உடுக்கையின் ஒலி எழுப்பும்போது தென்திசை நோக்கி முன்னேறிச் செல்லும் மாந்தர் ஒரு நொடி நேரம் தயங்குகின்றனர். சற்றுப் பின்னால் திரும்பி வடக்கே பார்க்க ஆரம்பிக்கின்றனர். வாத்திய ஒலியினால் கவரப்படுதலும், மக்களின் கவனம் ஈர்க்கப்படுவதும் இயற்கையே.

வாத்தியம் என்பது மக்களைத் தன் பக்கம் கவரக்கூடிய கருவியாகும். சிவபெருமானின் கையிலுள்ள உடுக்கையும் இதுபோன்ற கருவிதான். அந்த உடுக்கை ஒலிக்கும்பொழுது வீழ்ச்சி மற்றும் அழிவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் மானிடர்களைப் பார்த்து 'ஏ மானிடர்களே! வாருங்கள்! வாருங்கள்! வடதிசை நோக்கி வாருங்கள்! முக்தி என்ற மாளிகை வடக்கே இருக்கிறது. அங்கு உங்களை அனுப்புவதற்குத்தான் சிவபெருமான் இங்கே நின்று கொண்டிருக்கிறார்' என்று கூறுவதுபோல் தோன்றுகிறது.

உடுக்கையின் ஒலியால் கவரப்பட்ட மக்கள் இப்பொழுது தென்திசையின் முன்னேறுவதை விட்டுவிட்டு வடக்கு நோக்கி மெல்ல மெல்லச் செல்லத் துவங்குகின்றனர். இருப்பினும் அவர்களுடைய மனத்தில் சிறிது ஐயம் இருக்கத்தான் செய்கிறது. அப்பொழுது சிவபெருமான் தமது கைகளிலிருந்து ஆயுதங்களையும் தலை, கை மற்றும் மார்பிலுள்ள அணிகலன்களையும் காண்பித்துத் தமது உருவத்திற்கு உரிய உட்பொருளை உணர்த்துகிறார். மாயையின் பிடியிலிருந்து நிரந்தரமாக விடுபட்டுள்ளவரான இறைவன் சாதாரண மானிடர்களிடம் அருள்கூர்ந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டே சில வேடம் தாங்கி தட்சிணாமூர்த்தியாக நின்றான் என்று ஞானிகளும், அறிஞர்களும் கூறுவர். தட்சிணாமூர்த்தி தனது கையிலுள்ள உடுக்கையை ஒலித்து மக்களைத் தன் பக்கம் அழைக்கிறார். இவர்களைப் பார்த்து அவர் கூறுகிறார். "என் கையிலுள்ள இந்த மானைப் போல உங்கள் மனம் நிலையற்று இருக்கிறதோ அவ்வாறே மனிதர்களாகிய உங்கள் மனமும் நிலையற்று நாற்புறமும் சூழ்ந்துள்ள மாயையே உண்மை என எண்ணி அதன் பின்னாலேயே அலைந்து திரிந்து இறுதியில் உங்கள் அழிவை நீங்களே தேடிக் கொள்கிறீர்கள்.


"இந்த மாயைப் போலச் சலனப்படும் உங்கள் மனத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள். நான் அதை என்னிடமுள்ள தீயினால் பொசுக்கிச் சாம்பலாக்கி விடுவேன். என்னிடத்தில் வந்து என் பேச்சைக் கேளுங்கள் என் கைகளிலும் காதுகளிலும் தலையிலும் நான் அணிந்து கொண்டிருக்கும் இந்த ஐந்து அரவங்களும் உங்கள் உடலிலே பிரானம், அபானம், வியானம், உதானம், சமானம் என்ற ஐந்து வாயுக்களாகி உங்கள் மூக்குத் துளைகளில் வழியே நடனம் புரிந்து கொண்டிருக்கின்றன. மனிதர்களின் உடலிலே மூச்சு என்பது பாம்பாக இருந்தால் இந்த உலகில் ஞானிகள் பாம்பாட்டிகளாக இருக்கின்றனர். எவ்வாறு பாம்பாட்டி பாம்பைத் தன் வசப்படுத்தி ஆட்டுவிக்கிறானோ அவ்வாறே யோகி தன் மூச்சை அடக்கித் தன் கட்டுப் பாட்டிலே வைத்துக் கொண்டால் பல பிறவிகளாக அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் மாயை என்ற அரக்கனைப்பிடித்து என் கால்களில் கீழே போட்டு மிதித்துக் கொன்று விடுவேன்."

அவர் மேலும் கூறுவதாவது: "என் மூச்சை அடக்கிக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனுடைய மனமெனும் வாயுவை எனது சூலத்தினால் குத்தி அதை என்னிடத்திலிருக்கும் தீயினால் பொசுக்கிச் சாம்பலாக்கி விடுவேன். அந்தச் சாம்பலை என் உடலிலே பூசிக்கொண்டு அவனுடைய மண்டையோட்டை மாலையாகக் கோர்த்து அதையும் என் கழுத்திலே அணிந்து கொள்வேன். இதனால் அந்த வாயு மீண்டும் அந்த மண்டையோட்டில் நுழையாமற் செய்துவிடுவேன்."

இந்த உண்மையை உணர்த்துவதற்காகத்தான் சிவபெருமான் பாம்புகளையும் மண்டை யோடுகளையும் அணிகலன்களாக அணிந்து கொண்டிருக்கிறார்.

இவ்வாறு தட்சிணாமூர்த்தி வடிவமான சிவபெருமானின் உருவத்தை அறிந்து கொண்டு மானிடராகிய நாம் ஒருமித்த மனத்துடன் நம் உடம்பில் உள்ள சுவாசத்தை நம் கட்டுப்பாட்டில் அதாவது பிராணாயமம் என்ற முறையில் மூச்சை ஒருநிலைப்படுத்தி மனத்தை யார் ஒருவர் கட்டுப்பாடுகளுள் கொண்டு வருகிறார்களோ அவர்களுடைய மனத்தைத்தான் இறைவன் அந்த நபருக்கு எந்த ஓர் ஐயமும் இன்றி வீடுபேற்றினைப் பெறுவார். தட்சிணாமூர்த்தியின் தத்துவமும் பரிணமிக்கும் என்பது உறுதி. வாஸ்து சாஸ்திரப்படி வடக்கே தலை வைத்துத் தெற்கே கால் நீட்டி படுத்துறங்கலாகாது. தெற்கே நமது வழிகாட்டியாக தட்சிணாமூர்த்தி இருப்பதால் நம் கால் பகுதி அவர் திசையில் படக்கூடாது.


காலணி சுமந்த கண்ணன்
- யோகா
மாகாபாரதப் போரின் ஒன்பதாம் நாள் இரவு. பீஷ்மாசாரியார் பாசறைக்குத் துரியோதனன் வந்தான். தாத்தாவான பீஷ்மர் முழு வேகத்தோடு போர் செய்து, பாண்டவர்களை மாய்க்கவில்லை என்று அவரிடமே முறையிட்டான்.
துரியோதனா! நாளைக்குப் பார். போரில் பாண்டவர்களை வெல்கிறேன்!
1
வெல்கிறேன் என்று சொல்லாதீர்கள், தாத்தா! அவர்களைக் கொல்கிறேன் என்று சொல்லுங்கள்.
சரி; அப்படியே ஆகட்டும்.
இதைக் கேட்கத்தான் வந்தேன். நான் வருகிறேன்
2
இந்தச் செய்தி அன்றிரவே பாண்டவர்களுக்கு எட்டியது. பீஷ்ம பிதாமகரை வெல்ல யாரால் முடியும் என்று பாண்டவர்கள் கலக்கம் அடைந்தார்கள். திரௌபதி அப்படியே இடிந்து போனாள்.
நன்றிக் கடனுக்காகத் துரியோதனன் பக்கம் இருந்தாலும் தர்மம் வெல்லும் என்று ஆசி கூறிய தாத்தா இப்போது பாண்டவர்களை அழிப்பதாக வாக்குக் கொடுத்திருக் கிறாரே இதற்கு என்ன செய்வது? என் சபதம் என்ன ஆவது? கண்ணன் தான் காப்பாற்ற வேண்டும்! கண்ணா!
3
திரௌபதி கண்ணனை நினைத்த மறுகணமே அந்த மாயக் கண்ணன் அவள்முன் தோன்றினான்.
பாஞ்சாலி! ஏன் கலங்குகிறாய்? சப்தம் செய்யாமல் என் பின்னாலேயே வா!
இதோ வருகிறேன் அண்ணா!
4


அடர்ந்த இருளில் அவர்கள் போர்க்களத்தின் ஓரமாக நடந்தார்கள். போர்க்களம் ரணகளமாக இருந்தது. சிதறிக் கிடந்த சடலங்களிடையே மரண ஓலம் பயங்கரமாகக் கேட்டது. ஒரு பாசறை நெருங்கியதும்......
தங்காய்! உன் காலணிச் சத்தம் பெரிதாகக் கேட்கிறது. அதைக் கழற்றிப் போடு.
சரி அண்ணா!
5
பாசறை வாசலில்.....
உஸ்! உள்ளே ஒரு பெரியவர் உலாவுகிறார். நீ எதுவே பேசாமல் அவர் காலடியில் விழுந்து வணங்கு!
இது என்ன பிரமாதம் அப்படியே செய்கிறேன்.
6
பீஷ்மாசாரியார் வருபவள் யாரென்று கவனிப்பதற்குள் பாஞ்சாலி அவரை விழுந்து வணங்கினாள். பீஷ்மர் அப்படி வணங்கியவளை உடனேயே வாழ்த்தினார்.
தீர்க்கசுமங்கலியாக இருப்பாயாக! யாரம்மா நீ! எழுந்திரு! என்ன வேண்டும் உனக்கு?
எனக்கு மாங்கல்ய பிச்சை வேண்டும்!
7
தீப்பந்த வெளிச்சத்தில் வணங்கி எழுந்தவளின் முகத்தைப் பார்த்ததும், பீஷ்மர் திடுக்கிட்டார்.
ஆ! திரௌபதி நீயா?
ஆமாம், தாத்தா!
8



எங்கே வந்தாய் இந்தக் கொடிய இருளில்? தனியாகவா வந்தாய்?
உங்கள் ஆசீர்வாதத்துக்குத்தான் வந்தேன். அது உடனேயே கிடைத்து விட்டது. அதோ வாசலில் அண்ணா! அவர் துணையோடுதான் வந்தேன்.
9
பீஷ்மர் வாசலில் நிற்கும் கண்ணனைப் பார்த்துவிட்டு
வா, கண்ணா, இப்படி உள்ளே வா! நான் நினைத்தேன், இது உன் வேலையாகத் தான் இருக்கும் என்று.... அது என்ன, துணிக்குள்ளே! காலணியா?
ஆமாம். பாஞ்சாலியுடையது. சத்தம் வேண்டாமென்று வாங்கிக் கொண்டேன்.
10
கண்ணன் தன் காலணியைத் சுமந்து நிற்பதைக் கண்டு திரௌபதி பதறிப் பாய்ந்தாள்.
என்ன அண்ணா இது! என் காலணியை நீங்கள் சுமப்பதாவது? அபசாரம்!
தங்கையின் செருப்பை அண்ணன் தூக்குவது ஒன்றும் தவறல்ல. பேசாதிரு. உன் கோரிக்கையைப் பெரியவரிடம் சொன்னாயா?
11
பீஷ்மர் குறுக்கிட்டு
மாயவனே! அவள் ஏதும் சொல்லவில்லை. ஆனால் நான் என்ன சொல்ல வேண்டும் என்று நீ முடிவு செய்தாயோ, அந்த ஆசீர்வாதத்தை அவளுக்குச் செய்துவிட்டேன். 'தீர்க்க சுமங்கலீ பவ' என்று வாழ்த்திவிட்டேன்.
உங்கள் வாயால் வாழ்த்துவது பெரிய விசேஷமல்லவா? பாண்டவர்கள் கடைசி வரையில் பிழைத் திருப்பார்களே!
12
கண்ணா! நீ பொல்லாதவன்! உன்னை அபயம் என்று அடைந்தவர்களைக் காக்க அவர்களது பாதுகைகளைக் கூட நீ தாங்கிக் கொண்டிருப்பாய்!
தாத்தா! உங்கள் வாக்குறுதியைக் கேட்டு, நாங்கள் கலங்கிப் போனோம்!
13
உம்.... பாண்டவர்களுக்கு உன் அண்ணன் கண்ணனின் அருள் இருக்கும்போது, இந்த பீஷ்மனால் என்ன செய்துவிட முடியும்?
பிதாமகரே! வந்த வேலை நல்லபடியாக முடிந்துவிட்டது. எங்களுக்கு விடைகொடுங்கள்!
14
அவர்கள் வெளியேறிச் செல்வதையே பார்த்தபடி...
பரந்தாமா! பக்தவத்சலா! பக்தர்களைக் காப்பதற்காகக் காலணியும் சுமக்கிற உன் கருணைதான் என்னே!
15

A portrait is a Perfect Gift

# PORTRAIT IN PASTEL / PENCIL by YOGA




Special Offer! Frame & Mug Print FREE!



*Hand Drawing

Ideal for:
•Weddings •Birthdays •Retirements
•Special events & much more..



தென்னிந்திய பிரபல திரைப்பட பின்னணிப்பாடகரும், சிறந்த பக்திப்பாடகருமான
“இசைமணி”, “பத்மஸ்ரீ” டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள்.

**FLEX Graphic** 4, IBC Road, Wellawatte. **Call: 0777-614-186**

**Email: flexvijay@sltnet.lk**




# வர்ணம் தீட்டுங்கள்!



கண்டுபிடியுங்கள் 10 வித்தியாசங்களை






LITRO GAS
Get It Delivery
To Your Door Step
Safety Check at your home
when gas delivered
HOME DELIVERY
SERVICE
LITRO GAS
37.5 kg
LITRO GAS
37.5 kg
LITRO GAS
12.5 kg
Gas Cooker
Repairing
Undertaken
Wellawatte Gas Centre
No. 36, Hampden Lane, Colombo 06.
Hotline : 077 368 3070 | Contact : 2 367373 / 2 554648
www.wellawattegascentre.com


Specialist in Guaranteed Gold Covering Jewellery
All kind of whitening cream available here
Wedding Jewels for Rent
MFJ
MIRACLE FASHION JEWELS
#391A, Galle Road, Colombo 06 | Tel : 0112363761, 0779397500

"எதிரியிடம் இருந்து வந்த போர் ஓலைக்கு, மன்னர் பதில் ஏதும் சொல்லாமல் போகிறாரே!"

"மன்னரின் மன ஓட்டம் புரியவில்லையா தளபதி?"



"மன்னா, எதிரிப் படையினர் நம் எல்லைக்கோட்டைத் தாண்டி 10 கிலோமீட்டர் வந்துவிட்டனர்!"

"கோட்டை இந்தப் பக்கம் தள்ளிப்போட்டு மேட்டரை முடியுங்கள் தளபதி!"



# மன்னா ஹாஹ்...ஹா!

"மன்னரோட சுயசரிதைக்குத் தலைப்பு சொன்னதுக்கா, புலவரை இந்த அடி அடிக்கிறாங்க?"

"பின்னே... 'பதுங்கு குழியும்... பிதுங்கும் விழயும்'னு தலைப்பு சொன்னா...?"



"மன்னர் படுக்கையில் புரண்டபடி என்ன செய்கிறார்?"

"புறமுதுகை செல்ஃபி எடுக்க முயற்சிக்கிறாராம்!"



# பஞ்சாங்கம்

| ஜுலை | | ஆனி | | | |
|---|---|---|---|---|---|
| 01 | வெள்ளி | 17 | ராகு 10.26 -11.56<br>சுப 5.56 - 7.26<br>எம 2.56 - 4.26<br>குளி 7.26 - 8.56 | தே.பி. துவாதசி மு.இ 11.24<br>கார்த்திகை சித்தம்<br>மு.இ 11.21 | கார்த்திகை விரதம் |
| 02 | சனி | 18 | ராகு 8.56 -10.26<br>சுப 2.56 - 4.26<br>எம 1.26 - 2.56<br>குளி 5.56 - 7.26 | தே.பி. திரயோதசி மு.இ 913<br>ரோகிணி மு.இ 9.59<br>அமிர்தசித்தம் | சனிப்பிரதோஷ<br>விரதம் |
| 03 | ஞாயிறு | 19 | ராகு 4.27 - 5.57<br>சுப 8.57 -10.27<br>எம 11.57 - 1.27<br>குளி 2.57 - 4.27 | தே.பி. சதுர்த்தசி மரண<br>மு.இ 7.18 மிருகசீரிடம்<br>மு.இ 8.53 | போதாயன<br>அமாவாசை |
| 04 | திங்கள் | 20 | ராகு 7.27 - 8.57<br>சுப 11.57 - 1.27<br>எம 10.27 -11.57<br>குளி 1.27 - 2.57 | அமாவாசை மா 5.41<br>திருவாதிரை மு.இ 8.04<br>சித்தாமிர்தம் | அமாவாசை<br>விரதம் |
| 05 | செவ்வாய் | 21 | ராகு 2.57 - 4.27<br>சுப 10.27 -11.57<br>எம 8.57 -10.27<br>குளி 11.57 - 1.27 | வ.பி. பிரதமை பி.ப 4.25<br>புனர்பூசம் மு.இ 7.38<br>சித்தம் | |
| 06 | புதன் | 22 | ராகு 11.58 - 1.28<br>சுப 4.28 - 5.58<br>எம 7.28 - 8.58<br>குளி 10.28 -11.58 | வ.பி. துதியை பி.ப 3.38<br>பூசம் சித்தம்<br>மு.இ 7.40 | |
| 07 | வியாழன் | 23 | ராகு 1.28 - 2.58<br>சுப 7.28 - 8.58<br>எம 5.58 - 7.28<br>குளி 8.58 -10.28 | வ.பி. திருதியை பி.ப 3.18<br>ஆயிலியம் மு.இ 8.09<br>சித்தாமிர்தம் | |
| 08 | வெள்ளி | 24 | ராகு 10.28 -11.58<br>சுப 5.58 - 7.28<br>எம 2.58 - 4.28<br>குளி 7.28 - 8.58 | வ.பி. சதுர்த்தி பி.ப 3.25<br>மகம் மரண மு.இ 9.07 | சதுர்த்தி விரதம் |
| 09 | சனி | 25 | ராகு 8.58 -10.28<br>சுப 2.58 - 4.28<br>எம 1.28 - 2.58<br>குளி 5.58 - 7.28 | வ.பி. பஞ்சமி பி.ப 4.06<br>பூரம் சித்தம் மு.இ 10.36 | |
| 10 | ஞாயிறு | 26 | ராகு 4.28 - 5.58<br>சுப 8.58 -10.28<br>எம 11.58 - 1.28<br>குளி 2.58 - 4.28 | வ.பி. ஷஷ்டி மா 5.15<br>உத்தரம் பி.இ 12.30<br>அமிர்தம் | குமாரஷஷ்டி<br>விரதம் |
| 11 | திங்கள் | 27 | ராகு 7.29 - 8.59<br>சுப 11.59 - 1.29<br>எம 10.29 -11.59<br>குளி 1.29 - 2.59 | வ.பி ஸப்தமி மு.இ 6.49<br>அத்தம் பி.இ 2.48 சித்தம்<br>அட்டமி மு.இ 6.49க்கு மேல் | |
| 12 | செவ்வாய் | 28 | ராகு 2.59 - 4.29<br>சுப 10.29 -11.59<br>எம 8.59 -10.29<br>குளி 11.59 - 1.29 | வ.பி. அட்டமி மு.இ 8.37<br>சித்திரை பி.இ 5.16<br>சித்தம் அட்டமி - நவமி | |
| 13 | புதன் | 29 | ராகு 11.59 - 1.29<br>சுப 4.29 - 5.59<br>எம 7.29 - 8.59<br>குளி 10.29 -11.59 | வ.பி நவமி மு.இ 10.34<br>சுவாதி முழுவதும் சித்தம்<br>நவமி மு.இ 10.34 வரை | |
| 14 | வியாழன் | 30 | ராகு 1.30 - 3.00<br>சுப 7.30 - 9.00<br>எம 6.00 - 7.30<br>குளி 9.00 -10.30 | வ.பி. தசமி பி.இ 12.31<br>சுவாதி கா 7.52<br>அமிர்தசித்தம் | |
| 15 | வெள்ளி | 31 | ராகு 10.30 -12.00<br>சுப 6.00 - 7.30<br>எம 3.00 - 4.30<br>குளி 7.30 - 9.00 | வ.பி. ஏகாதசி மரண<br>பி.இ 2.22 விசாகம்<br>மு.ப 10.22 | சயனஏகாதசி<br>விரதம் |

| ஜுலை | | ஆடி | | | |
|---|---|---|---|---|---|
| 16 | சனி | 01 | ராகு 9.00 -10.30<br>சுப 3.00 - 4.30<br>எம 1.30 - 3.00<br>குளி 6.00 - 7.30 | வ.பி துவாதசி பி.இ 3.46<br>அனுசம் பி.ப 12.39<br>சித்தம் | |
| 17 | ஞாயிறு | 02 | ராகு 4.30 - 6.00<br>சுப 9.00 -10.30<br>எம 12.00 - 1.30<br>குளி 3.00 - 4.30 | வ.பி. திரயோதசி<br>பி.இ 4.48<br>கேட்டை மரண பி.ப 2.35 | பிரதோஷ விரதம் |
| 18 | திங்கள் | 03 | ராகு 7.30 - 9.00<br>சுப 12.00 - 1.30<br>எம 10.30 -12.00<br>குளி 1.30 - 3.00 | வ.பி. சதுர்த்தசி பி.இ 5.22<br>மூலம் பி.ப 4.04 சித்தம் | |
| 19 | செவ்வாய் | 04 | ராகு 3.01 - 4.31<br>சுப 10.31 -12.01<br>எம 9.01 -10.31<br>குளி 12.01 - 1.31 | பூரணை பி.இ 5.25<br>பூராடம்<br>பி.ப 5.06 சித்தம் | பூரணை விரதம் |
| 20 | புதன் | 05 | ராகு 12.01 - 1.31<br>சுப 4.31 - 6.01<br>எம 7.31 - 9.01<br>குளி 10.31 -12.01 | தே.பி பிரதமை பி.இ 4.57<br>உத்தராடம் பி.ப 5.36<br>அமிர்தசித்தம் | |
| 21 | வியாழன் | 06 | ராகு 1.31 - 3.01<br>சுப 7.31 - 9.01<br>எம 6.01 - 7.31<br>குளி 9.01 -10.31 | தே.பி. துதியை பி.இ 4.00<br>திருவோணம் பி.ப 5.37<br>சித்தம் | |
| 22 | வெள்ளி | 07 | ராகு 10.31 -12.01<br>சுப 6.01 - 7.31<br>எம 3.01 - 4.31<br>குளி 7.31 - 9.01 | தே.பி. திருதியை பி.இ 2.37<br>அவிட்டம் மரண<br>பி.ப 5.12 | |
| 23 | சனி | 08 | ராகு 9.02 -10.32<br>சுப 3.02 - 4.32<br>எம 1.32 - 3.02<br>குளி 6.02 - 7.32 | தே.பி. சதுர்த்தி<br>பி.இ 12.56<br>சதயம் அமிர்தம் பி.ப 4.26 | சங்கடஹரசதுர்த்தி |
| 24 | ஞாயிறு | 09 | ராகு 4.32 - 6.02<br>சுப 9.02 -10.32<br>எம 12.02 - 1.32<br>குளி 3.02 - 4.32 | தே.பி. பஞ்சமி மு.இ 10.56<br>பூரட்டாதி பி.ப 3.19<br>சித்தாமிர்தம் | |
| 25 | திங்கள் | 10 | ராகு 7.32 - 9.02<br>சுப 12.02 - 1.32<br>எம 10.32 -12.02<br>குளி 1.32 - 3.02 | தே.பி. மு.இ 8.43<br>உத்தரட்டாதி மரண<br>பி.ப 1.58 கரிநாள் | |
| 26 | செவ்வாய் | 11 | ராகு 3.02 - 4.32<br>சுப 10.32 -12.02<br>எம 9.02 -10.32<br>குளி 12.02 - 1.32 | தே.பி. ஸப்தமி மா 6.21<br>ரேவதி பி.ப 12.26<br>சித்தாமிர்தம் | |
| 27 | புதன் | 12 | ராகு 12.02 - 1.32<br>சுப 4.32 - 6.02<br>எம 7.32 - 9.02<br>குளி 10.32 -12.02 | தே.பி. அட்டமி பி.ப 3.54<br>அச்சுவினி மரண<br>மு.ப 10.49 | |
| 28 | வியாழன் | 13 | ராகு 1.32 - 3.02<br>சுப 7.32 - 9.02<br>எம 6.02 - 7.32<br>குளி 9.02 -10.32 | தே.பி. நவமி பி.ப 1.28<br>பரணி சித்தம் மு.ப 9.10<br>நவமி பி.ப. 1.28.வரை | கார்த்திகை விரதம் |
| 29 | வெள்ளி | 14 | ராகு 10.33 -12.03<br>சுப 6.03 - 7.33<br>எம 3.03 - 4.33<br>குளி 7.33 - 9.03 | தே.பி. தசமி மு.ப 11.08<br>கார்த்திகை சித்தம்<br>மு.ப 7.36 | |
| 30 | சனி | 15 | ராகு 9.03 -10.33<br>சுப 3.03 - 4.33<br>எம 1.33 - 3.03<br>குளி 6.03 - 7.33 | தே.பி. ஏகாதசி மு.ப 8.57<br>ரோகிணி கா 6.11 மிருகசீரிடம்<br>பி.இ 4.59 அமிர்தசித்தம் | ஏகாதசி விரதம் |
| 31 | ஞாயிறு | 16 | ராகு 4.33 - 6.03<br>சுப 9.03 -10.33<br>எம 12.03 - 1.33<br>குளி 3.03 - 4.33 | தே.பி. துவாதசி கா 6.59<br>திருவாதிரை பி.இ 4.05<br>சித்தம் | பிரதோஷ விரதம் |

# ஜுலை மாதத்திற்கான விரதங்கள்

(ஆனி / ஆடி)



| ஜுலை | ஆனி | | |
|---|---|---|---|
| 01 | 17 | வெள்ளி | - கார்த்திகை விரதம் |
| 02 | 18 | சனி | - சனிப்பிரதோஷ விரதம் |
| 03 | 19 | ஞாயிறு | - போதாயன அமாவாசை |
| 04 | 20 | திங்கள் | - அமாவாசை விரதம் |
| 08 | 24 | வெள்ளி | - சதுர்த்தி விரதம் |
| 10 | 26 | ஞாயிறு | - குமாரஷஷ்டி விரதம் |
| 15 | 31 | வெள்ளி | - சயானஏகாதசி விரதம் |
| | ஆடி | | |
| 17 | 02 | ஞாயிறு | - பிரதோஷ விரதம் |
| 19 | 04 | செவ்வாய் | - பூரணை விரதம் |
| 23 | 08 | சனி | - சங்கடஹரசதுர்த்தி |
| 28 | 13 | வியாழன் | - கார்த்திகை விரதம் |
| 30 | 15 | சனி | - ஏகாதசி விரதம் |
| 31 | 16 | ஞாயிறு | - பிரதோஷ விரதம் |





**JEYECHANDRANS**

*The Art of Fashion*

முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு ராசியான ஒரே இடம்



**ஜூன் மாத கேள்வி - பதில் போட்டியில் வெற்றியாளர்**

திருமதி ஜெயந்தி கிஷோகரன்
கொழும்பு 6.

**நவபாஷாணங்கள் கொண்டு பழனியாண்டவர் மூல விக்கிரகத்தை அமைத்தவர் யார்?**

- விஸ்வகர்மா
- போகர்
- ரவிவர்மா

**Contact:**

**077 833 5552**

**Flex Publications**

Call Monday - Friday From 9a.m - 5p.m

**JEYECHANDRANS**

கேள்வி பதில் போட்டியில்
கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையை கூறி
குலுக்கல் முறையில் வெற்றிபெறும் போட்டியாளருக்கு


**JEYECHANDRANS TEXTILE**


வழங்கும் பட்டுப்புடைவை ஒன்று
பரிசாக வழங்கப்படும்.

**(1st July- 18th July )**




No. 52, W. A. Silva Mawatha, Wellawatte. Tel: 011 2058308 | Mobile: 0777 410198 | **Hotline: 0777 410184**
48/A, Galle Road, Dehiwala. | 144, Keyzer Street, Colombo 11. | 225, Main Street, Negombo.
Tel: 0112 723029 | Tel: 0112 446982 | Tel: 031 2222024
Visit us on Facebook **www.facebook.com / Gaelsareemandir** Gael Saree Mandir


POTHYS
Specialist in
• Wedding Sarees • Cotton Sarees • Shalwar Kameez
No. 177A, Galle Road, Wellawatte, Colombo 6. | Tel: 0112 559 716


2016
ராசி
பலன்கள்

# ஜூலை மாதத்திற்கான ராசிபலன்

## மேடம்



சென்ற மாதம் பெய்த அடைமழை இந்த மாதமும் தொடர்கிறது, ஸ்வாமி! தொய்வு நிலை மாற்றித் தொழிலை முன்னேற்றுவீர். உய்வு பெறுவீர்கள். உறுதி கொள்வீர்கள். தெய்வம் துணையிருக்கச் செயல் செய்து வெல்வீர்கள். புதிய முயற்சிகளைப் புரட்சிகரமாய்ச் செய்து இதயம் மகிழ்ந்திடவே ஏற்ற பலன் பெறுவீர்கள். எதையும் தாங்கி எதிர்நீச்சல் போட்டு உதயம் காண்பீர்கள். உஷ்ண சம்பந்தமான உடல்கோளாறு ஏதாவது வரவும் வாய்ப்புண்டு. மொத்தத்தில் 65% வரை அனுகூலங்களை அடைய முடியும்.

சாதகமான தேதிகள்: 4, 7, 8, 12, 14, 15, 17, 18, 19, 24, 26. 30.

## ரிஷபம்



ஜூலை மாதம் சுகமான மாதம்தான் என்று செவ்வாயின் சஞ்சாரம் கூறுகிறது. ஆனால். சூரியனின் சஞ்சாரமோ இது பல தொல்லை மிகுந்த மாதமென்று சொல்கிறது. எனவே இரண்டு விதமான பலன்களும் கலந்து ஓர் இரண்டுங்கெட்டான் மாதமாகவே இது அமையும். சற்று அலைந்து திரிய வேண்டியிருக்கும். ஆனால் பட்ட பாட்டிற்கு ஏற்ற பலன் நிச்சயம் உண்டு. சில விஷயங்களுக்காக மன அழுத்தத்துடன் காத்திருக்க வேண்டியிருக்கும். காத்திருப்புக்கு ஏற்ற பலன் கடைசியில்தான் கையில் வரும். உடல்நலத்தில் கவனம் தேவை.ஏறத்தாழ 60% முதல் 65% வரை நன்மைகளை எதிர்பார்க்கலாம்.

சாதகமான தேதிகள்: 3, 7, 10, 12, 14, 17, 18, 20, 24, 25, 29.


## மிதுனம்



அனுகூலமற்ற ஸ்தானத்தில் ஆதவனார் உலவுவதால், கஷ்டங்கள் சிலவற்றால் கலங்கி நிற்கும் நிலை வரலாம். வாக்குவாதங்களால் வம்பு வழக்கு வந்திடலாம். நோக்கம் ஒன்று நிறைவேறாமல் நொந்து நிற்க நேரிடலாம். தலைவலியோ கண்வலியோ தவிக்க வைத்துச் சென்றிடலாம். சுக்கிரனின் சஞ்சாரம் சிறப்பாக அமைந்திருப்பதால் துணிவுடனே செயல்பட்டுத் தொடர்வெற்றி காண்பீர்கள். அணிகலன்கள், ஆடைகள், அலங்காரப் பொருட்கள் வாங்கி அகம் மகிழ்வீர்கள். பணியிலே மேன்மையுண்டு. பாராட்டுக் கிட்டுமென்பேன். 60% வரை அடையலாம் ஆதாயங்களை!

சாதகமான தேதிகள்: 2, 4, 9, 10, 11, 15, 16, 23, 24, 30.

## கடகம்



இந்த ஜூலை மாதத்தைச் சுகமான மாதமென்பேன். கருதியவை பலவற்றைக் கட்டாயம் சாதிப்பீர். சுருதி கூட்டுவீர் உங்கள் சுக வாழ்வுக்கு! தேக்கமின்றி ஆக்கம் பல சேர்ப்பீர்கள். வாழ்வின் நோக்கம் என்ன வென்று தெளிவாகத் தெரிந்து கொண்டு அதை நோக்கி ஊக்கத்துடன் பயணிப்பீர். தேக்கமாகி நின்றவை அனைத்தும் உங்களைத் தேடிவந்து சேருமென்பேன். 75% வரை அடையலாம் அனுகூலங்களை!

சாதகமான தேதிகள்: 1, 2, 8, 9, 13, 18, 20, 22, 30.

## சிம்மம்



கிரகங்கள் பல சாதகமாக உலவுவது மிகச் சிறப்பான அமைப்பாகும். காரியம் பலவற்றில் கட்டாயம் வெற்றி உண்டு. வீரியமாய்ச் செயல்பட்டு விசேஷ லாபம் கண்டிடுவீர். சீரிய முறையினிலே செய் தொழிலை விஸ்தரிப்பீர்! கோரிய உதவி யெல்லாம் குறித்தபடி வந்துவிடும். ஏரிபோல் மகிழ்ச்சி வெள்ளம் இல்லத்தில் நிறைந்திருக்கும். வாரி கொடுப்பீர்கள். வளர்ச்சி பல காண்பீர்கள். 65% முதல் 65%வரை எதிர்பார்க்கலாம் நன்மைகளை!

சாதகமான தேதிகள்: 2, 7, 9, 18, 19, 20, 25, 30.

# ஜூலை மாதத்திற்கான ராசிபலன்

## கன்னி



புதனும் சுக்கிரனும் சாதகமாகச் சஞ்சரிக்கின்றனர். இதனால் தூரப் பிரயாணம் ஏற்படும். நேரப்படி செயல் முடித்து நிம்மதி அடைவீர்கள். காரசார விவாதத்தில் கட்டாயம் வெற்றியுண்டு. பாரத்தை இறக்கி வைத்துப் பாதுகாப்புத் தேட உற்ற துணை ஒருவர் வருவார். நன்மைகள் பல நடந்த போதிலும் இன்னல்கள் சில ஏற்படவே செய்யும். சூரியனின் சஞ்சாரம் சரியில்லை. என்பதால் உடல்நலத்தில் கவனம் தேவை. பெரிய மன அழுத்தம் ஏற்படலாம். கண் வலியோ தலைவியோ கஷ்டப்படுத்திடலாம். 60% வரை மேன்மை வரும் மாதமிது!

சாதகமான தேதிகள்: 2, 7, 16, 18, 22, 23, 25, 30.

## துலாம்

இந்த ஜூலை மாதத்தைத் தூள் பறக்கும் மாதம் என்று சொல்ல முடியாவிட்டாலும், சோடை போன மாதமென்றும் சொல்ல முடியாது. சுக்கிரனின் சஞ்சாரம் நன்றாக இருக்கிறது. ஆதலால் இன்பக் குதூகலம் இதயத்தில் நிரம்பி நிற்கும். துன்பச் சூறாவளியைத் துணிந்து எதிர்க்கத் திராணி வரும். அன்புப் பெண்களால், அருமைச் சிநேகிதரால் ஆனந்த அனுகூலங்கள் அடைவீர்கள். 50% வரை எதிர்பார்க்கலாம், அனுகூலங்களை!

சாதகமான தேதிகள்: 4, 7, 10, 14, 21, 27, 28, 29, 30.



## விருச்சிகம்




ஜூலை மாதமிது சுபீட்சமான மாதமென்பேன். நிலுவையிலே இருந்த பணம் நிறைவாகத் திரும்பி வரும். சிலுவையிலே கிடந்த விஷயங்களும் திரும்ப உயிர் பெறும். வாழ்வின் பளுவைக் குறைத்திடுவீர். தேக வலுவைக் கூட்டிடுவீர். தழுவும் மனையாளின் தக்கதொரு யோசனையால் மிக்கதொரு வரவு வரும். சொர்க்க சுகம் பக்கம் வரும். மொத்தம் 65% வரை மேன்மைகளை எதிர்பார்க்கலாம்.

சாதகமான தேதிகள்: 2, 3, 10, 15, 19, 20, 27, 30, 31.

## தனுசு

சூரியன் சாதகமாக உலவுவதாலும், சுக்கிரனும் ஒத்தாசையாக வலம் வருவதாலும் இந்த ஜூலை மாதத்தை ஆலைக் கரும்பாய் அகத்தில் இனிக்கும் மாதமென்பேன். செயல் வேகம் கொண்டு சிறப்புடனே பணி செய்வீர். புயல்போலச் சுழன்று பொன்னான பலன் பெறுவீர். கயல்போல விழி கொண்ட காரிகையர் நட்புண்டு. வயல்காட்டில் உழைத்தோர்க்கு வளமான வாழ்வுண்டு. அயல் நாட்டுப் பயணமும் அதிர்ஷ்டமுள்ள சிலர்க்கு உண்டென்பேன். குயில் போன்ற மனையாளின் குடும்பத்தார் உதவிடுவர். 55% வரை அடையலாம் நன்மைகளை!

சாதகமான தேதிகள்: 1, 3, 8, 14, 17, 19, 25, 27, 28.



## மகரம்



சுக்கிரனும் புதனும் இந்த மாதத்தில் கைகொடுத்து உதவுகின்றனர். உறவினர்களோடு அளவளாவி அகம் மகிழ்வீர்கள். புனித ஸ்தல யாத்திரைக்குப் போய் வருவீர்கள். தெய்வீக கைங்கரியங்கள் செய்து, தேடிடுவீர் அமைதியினை! மகான் போன்ற ஒருவரைச் சந்தித்து, அவரால் வாழ்க்கை குறித்து புதுத் தெளிவையும் தெம்பையும் அடைவீர்கள். ஏறத்தாழ 65% வரை அடையலாம் நன்மைகளை!

சாதகமான தேதிகள்: 4, 10, 13, 17, 20, 24, 25, 29.

# ஜுலை மாதத்திற்கான ராசிபலன்



## கும்பம்

பகலவனாம் சூரியன் பலம்பெற்றுப் பவனி வருவதால் ஜுலை மாதத்தில் சுகஅனுபவங்கள் சிலவற்றைப் பெற்றிடலாம். சுக்கிரனாரும் சுகமாக உலவுகிறார். ஆதலால் வீடு, வாகனம் சார்ந்த அனுகூலம் பல உண்டு. மாடு கன்றுகளால் மகத்தான லாபம் வரும். தேடும் பொருள் உங்களைத் தேடி வந்து சேரும். கூடும் நண்பர்களால் குதூகலமாய்ப் பொழுது கழியும். நவீன விஞ்ஞான சாதனம் ஒன்றை வாங்கி அகம் மகிழ்வீர்கள். 55% முதல் 60% வரை அடையலாம் சிறப்புகளை.

சாதகமான தேதிகள்: 2, 3, 6, 10, 12, 13, 21, 24, 29.

## மீனம்



சுக்கிரனும் செவ்வாயும் தக்க விதத்தில் தங்கள் பங்களிப்பைச் செய்வதனால், இல்லத்தில் சுபநிகழ்ச்சி இஷ்டம்போல் நடந்தேறும். வெல்லத்து இனிப்பைப்போல் மிக இனிக்கும் தாம்பத்யம்! உள்ளத்தில் உள்ள ஆசையெல்லாம் உடனுக்குடன் நிறைவேறும். அள்ளத்தான் குறையாமல் அதிகமாய் லாபம் வரும். ஆனாலும், தள்ளத்தான் முடியாத சங்கடங்கள் சில உண்டு. கள்ளத்தனம் செய்வோரால் கஷ்டங்கள் சில உண்டு. 70% வரை அடையலாம் அனுகூலங்களை!

சாதகமான தேதிகள்: 1, 5, 7, 9, 12, 20, 25, 27, 29.




| | | | |
|---|---|---|---|
| நட............................ | அதிர்வின்றி | நம்பு.................................. | சரியாக |
| பேசு .......................... | பணிவாக | பழகு .............................. | நாகரிகமாக |
| உண்ணு .......................... | அளவாக | திட்டமிடு .............................. | முன்னதாக |
| சுவாசி.......................... | ஆழமாக | ஈட்டு .............................. | நேர்மையாக |
| தூங்கு .......................... | அமைதியாக | சேமி .............................. | சிறிதாவது |
| உடுத்து .......................... | அழகாக | செலவிடு .............................. | யோசித்து |
| செயல்படு .......................... | அச்சமின்றி | நேசி .............................. | பேதம் கடந்து |
| உழை .......................... | உண்மையாக | படி .............................. | முடிவின்றி |
| சிந்தி.......................... | சுயமாக | மரணி .............................. | பயமின்றி |

Center for Children's Happiness
Learning Center
ADMISSION OPEN
2 ½ - 5 Years A.M.I. Method
No, 55/1/A, W.A. Silva Mawatta, Wellawatte.
Tel: 076-8554678

BECOME A PROFESSIONAL
GRAPHIC DESIGNER
TODAY
Software/Technologies
CorelDRAW Adobe Illustrator Photoshop
COURSE FEE
Rs. 4,000/-
Learn from Graphic Expert
flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel :2364157 Fax : 2501766


சகல விதமான ஆடை
வகைகள், இந்தியன்
கல்யாணப்பட்டுப்
புடைவைகள்,
ஆண்களுக்கான ஆடை
வகைகள்
அனைத்துக்கும்...
Singhams
Textiles (Pvt) Ltd.
No. 353, Galle Road, Colombo 04. | Tel: 2 599397 | Fax: 2 553607
Branch: New Shanmuganantha Textiles (58) 23, Grand Bazaar, Jaffna. | Tel: 021 222 3356




**CONSOLIDATED ACADEMIC LANKA (PRIVATE) LIMITED**

**Email: info@academiclanka.com / ceo@academiclanka.com**
**Website: www.academiclanka.com**

- யோகா



# வாதில் வென்ற வைணவன்

மதுரை பாண்டிய மன்னன் அவையில், "ஆக்கி ஆழ்வான்" என்ற தர்க்க சாஸ்திரி ஒருவன் இருந்தான். இவன், தனது வாக்கு வன்மையால் வாதம் செய்து, இதர புலவர்களையெல்லாம் அடிமை கொண்டு புலவர் தலைவனாக இறுமாப்புடன் வாழ்ந்து வந்தான். பாஷியபட்டர் என்ற வயது முதிர்ந்த ஒரு புலவரை இவன் வாதிற்கழைத்தான். எந்தக் கொள்கையாயினும் அதை ஆதரிப்பதிலும், அழிப்பதிலும் வல்லவன் என்பதை உணர்ந்த அந்த முதியவர் இவனுடன் வாதம் செய்ய விரும்பவில்லை.

இருப்பினும் பட்டர் தனக்கு அடிமை என்று ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நிர்பந்தித்தான்.

பட்டரிடம் கல்வி பயிலும் ஒரு இளம் மாணவன், இதைக் கண்டு பொறுக்காமல், தான் வாதாடுவதாக ஒப்புக் கொண்டான். சிறுவன் தானே, நசுக்கி விடலாம் என்று ஆக்கியாழ்வானும் சம்மதித்தான்.

குறித்த தினத்தில் வாதம் தொடங்கியது. அட்டகாசமாக வந்தமர்ந்த ஆக்கியாழ்வான் சிறுவனை நோக்கி "உலகியலில், எதை நீ உண்டு என்று சொல்கிறாயோ, அதை நாம் இல்லை என்று மறுப்போம். எதை நீ இல்லை என்பாயோ அதை நாம் உண்டு என்று சாதிப்போம், நீயே வாசதத்தைத் தொடங்கு" என கர்ஜித்தான்.

பனிரெண்டே வயது நிரம்பிய 'யாமுனன்' என்ற அந்தச் சிறுவன், தனது முதல் கேள்வியாக, புலவர் தலைவரே. இந்த பாண்டிய மன்னன் ஒரு தர்மிஷ்டன். புண்ணியவான் என்று கூறி இதை மறுக்கச் சொன்னான்.

இப்படி ஒரு கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத புலவன் அதிர்ச்சியுற்றான். அரசவை தலைமைப் புலவன் என்ற பட்டத்தை அளித்த அரசனே தர்மிஷ்டன் இல்லை என்று எப்படி சொல்வது என்று திகைத்தான்.

உரிய நேரம் கழிந்தது. இரண்டாவது கேள்வியாக, புலவரே, இந்த பாண்டியமன்னனின் மனைவியான அரசியார் ஒரு பதிவிரதை என்று கூறி இதையாவது மறுத்துக் கூறுங்கள் என்றான்.

இந்தக் கேள்வி ஒரு பேரிடியாக விழுந்தது. ராணியை கற்பு நெறி தவறியவள் என்று எப்படி சொல்ல முடியும். திடுக்கிட்டான். திணறினான், தான் தோற்றதாக ஒப்புக் கொண்டான். மக்களின் ஆரவாரம் விண்ணை எட்டியது.

ஆக்கியாழ்வானின் அகம்பாவம் அடங்கி தோற்றதில் அரசி மகிழ்ச்சி கொண்டாள். ஆனால் சிறுவனின் கேள்வி அவள் மனத்தை உறுத்தியது.

சிறுவனை அழைத்தாள். தனது மகிழ்ச்சியை தெரிவித்தாள். பிறகு சிறுவனை நோக்கி இதே கேள்விகளை ஆக்கியாழ்வான் உன்னைக் கேட்டிருந்தால் நீ என்ன பதில் கூறியிருப்பாய் என்பதை அறிய விரும்புகிறேன் என்று கூறினாள்.


மஹாராணி, மனுநீதி தர்ம சாஸ்திரப்படி, அரசன் குடிமக்களிடமிருந்து ஆறில் ஒரு பங்கு வரி வசூலித்து குடிமக்கள் தர்ம நெறியுடன் வாழ அரசு புரியவேண்டும். ஆனால் நடைமுறையில் எல்லோரும் தர்ம நெறியுடன் வாழ்கிறார்களா என்பது சந்தேகம். அப்படி முறை தவறி குடிமகன் செயல்படும்போது அவனது பாபத்தின் ஆறில் ஒரு பங்கு அரசனை அடையும். இதனால் அரசனை தர்மவான் என்று சொல்ல இயலாது.

இரண்டாவது கேள்வி பெண்களைப் பற்றியது. ஒரு பெண் பிறக்கும்போது, அதற்கு சந்திரன், கந்தர்வன், அக்னி என்ற மூன்று தேவர்களின் சம்பந்தம் உடையவளாக பிறக்கிறாள். அதாவது சந்திரன் தன்னிடமிருந்து பலத்தையும், கந்தர்வன் அழகையும், அக்னி யௌவனத்தையும் தங்களது சரீரத்திலிருந்து சூஷமமாக கொடுக்கிறார்கள். கன்னிப்பருவம் முடிந்து அவளது விவாஹ சமயத்தில் தாரை வார்த்து தானம் செய்யும்போது இந்த சம்பந்தத்தை சொல்வது வழக்கம். ஆதலால் ஒரு ஸ்திரீயை பதிவிரதை என்று சொல்ல தடையில்லை.

மேலும் சட்டத்திற்குட்பட்டு நடப்பது, நீதி அதில் நியாயம் இருக்காது. மனுநீதி சாஸ்திரம் ஒரு சட்ட நூல். இதை மனதில் கொண்டால், நான் கூறியது தெளிவாக விளங்கும் என்றான்.

அரசியார் சிறுவனின் அறிவாற்றலைப் புகழ்ந்து இந்த நாட்டை ஆளவந்தவரே என்று தழுவிக்கொண்டாள்.

அந்த சிறுவன் தான் வைணவ உலகம் போற்றும் ஆச்சார்யார் 'ஸ்ரீமத் ஆளவந்தார்'.



# ராமருக்கு வந்த கோபம்

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஒரு சாந்தமூர்த்தி. சுலபத்தில் அவருக்குக் கோபம் வருவது இல்லை. ஆனால் அவருக்கும் ஒரு சமயம் கோபம் வந்தது! சேது சமுத்திரத்தைத் தாண்டிச் சென்று ராவணனை வதம் செய்யத் திட்டமிட்ட பொழுது சமுத்திரத்தைத் தாண்ட முடியாமல் கரைக்கு அருகே ராமரும், லஷ்மணரும் மற்றும் வனரப் படைகளும் நின்று கொண்டு இருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் இருந்த விபீஷணன் ஒரு யோசனை சொன்னான்.

"ஸ்ரீராமா! தாங்கள் சமுத்திர ராஜனைப் பிரார்த்தனை செய்தால் அவன் வழிவிடுவான்."

"நானா சமுத்திர ராஜனைப் பிரார்த்தனை செய்வது? யார் யாரைப் பிரார்த்தனை செய்வது?" என்று வினவினார் ஸ்ரீராமர். பிறகு காரியம் ஆக வேண்டும் என்றால், தான் கடவுள் என்ற எண்ணம் எழாமல் மனித அவதாரம் எடுத்திருப்பதை நினைவுகூர்ந்து பிரார்த்தனை செய்யத்தான் வேண்டும் என்று எண்ணினார்.

ஸ்ரீராமர் சேது சமுத்திரக் கரையில் நின்றபடி சமுத்திர ராஜனைப் பிரார்த்தித்தார். பிரார்த்தனை செய்தும் சமுத்திர ராஜன் வரவில்லை! கடல்

அலைகள் பயங்கரமாக எழும்பி ஓசையிட்டுக் கொண்டு இருந்தன.

அப்பொழுதுதான் ஸ்ரீராமருக்கும் கோபம் வந்தது!

“நான் பிரார்த்தனை செய்தும் சமுத்திரராஜன் வரவில்லை. கோதண்டத்தைப் பூட்டி அம்பு எய்து இந்த சமுத்திரத்தையே வற்ற அடித்து விடுகிறேன்” என்று சினத்தோடு கூறியபடி கோதண்டத்தைக் கையில் எடுத்தார்.

அதற்குப் பிறகு சமுத்திர ராஜன் கைகளைக் கூப்பியபடி கடல் அலைக்கு மேலே தோன்றினான்.

“ஸ்ரீராமசந்திர மூர்த்தியே! தங்களுக்குக் கோபம் வராது என்பது பிரசித்தம். கோபம் வந்து அதோடு தங்களைத் தரிசிக்க நான் ஆசைப்பட்டேன். அந்த விபரீத ஆசையினால் தான் சற்றுக் காலதாமதமாக வரநேர்ந்தது. என்னை மன்னிக்க வேண்டும்” என்றான் சமுத்திரராஜன்.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, சாந்தமூர்த்தி ஆனபின் மெல்லப் புன்னகைத்துக் கொண்டே சமுத்திர ராஜன், “தங்களுக்கு வந்த கோபத்திற்கு நடுவே சமுத்திரத்தை வற்ற அடித்து விடுவதாகச் சொன்னீர்கள். அதுமட்டும் உங்களால் முடியாது!” என்றான்.

மறுபடியும் ஸ்ரீராமருக்குக் கோபம் வந்தது!

“என்ன சொன்னாய்? என்னால் முடியாதா? யாரிடம் பேசுகிறாய் நீ?” என்று குறையாத கோபத்தோடு சமுத்திர ராஜனைக் கேட்டார் ஸ்ரீராமர்.

“நிச்சயமாக முடியாது!” என்ற சமுத்திர ராஜன் தொடர்ந்தான். “இந்த சமுத்திரம் புண்ணியம் செய்து இருக்கிறது. சரயு நதி தீரத்தில் தங்கள் தம்பி பரதன் தினசரி தங்களுடைய பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்து அதன் மீது விடுகிற தீர்த்தம் கங்கை, யமுனை நதிகளுடன் கலந்து இதில் வந்து சங்கமமாகிறது. அத்தனை புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள் இந்த சமுத்திரத்தில் சங்கமமாகிப் புனிதம் பெற்று விட்டது. புண்ணிய சமுத்திரமான இதை உங்களால் வற்ற அடிக்க முடியுமா என்ன?”

சமுத்திர ராஜன் சொன்னதைக் கேட்ட ஸ்ரீராமர் சாந்தமூர்த்தியாகி எடுத்த கோதண்டத்தை அம்புறாத் தோணியில் செருகி அமைதி அடைந்தார்.

# பொறுமைக்குக் கிடைத்த வெற்றி!



நாரதர் என்பவர் ஒரு தேவ முனிவர். மனிதர்களிடையில் பெரிய யோகிகளான முனிவர்கள் இருப்பது போன்று, தேவர்களுக்குள்ளேயும் யோகிகள் இருக்கின்றனர். நாரதர் தேவர்களில் மிகப் பெரிய யோகி. அவர் எங்கும் சஞ்சரிப்பது உண்டு. ஒரு நாள் ஒரு காட்டின் ஊடே அவர் செல்லும் போது ஒரு முனிவரைக் கண்டார். வெகு காலம் தியானித்து நகராமல் தவம் செய்து கொண்டு இருந்ததால், அந்த முனிவரின் உடலைச் சுற்றிக் கரையான் எறும்புகள் ஒரு புற்றைக் கட்டி விட்டன. அந்த முனிவர் நாரதரை அழைத்து, ‘எங்கே போகிறீர்?’ என்று கேட்டார். ‘நான் சுவர்க்கத்திற்குச் செல்கிறேன்’ என்று நாரதர் விடையளித்தார். ‘அப்படியானால், ஆண்டவன் எனக்கு அருள் புரிந்து எப்பொழுது முக்தி அளிப்பார். என்று தெரிந்து வரவேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார் அவர்.

நாரதர் சிறிது தூரம் சென்ற பின் மற்றொரு

மனிதனைக்கண்டார். அவன் பாடிக் குதித்து நடனமாடிக் கொண்டு இருந்தான் அவன் நாரதரைக் கண்டு, 'நாரதரே! எங்கு செல்கிறீர்'?

என்று வினவினான். அவனது குரலும் செயலும் அவன் பைத்தியக்காரனே என எண்ணும்படிச் செய்தது. நாரதர், 'நான் சுவர்க்கத்திற்குப் போகிறேன்' என்றார். 'அப்படியானால் எனக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்று கேட்டு வாருங்கள்' என்றான் அவன். நாரதர் சென்றுவிட்டார். சிறிது காலம் சென்ற பின்பு நாரதர் அக்காட்டின் வழியாகத் திரும்பி வந்தார். உடலைச் சுற்றிப் புற்று வளர்ந்திருந்த முனிவர் 'நாரதரே! என்னைப் பற்றி பகவானிடம் கேட்டீரா?' என்றார். 'ஆம்' என்றார் நாரதர். 'பகவான் என்ன சொன்னார்?' என்று கேட்டார் முனிவர். 'நீ இன்னும் நான்கு பிறவிகளுக்குப் பின்பு முக்தி அடைவாய், என்று பகவான் கூறினார்' என்றார் நாரதர். அந்த முனிவர் அழுது, புலம்பி, 'என்னைச் சுற்றிப் புற்று மூடும் வரை பல வருடங்கள் தியானித்தேன் அப்படிச் செய்தும் இன்னும் முக்தி பெற நான்கு பிறவிகள் இருக்கின்றனவே!' என்றார்.

நாரதர் மற்ற மனிதனிடம் சென்றார். 'பகவானிடம் கேட்டீரா, நாரதரே?' என்றான் அவன். 'ஆம், கேட்டேன். அந்தப் புளிய மரத்தைப் பார். அதில் எத்தனை இலைகள் உள்ளனவோ அத்தனை பிறவிகளுக்குப் பின்பு உனக்கு முக்தி கிட்டும்' என்று நாரதர் கூறினார். அந்த மனிதன் மகிழ்ச்சியால், 'இவ்வளவு விரைவாக எனக்கு விடுதலை கிடைக்கப் போகிறதே!' என்று கூறி ஆனந்த நடனம் ஆடினான். அப்பொழுது அசரீரியாக ஒரு வாக்கு கேட்கப்பட்டது.

'மகனே! இப்பொழுதே உனக்கு விடுதலையளிக்கிறேன்' அவனது பொறுமைக்கும் விடாமுயற்சிக்கும் உடனே வெகுமதி கிட்டியது. அதைரியப்படாமல் இன்னும் கணக்கற்றப் பிறவிகளிலும் முக்தி பெறுவதற்கு முயற்சி செய்ய அவன் சித்தமாய் இருந்ததுதான் அதற்குக் காரணம்.

ஆனால் முதலில் கூறப்பட்டவரோ விடுதலை பெற நான்கு பிறவிகள்கூட மிக நீண்ட காலம் என்று கருதினார். எவ்வளவு நாட்கள் வேண்டினும் காத்திருக்கத் தயாராய் இருந்த மனிதனிடம் இருந்தது போன்ற பொறுமையும் விடாமுயற்சியும் பெரும் பேற்றை அளிக்கும்.



# வசதி போய்விட்டால்!


ஒரு எஜமானன், தன் பயணத்துக்காக ஒரு குதிரையையும், தன் சுமைகளைக் கொண்டு செல்ல ஒரு கழுதையையும் வளர்த்தார். குதிரைக்கு நல்ல வகை உணவு தரப்பட்டது. அலங்கார சேணம், கழுத்தைச் சுற்றி வெள்ளியால் ஆன பட்டையால் அலங்கரிக்கப்பட்டது. தினமும் அதை இளவெந்நீரில் குளிப்பாட்டி, வாசனை திரவியங்களை உடலில் தடவியதால் பெருமையுடன் திரிந்தது.

கழுதையோ வெட்ட வெளியில் நிறுத்தப் பட்டது. சாதாரண உணவு தான் தரப்பட்டது. எப்பொதாவது ஒருமுறை தான் ஆற்றிற்கு கொண்டு போய் குளிப்பாட்டுவார்கள்.

இப்படி கஷ்டப்படும் கழுதையை ஏளனமாகப் பார்த்தது குதிரை. "நம் எஜமான் என்னை எப்படி கவனிக்கிறார் பார்த்தாயா?" என பீற்றிக் கொண்டது. ஒருநாள், எஜமானைச் சுமந்து சென்ற குதிரை, ஒரு பள்ளத்தை தாண்டும்போது, அதனுள் தவறி விழுந்து விட்டது. எஜமானுக்கும் குதிரைக்கும் பலத்த காயம். ஆத்திரத்தில், குதிரையை நையப்புடைத்து விட்டார். இந்தக் குதிரை இனி சவாரிக்கு ஆகாது எனக்கருதி கழுதையைப் போல் மூட்டை சுமக்க வைத்து விட்டார்.

இப்போது குதிரை, "உன்னைக் கேலி செய்ததற்கான விளைவை அனுபவிக்கிறேன், கஷ்டப்படுபவர்களின் மனதைப் புண்படுத்துவது பெரிய பாவம் என்பதை உணர்ந்து கொண்டேன். என்னை மன்னித்து விடு" என்றது.

இன்பவாழ்வு நிரந்தரமானதல்ல. நன்றாக இருக்கும் வரை தான் உலகம் வாழ்த்தும். வசதி போய்விட்டால், வசை தான் கிடைக்கும். எனவே, எவ்வளவு பணமிருந்தாலும், அடக்கமாக வாழ கற்றுக் கொள்ளுங்கள்.



# டாக்டர் பண்டித்தின் வழிபாடு

ஒருமுறை தாத்யா ஸாஹேப் நூல்களின் நண்பரான டாக்டர் பண்டித் என்பவர் சீர்டிக்கு பாபாவின் தரிசனத்துக்காக வந்தார். பாபாவை வணங்கியபின் மசூதியில் அவர் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். பாபா, அவரைத் தாதாபட் கேல்கரிடம் செல்லுமாறு பணித்தார். தாதாபட்டிடம் அவர் சென்றார். தாதாபட் அவரை நன்கு வரவேற்றார். தாதாபட் பூஜைக்காகத் தமது வீட்டை விட்டுப் புறப்பட்டார். அவருடன் டாக்டர் பண்டித்தும் சென்றார். தாதாபட் பாபாவை வழிபாடு செய்தார். இதுகாறும் எவரும் பாபாவின் நெற்றிக்குச் சந்தனம் பூசத் துணிந்ததில்லை. மஹால்ஸாபதி மட்டுமே பாபாவின் கழுத்தில் சந்தனம் பூசுவது வழக்கம். ஆனால் எளிய மனதுடைய இவ்வடியவரான டாக்டர் பண்டித் பூஜைப் பொருட்கள் வைத்திருந்த தாதாபட்டின் பாத்திரத்தை எடுத்துப் போய் அதிலிருந்து பிசையப்பட்ட சந்தனத்தை எடுத்து திரிபுண்ட்ரா எனப்பட்ட மூன்று கோடுகளை பாபாவின் நெற்றியில் இட்டார். பாபா, எல்லோருக்கும் வியப்பையளிக்கும் வகையில், ஒரு வார்த்தைகூடக் கூறாமல் அமைதியாய் இருந்தார். அன்றுமாலை தாதாபட் பாபாவிடம், “நெற்றியில் சந்தனம் பூசுவதை நீங்கள் தடுத்துக் கொண்டிருந்தாலும் இப்போது டாக்டர் பண்டித் அங்ஙனம் செய்ததைத் தாங்கள் எப்படி அனுமதித்தீர்கள்?” என்று கேட்டார்.

இதற்கு பாபா, டாக்டர் பண்டித் தம்மை (பாபாவை) அவரது குருவான காகாபுராணிக் என்று அழைக்கப்பட்ட தோபேச்வரைச் சேர்ந்த ரகுநாத் மஹாராஜ் என்று நம்பியிருந்ததாகவும், அவர் குருவுக்கு அவர் செய்து கொண்டிருந்ததைப் போன்றே அவர் தமது நெற்றியிலும் சந்தனம் பூசியதாகவும் தெரிவித்தார். எனவே பாபாவால் தடுக்க இயலவில்லை. டாக்டர் பண்டித்திடம் விசாரித்ததில் பாபாவைத் தனது குரு காகாபுராணிக் என்று கருதிய தாகவும் அதே மாதிரியாகவே அவரை உணர்ந்ததாகவும் கூறினார். எனவே அவர் தனது குருவுக்குச்

செய்வதைப் போன்றே திருபுண்ட்ரத்தை பாபாவின் நெற்றியிலும் இட்டார்.

பக்தர்கள் விரும்பியவாறே தம்மை வழிபட பாபா அவர்களை அனுமதித்தார். எனினும் சில சமயங்களில் அவர் வினோதமான முறையில் நடந்து கொண்டார். சில சமயங்களில் பூஜைத் தட்டைத் தூக்கியெறிந்து சீற்றமே அவதரித்தது போல் நின்றிருப்பார். அப்போது அவரை எவர் அணுக முடியும்? சில சமயங்களில் அவர் பக்தர்களைக் கடிந்தார். சில சமயங்களில் மெழுகைக் காட்டிலும் மென்மையாய் இருந்தார். சாந்தத்துக்கும், மன்னிப்புக்குமான ஓர் உருவாய் இருந்தார். கோபத்தால் அவர் குலுங்குவது போல தோன்றினாலும், அவரது சிவந்த கண்கள் இரண்டும் சுற்றிச்சுற்றி உருண்டாலும் அவர் அந்தரங்கமாக பாசத்தின் தாயாக, தாயன்பு உடையவராக இருந்தார். உடனே தமது அடியவர்களைக் கூப்பிட்டு அவர்களிடம் தாம் ஒருபோதும் கோபமாக இருந்ததே இல்லை எனக்கூறி, தாயார் தங்களது குழந்தைகளை உதைத்தார்களானால், கடலானது ஆறுகளைப் புறக்கணித்ததென்றால் தாமும் அடியவர்களின் நலன்களை அலட்சியம் செய்வேன் எனவும் பகர்ந்தார். தமது பக்தர்களின் அடிமையான அவர் எப்போதும் அவர்களுக்கு ஆதரவாய் இருப்பதையும், அவர்கள் தம்மை அழைக்கும் போதெல்லாம் மறுமொழி கூறி அவர்களின் அன்பைப் பெறுவதற்குமே எப்போதும் அவர் பெரிதும் விரும்பினார்.


## கிடைக்கும் இடங்கள்

**ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்**
359, காலி வீதி, கொழும்பு 04. 0773002238

**கந்தையா அன் கம்பனி**
357, காலி வீதி, கொழும்பு 04. 2590346
(அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் அருகில்)

**ஸ்ரீ மயூராபதி கோவில்**
17A, மயூரா பிளேஸ், கொழும்பு 05. 2500840

**ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஸ்மி திருக்கோவில்**
ரொக்ஸி கார்டன், வெள்ளவத்தை. 2360525

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
100, கோவில் வீதி, கொழும்பு 15. 0771739094

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
காலி வீதி, வெள்ளவத்தை 4515775

**ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் கோயில்**
158, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. 2472567

**ஸ்ரீ முதல்வன் ஸ்டோர்ஸ்**
17/1, மருதனார் மடம் (ஆஞ்சநேயர் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். 0779835705

**CD World Music Centre** 298, காலி வீதி, வெள்ளவத்தை.

**World Communication**
298, காலி வீதி, வெள்ளவத்தை. 25042337

**Joy Glorious**
298 & 298B, காலி வீதி, வெள்ளவத்தை. 0774949961

**Areena** - 116A, காலி வீதி, வெள்ளவத்தை. 2058033

**Windsor Bookshop**
372, காலி வீதி, வெள்ளவத்தை. 2589081

**Amma Food City**
331, செட்டியார் தெரு, கொழும்பு 11. 0777410472

**Ahulakars** - 253, காலி வீதி, வெள்ளவத்தை.

**Jaffna Stores** - 245/11, காலி வீதி, வெள்ளவத்தை.

**Shaji Stores** - 18, W.A. Silva Mawatha, Colombo 06.

**Natwest Browsing Centre** - 87B, Hampden Lane, Col. 06.

**Gowry Book Shop** - 361, மோதர வீதி, கொழும்பு 15. 0725178147

**ஆனந்த பவான்** - 141, ராஜ வீதி, மாத்தளை. 0777806389

**Flex Publications** 4, IBC Road, வெள்ளவத்தை. 0777555026

**Flex அருள் இதழினை விற்பனை செய்யும் விற்பனை விநியோகஸ்தர்களுக்கு மனப்பூர்வமான நன்றிகள்!**

இவ் இதழினை விற்பதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.
**Tel: 0777 614 186**



flex அருள்
ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

**சந்தா செலுத்துங்கள், அருள் இதழ் உங்கள் முகவரிக்கே வந்துவிடும்!**

| காலம் | இலங்கை | அவுஸ்திரேலியா | இலண்டன் |
| --- | --- | --- | --- |
| 6 மாதங்கள் | ரூபா 550/= | இலங்கை ரூபா 2000/= AUSTRALIA DOLLAR AUD 19 | இலங்கை ரூபா 2500/= LONDON GBP £ 13 |
| 1 வருடம் | ரூபா 1100/= | இலங்கை ரூபா 4000/= AUSTRALIA DOLLAR AUD 38 | இலங்கை ரூபா 5000/= LONDON GBP £ 26 |


*More Details:*
P. Vijay - *Director*
**Flex Publications,**
04, IBC Road, Wellawatte,
Colombo 06, Sri Lanka.
**Tel:0094777 555 026**
**Email: flexvijay@sltnet.lk**





திருமதி. ஜெயந்தி கிஷோகரன்
#41, IBC வீதி, கொழும்பு 6.




திரு. K. அருணாசலம்
#81-83, பிரதான வீதி, கொழும்பு 11.




திருமதி. பவானி கேசவன்
#C 26 2/2, சொய்சாபுர, மொறட்டுவ.




செல்வி. M.சிந்தியா
#37 5/2, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை.

## ஜூன் மாத கேள்வி பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

வெற்றி பெற்றவர்களுக்கு FLEX GROUP நிர்வாக இயக்குனர் திரு. P. விஜய் மற்றும் FLEX அருள் ஆசிரியர் திரு.கே.யோகேந்திரன் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது.





திருமதி. சுகந்தினி சுந்தரம்
#304, 2வது ஒழுங்கை, படோவிட்ட, கல்கிசை.



flex அருள் இதழினை

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்



அவுஸ்திரேலியா சிட்னி முருகன் கோயில் மற்றும்
இலண்டன் சிவன் கோயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் அழையுங்கள் : P. Vijay 0094 777 555 026 (Sri Lanka)

## இடைவெளியை நிரப்புங்கள்!

1.குபேரன் 2.சிவாயநம 3.சங்கடஹரசதுர்த்தி 4.பஞ்சாங்கம் 5.பாஞ்சசண்யம்

ஆகஸ்ட் மாதத்திற்கான விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது
Flex Publications
0777 555 026

# இதுவரை வந்த இதழ்கள்!







எம்மை தொடர்புகொள்ள:

**Flex Publications**

04, IBC Road, Wellawatte,
Colombo 06.

வாழ்க்கை என்பது என்னவென்று நாம் புரிந்து கொள்வதற்குள் ஆயுட்காலத்தில் முக்கால் பங்கு ஓடிவிடுகிறது!

# STUDY ABROAD

## STUDY & WORK IN SINGAPORE



**INTAKES: EVERY MONTH**


**Courses Available**

**1) Hospitality Management (6 Month Study & 6 Month Paid Internship)**
2) Business Studies 3) Accounting & Finance 4) Logistics & Supply Management
5) English Courses

** 4 Year Edu Trusted Institutes.*

**Benefits of Studying in Singapore**
* After Visa Payment * Installment Facilities for Course Fee * No Need IELTS * No Interview
* No Need Bank Balance * With O/L can apply * Visa Processing Time 15 to 20 Days
* Internship Period you can earn Rs 80,000/-.to Rs. 100,000/-
* Age Limit Below 35 * Transfer Option to USA, Canada, Australia & New Zealand.

## STUDY & WORK IN USA



**INTAKES: APRIL / JULY / SEPTEMBER**

**Courses Available**
1) Six-Month Diploma in Business Administration
2) International MBA

**Undergraduate & Postgraduate Programs**

**Scholarship Available**

## STUDY & SETTLE IN CANADA



**INTAKES: JANUARY / MAY / SEPTEMBER**

**Post Graduate Diploma in Enterprise IT Management**
**Post Graduate Diploma in Enterprise Linux Administration**
**Business Administration and more...**

* Lower Cost * Apply with A/L * No need IELTS * Installment payment for tuition fee.
* Trusted colleges and University * After visa payment method.

## STUDY & WORK IN UK



**INTAKES: APRIL / MAY / SEPTEMBER**

**Undergraduate Programs / Postgraduate Programs**

* Lower Cost * No need IELTS
* Installment payment for tuition fee.

**Scholarship Available**

## STUDY & WORK IN AUSTRALIA



**INTAKES: MARCH / JULY / NOVEMBER**

**Undergraduate Programs:**
* Bachelor of Business (Accounting) * Bachelor of Business (Management and Finance)

**Postgraduate Programs :**
* Master of Professional Accounting (Standard) * Master of Arts (TESOL) AND MORE

**Scholarship Available**

**Services We Provide** * Career Counseling * Country Selection * Course Selection * Finance Guidance * Travel Assistance * Pre-Departure Guidance * Visa Guidance * Visa Interview * University and College Selection * Online Visa Application

**WE UNDERTAKE**
**ONLINE VISA FORM FILLING:**
USA, CANADA, EUROPE, UK,
INDIA, MALAYSIA,
BANGKOK, PHILIPPINES, AUSTRALIA


flex Institute
*Step Towards a Bright Future*

4, IBC Road, Wellawatte, Colombo 6.
**Hotline: 0777 761346** Tel: 0112 501 766
Email: flexinstitute04@gmail.com
**Web: www.flexinstitute.lk**



ONLINE VISA APPLICATIONS
www.janacomputertech.com
வெள்ளவத்தையில்
சகல நாடுகளுக்குமான
ONLINE VISA APPLICATIONS
VISA கட்டணம் ONLINE மூலம் செலுத்தலாம் (UK, USA, DENMARK, NORWAY).
VISA CONSULTATION, ENTRY CLEARANCE VISA,
APPEAL AND REVIVE ON REFUSAL,
VISA ONLINE APPOINTMENT,
DUAL CITIZENSHIP APPLICATION
SETTLEMENT, AIR TICKETING,
TRANSLATIONS (ENGLISH, TAMIL, SINHALA,
FRENCH, ITALY, DUTCH, ARABIC)
TRAVEL INSURANCE,
VALUATION,
ஆகியன செய்து தரப்படும்
K.V. Mahathevan
Attorney-at-law & Notary Public
Commissioner for Oaths
&
Mrs. Bhavani Mahathevan J.P
Notary Public
Translation of Deaths, Births, Marriage, Certificates and Legal Documents.
JANA COMPUTER TECH
No.385-1/1, Galle Road, Colombo-06
011 23 60 494 | 077 34 80 494
visaonline5@gmail.com



MALOLA
பல் பொருள் அங்காடி
மிகவும் மலிவு விலைகளில்!
இல. 18, ஸ்ரீ ராமநாதன் மாவத்தை, கொழும்பு 13.
(கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் எதிரில்)
நிலையான செல்வம் வளமாக வாழ மாலோலா அன்புடன் அழைக்கின்றது. மங்கள வைபவங்களுக்கு ஏற்ற வகையில் பல பொருட்கள் இதோ உங்கள் முன் !!!
அனைத்து வகையான சுவாமி சிலைகள், வியாபார மற்றும் வீடுகளுக்கேற்ற வாஸ்துப் பொருட்கள், குத்துவிளக்குகள் மற்றும் சமயம் சம்பந்தமான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்!
வாழ்வில் குறையாத செல்வத்திற்கு
வலம்புரிச் சங்குகள்
MALOLA
உடனே வாருங்கள்
வசந்தத்தை காணுங்கள் !!
HOT LINE :
0115 64 89 23

A MUG FOR YOU
FOR YOUR LOVED ONES...
Print Your
Mugs
2Day
0777-555026

FLEX DIGITAL BOARD
STEEL STICKER BOARD
FLEX LIGHT BOX
0777-614-186
SHOP NAME
BOARDS
FIXING
DJ Aquarium
FISH POND & TANK MAINTENANCE
www.flexgraphic.lk
flex GRAPHIC
No. 4, IBC Road, Wellawatte.
Tel: 2 364157, 2 506614
e-mail: flexvijay@sltent.lk



ISKCON

இல. 188, புதுச் செட்டித்தெரு,
கொழும்பு 13ல்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு
அமைக்கப்படும்


# ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்

"பகவான் கிருஷ்ணருக்காக நிர்மாணிக்கப்படும் ஆலயத்திருப்பணியில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் ராஜசுய யாகம் மற்றும் அஷ்வமேத யாகம் செய்த பலன் கிட்டும்" - (வாமன புராணம்)



**உங்கள் நன்கொடைகளின் உதவியுடன் கட்டிட நிர்மாணப்பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.**








**ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய திருப்பணி வேலைகளுக்கு 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.**

மக்கள் தாங்களால் இயன்ற நிதியை பணமாகவோ, காசோலையாகவோ ஆலய அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம். ஆலய திருப்பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கி, ஆலய நிர்மாணப் பணிகள் விரைவில் பூர்த்தியடைய பகவானை வழிபடுவோமாக.

ரூபா. 3,000/- ஒரு செங்கல்லுக்காக செலுத்தி இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள். செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.



**ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமார்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச்செய்யலாம்**

**Hatton National Bank, Kotahena**
**A/C Name : ISKCON**
**A/C No. : 207010000891**

**Commercial Bank, Kotahena**
**A/C Name : ISKCON Temple Fund**
**A/C No. : 1120017042**

ISKCON

## SRI SRI RADHA KRISHNA TEMPLE

**INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS**

*Founder Acharya* His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada

No.188, New Chetty Street,
Colombo 13, Sri Lanka.
Tel : 2433325 Fax : 2471099
Email : iskcon@slt.lk www.iskcon.lk

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

கருணை இல்லமாக
இயங்கும் பக்திவேதாந்த
சிறுவர் இல்லம்

# கோகுலம்



வத்தளை, மாபோல, இல. 607A, நீர்கொழும்பு வீதியில் இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இவர்களுக்கு சிறந்த கல்வியையும், நற்பழக்க வழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. இவர்களின் நல்வாழ்வுக்கான சேவையில் தாங்களும் இணைந்துகொண்டு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி இறைவன் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

**தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூ. 25,000/- செலவாகின்றது.**




தங்களின் அல்லது தங்கள் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்களின் திருமண நாள், உறவினர்களின் ஞாபகார்த்தம் போன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறார்களுக்கு உதவலாம்.


*Help These Children* *For their better Future!*

**BHAKTIVEDANTA CHILDREN'S HOME GOKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala.
Tel - Office : 011 2433325 Home : 011 2948398

# இஸ்கோன் கோசலா பசுக்கள் காப்பகம்



ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் பகவான் கிருஷ்ணா இப்புவியில் அவதரித்து மாடு மேய்க்கும் சிறுவனாகவே வாழ்ந்தார். மனிதர் மீது அன்பு காட்டுவது பசுக்களின் இயல்பு. பகவான் கிருஷ்ணாவும் அவற்றின் மீது அன்பு காட்டி அவற்றை பாதுகாத்தார். அதனை பின்பற்றியே கிருஷ்ண பக்திக் கழகம் உலகின் பல நாடுகளிலும் பசுக்களுக்கான காப்பகங்களை நடத்தி அவற்றை பாதுகாத்து பராமரித்து வருகின்றது.



கிருஷ்ண பக்திக் கழக இலங்கைக் கிளையும் வத்தளை ஹேகித்த இல. 44/88, கிறிஸ்து ராஜ மாவத்தையில் பசுக்கள் காப்பகமொன்றை நடாத்தி வருகின்றது. 1999ஆம் ஆண்டு ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு பசுவுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் காப்பகத்தில தற்போது பசுக்கள் மற்றும் காளைகள், கன்றுகள் என 40 க்கு மேல் உள்ளன.

இச்சேவைகளில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்புகளுக்கு


**சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்**
இல. 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13.
தொ.பேசி : 2433325 ஈ-மெயில் : iskcon@slt.lk
www.iskcon.lk

Founder a charge:
**His Divine Grace**
**A.C. Bhaktivedanta Swami**
**Prabhupada**



**Commercial Bank - Kotahena Branch • A/C Name : ISKCON • A/C No. : 1050669901**

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




Imitation Jewellery for Hire
No.298 & 298B, Galle Road, **Colombo 06**. Tel: 0112 364 643 **Mob: 077 494 9961**
E-mail: joyglorious@gmail.com

Published by Flex Publications. 4, IBC Road, Wellawatte. Tel: 0777 614 186